D
V2B, 31'N96.
N96.2.2
218922

**27-5-1996**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் வெடிகுண்டு வெடிக்கப்பட்டுள்ளது குறித்து | 111-128 |
| (ஆ) வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து | 128-141 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) வினாக்களுக்குத் துறைகள் விரைந்து பதிலனுப்ப வேண்டியது குறித்து | 141 |
| (ஆ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்—கால அட்டவணை | 144-145 |
| 3. அரசினர் தீர்மானங்கள்— | |
| (அ) மதிப்பீட்டுக் குழு - உறுப்பினர்கள் தேர்தல் | 142 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு - உறுப்பினர்கள் தேர்தல் | 142-143 |
| (இ) பொது நிறுவனங்கள் குழு - உறுப்பினர்கள் தேர்தல் | 143 |
| (ஈ) உரிமைக் குழு - உறுப்பினர்கள் தேர்தல் | 144 |

பக்கங்கள்


4. தகவல் கோரல்—

| | |
|---|---|
| பேரவைமுன் வைக்கப்பெற்ற சில ஏடுகள் காலதாமதமாக வைக்கப்பட்டுள்ளது குறித்து | 145-146 |

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்-தொடர்ச்சி— 147-225

| | |
|---|---|
| *திரு. பெ.சு. திருவேங்கடம் | 147-159 |
| *திரு. பி. ஆர். சுந்தரம் | 160-166 |
| *திரு. ஆர். சிவராமன் | 174-178 |
| டாக்டர் அ. செல்லக்குமார் | 178-194 |
| *திரு. ம. சண்முகம் | 196-202 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 202-210 |
| *திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் | 210-215 |
| *திரு. ஜி.கே. மணி | 215-223 |
| திரு. டி. மணி | 223-225 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 226-227



218922


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 14, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2027**

**1996, மே 27, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

காலந்தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்து இருக்க வேண்டியவையுமான பண்புகள் ஆகும்.

[குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. சிறப்புக் கவன ஈர்ப்பு

**(அ) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் வெடிகுண்டு வெடிக்கப்பட்டுள்ளது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் வெடிகுண்டு வெடிக்கப்பட்டுள்ளது குறித்து 56-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் ஐந்து பேர்கள் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அதை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கருதி, அவர்களை ஒவ்வொருவராகப் பேச அழைக்கிறேன். சில நிமிடங்களில் அவர்களுடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் மதுரை மத்திய தொகுதியில் இருப்பதால் மதுரை மத்திய தொகுதி மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தெய்வநாயகம் அவர்களை முதலில் அழைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இருக்கையில் இல்லை. அடுத்து திரு. இரா. தாமரைக்கனி அவர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-5-1996-ஆம் தேதி சிறப்புமிகு மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலில் வெடிகுண்டு வீசி சிற்பங்களையும், கோபுரத்தையும் தகர்க்கவும், உயிர்ச்சேதம் ஏற்படுத்தவும் சிலபேர் முயற்சி செய்துள்ளார்கள். அது முறியடிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு மக்களிடையே இந்த ஆட்சி வந்தவுடன் கோவில்களுக்கு பாதுகாப்பு இல்லையென ஒரு அச்சம் இருந்தது. அந்த அச்சத்தை நிரூபிக்கும் வண்ணம் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வெடிகுண்டு வெடித்து இருக்கிறது. ஆகவே அந்த அச்சத்தைப் போக்குகிற அளவில் கோவில் பாதுகாப்பிற்கு அரசு என்ன உத்திரவாதம் கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். தமிழ்நாட்டில் உள்ள எல்லா கோவில்களிலும் வெடிகுண்டு சோதனைக் கருவிகள் வைக்கப்படுமா? பெண்கள் கோவில்களுக்கே போவதற்கு சமீபத்தில் பயந்து கொண்டிருக்கிறார்கள், இந்த ஆட்சி வந்த பிறகு. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இந்து முஸ்லீம் கலவரம் இந்த வெடிகுண்டு விபத்தினால் மூளக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. இதைத் தடுப்பதற்கு இந்த அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவுகிறது, யாரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டு போடக்கூடாது என்று ஒரு நடிகர் சொன்னார். ஆனால் இப்போது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மட்டுமல்லாமல், தூத்துக்குடியில் குண்டு வீச்சு, கொடியங்குளம் அருகே குண்டு வீச்சு, கயத்தாறு அருகே குண்டு வீச்சு - 3 பேர் சாவு, முக்கூடல் அருகே குண்டு வீச்சு - ஒருவர் சாவு, என்று இப்படி குண்டு வெடிப்புகள் எல்லாம் ஏற்பட்டு இருக்கின்றன. ஆனால் அந்த நடிகர் இதற்கு எந்தவிதமான கருத்துமே சொல்லவில்லை. இந்த குண்டு வீச்சை எல்லாம் தடுப்பதற்கு ஆரம்பத்திலேயே இந்த ஆட்சியில் ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கைது செய்யப்பட்டவர்கள் பாகிஸ்தான் உளவு ஸ்தாபனத்தோடு சம்பந்தப்பட்டு இருக்கிறார்களா என்று கண்டறிவதற்கு சி.பி.ஐ. விசாரணை நடத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். (குறுக்கீடு) இதேமாதிரி சென்னையில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகம், இந்து முன்னணி அலுவலகம் போன்ற அலுவலகங்களில் குண்டு வீச்சு நடந்தது. அதற்கும் இப்போது கைது செய்யப்பட்டவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று அறிய நீங்கள் சி.பி.ஐ .மூலம் விசாரணை நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். மொத்தத்தில் இந்த ஆட்சி வந்த பிறகு தமிழ் நாட்டில் காஷ்மீர், பஞ்சாப் மாதிரி சட்டம்-ஒழுங்கு கெட்டு விடும் நிலை ஏற்படுமோ என்று பொது மக்களிடையே ஒரு அச்சம் ஏற்பட்டுள்ளது. இதைப் போக்குவதற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





*முற்பகல் 9-35*

•**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் என்னைப் பேச விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர், ஒத்திவைப்புத் தீர்மானம் மாதிரி பேசிக்கொண்டிருக்கிறார். இதை நீங்கள் அனுமதித்தால், நாளைக்கு எல்லோரும் இதுபோன்று பேசுகின்ற நிலை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத்தை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றிக் கொடுத்தேன். சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற அடிப்படையில் அந்தச் சம்பவத்தை மட்டும் குறித்துப் பேச வேண்டுமே தவிர, அகில இந்தியாவிலும் இருக்கின்ற வெளி மாநில விவரங்களை எல்லாம் தேவையில்லாமல் இதிலே சேர்க்கக்கூடாது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள். (குறுக்கீடு)

**திரு.கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலும் விபரங்களைப் பெறுவதற்காக வினா தொடுக்கலாமே தவிர இதையே விளக்க உரையாக ஆற்றிக் கொண்டிருப்பது சரியாக வருமா என்று அறிய விரும்புகிறேன்.

•**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பதே அவையின் கவனத்தை - குறிப்பாக அமைச்சரவையின் கவனத்தை ஈர்ப்பதற்காகக் கொண்டு வரப்படுகின்ற ஒன்று. பொதுவாக, கவர்னர் உரை மீதான விவாதத்தின் போது ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஆனால், சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்கின்ற பெயரில் சில பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைக்க, அதற்கு அமைச்சரவர்கள் விளக்கம் அளிக்க வாய்ப்பு தரப்பட்டுள்ளது. எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும், அந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டு, இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன் என்கின்ற அளவோடு நிறுத்தினால்தான், நமது மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சிறப்புக் கவன

[டாக்டர் மு. கருணாநிதி] [1996 மே 27

ஈர்ப்புக்குரிய ஒன்றாகக் கருதப்பட முடியும். இல்லாவிட்டால், ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுவதைப் போல பேசிக்கொண்டிருந்தால், அது வேறு ஒரு விவாதத்திற்கு இடமளிப்பதாக ஆகிவிடும்.

(திரு. இரா. தாமரைக்கனி எழுந்து நின்றார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எழுந்து நின்று கொண்டிருக்கிறேன், நீங்கள் உட்காரவேண்டும். உங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை, சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றிவிட்டேன் என்று அறிவித்துவிட்டுதான் உங்களைப் பேச அழைத்தேன். அது மட்டுமல்லாமல், இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதைப் போல், இந்த வெடிகுண்டு சம்பவத்தைப் பற்றி ஆளுநர் உரையில் நீங்கள் பேசவேண்டியது அனைத்தும் அனுமதிக்கப்படும். ஆகவே, இந்தச் சம்பவம் குறித்து மட்டும்தான் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு. லத்தீப் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலில் நடந்த குண்டு வெடிப்பு நம் அனைவர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. குண்டு வெடிப்பால் ஏற்பட்ட சேதம், பெரிய சேதமா அல்லது சேதம் குறைவாக ஏற்பட்டதா என்பதைவிட, மீனாட்சியம்மன் கோவிலில் குண்டு வெடிப்பு நடந்தது என்பதுதான் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. மீனாட்சி அம்மன் கோவிலிலே இருக்கக்கூடிய ஒரு செங்கல்லுக்குச் சேதம் ஏற்பட்டாலும், அது நம் அனைவர்களுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒன்றுதான். பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய சம்பவங்கள் நாட்டில் நடைபெறுவது, சமுதாய இணக்கத்திற்கு, அமைதிக்கு ஏற்புடையதல்ல. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பல விஷயங்களைக் குறித்து இங்கே பேசினார். மீனாட்சியம்மன் கோயிலுக்கு அல்லது இதர கோயில்களுக்கு, வணக்கத் தலங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதைவிட, புதிதாக ஏற்பட்டு இருக்கக்கூடிய நம்முடைய இந்த அரசுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அவருடைய மையமான நோக்கமாக இருந்தது என்பது நமக்குத் தெரிகிறது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்த ஆட்சிக்கு சிக்கல்களை ஏற்படுத்த வேண்டும், சமயங்களுக்கிடையே விரிசல்களை ஏற்படுத்த வேண்டும் என்று உள்நோக்கத்தோடு இது செய்யப்பட்டிருக்கிறது என்பது நமக்கு



1996 மே 27] [திரு. ம. அப்துல் லத்தீப்]

நன்றாகத் தெரிகிறது. ஆனால், ஒரு கோயிலிலே இப்படி நடந்தால் அதை முஸ்லீம்கள்தான் செய்தார்கள் என்று முடிவுக்கு வருவதும், ஒரு மசூதியில் இப்படி நடந்துவிட்டால் அதை இந்துக்கள்தான் செய்தார்கள் என்று ஒரு முடிவுக்கு வருவதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே நாம் இதை ஒரு குற்றமாகக் கருதி குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிப்பதிலே முனைப்பு காட்டவேண்டுமே தவிர, ஒரு சமுதாயம் செய்தது என்ற முடிவுக்கு நாமாகவே வருவதும், அவர்கள் ஏதோ வெளிநாட்டாரோடு தொடர்பு கொண்டார்கள் என்று பிரச்சாரம் செய்வதும், கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன ஒரு வறட்டு வாதமாகும்.

முற்பகல் 9-40

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இங்கே சிலரைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தச் சம்பவங்கள் எல்லாம் நடந்தபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிதான் இங்கே நடந்து கொண்டிருந்தது. அப்போது ஏன் இவர்கள் சி.பி.ஐ விசாரணைக்கு உத்திரவிடவேண்டும் என்று கோரவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், கோயிலுக்கு ஆபத்து என்று பரவலாக நாட்டிலே ஒரு எண்ணம் இருந்தது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இங்கே குறிப்பிட்டார்கள். இதிலிருந்து, அந்த குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கும், அரசியல் உள்நோக்கத்திற்கும், அந்த உள்நோக்கம் உடையவர்கள் யார் என்பதற்கும் தொடர்பு இருக்கிறது என்று நான் நிச்சயமாக குற்றம் சாட்டுகிறேன். இதை உள்நோக்கத்தோடு ஏன் வேறு யாரோ செய்திருக்கக்கூடாது? யார் வேண்டுமானாலும் ஒரு குற்றத்தைச் செய்யலாம். குற்றம் செய்யப்பட்டால், கோயிலில் நடந்தால், முஸ்லீம் செய்தான், மசூதியில் நடந்தால், இந்து செய்தான் என்றெல்லாம் பேசுவது சமுதாய நல்லிணக்கத்திற்கும், அரசியல் நாணயத்திற்கும் அது ஏற்புடையதல்ல என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்றால், சி.பி.ஐ விசாரணையை வையுங்கள், நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும், குற்றவாளிகளை கண்டுபிடித்தேயாக வேண்டும். அதை யார் செய்தார்கள் என்று அரசு கண்டுபிடித்து, நாட்டுக்கு அறிவிப்பது, இன்று நடைபெறுகிற பிரச்சாரத்தை முறியடிப்பதற்கு, அரசியல் உள்நோக்கங்களை எல்லாம் தவிடுபொடியாக்குவதற்கு, அது தேவை என்ற வகையில், சி.பி.ஐ. விசாரணைதான் வேண்டும் என்றால், அதை நானும் வரவேற்கிறேன்.

அன்றையதினம் நான் கூட சென்று விசாரணை செய்தேன். விசாரணை செய்து, நேற்றையதினம் என்னுடைய கருத்துக்களையும் தெரிவித்துவிட்டு வந்து இருக்கிறேன். இதற்கு ஏதோ உள்நோக்கம் மட்டுமல்ல, திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு சதி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும், சமுதாயத்திலே விரிசல் ஏற்படுத்த வேண்டும், அந்த விரிசல் வாயிலாக சமுதாயத்தில் ஒரு கலகம் ஏற்படுத்த வேண்டும், அந்தக் கலகத்தின் வாயிலாக இந்த ஆட்சிக்கு சோதனைகளை ஏற்படுத்த வேண்டும், சிக்கல்களை ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு இது செய்யப்பட்டு இருக்கிறது. விரிவான பேச்சுக்கு நான் தயாராக இல்லை. நிலைமை எனக்குத் தெரியும். ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் என்ன, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால் என்ன என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், இங்கே ஏற்கெனவே ஒருவருக்கு இந்த வகையிலே பேச அனுமதித்து. அவர் தங்கள் மூலமாக பல கருத்துக்களைப் பதிவு செய்து விட்ட காரணத்தால், நான் பேசுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டவனாக இருக்கிறேன். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, அருள்கூர்ந்து, தயவுசெய்து, இது ஆழமாக புலன் விசாரணை செய்யப்பட வேண்டும். இன்னும் ஒரு விஷயத்தை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். போலீஸ் துறையிலே இன்றைக்கும் பல கருப்பு ஆடுகள் இருக்கின்றன. அவர்கள் மூலமாகத்தான் இது திட்டமிட்டு செய்யப்பட்டு இருக்கிறது. ஒரு அறிக்கை, கைது செய்யப்பட்ட ஒருவரால் வருகிறது, கோர்வையாக எழுதப்பட்டு, அவரிடத்திலே கட்டாயமாக கையெழுத்து வாங்கி, இப்படித்தான் நடந்தது .என்று, யார் ஒருவனும், சாதாரண அறிவு படைத்தவனும் அத்தகைய ஒப்புதல் வாக்குமூலத்தை தரமாட்டான். அப்பேர்ப்பட்ட ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்று, கோர்வையாக, சமுதாயத்தில் இன்றைக்கு சில பேர்கள் விரும்புகின்ற, சில அரசியல் கட்சிகள் விரும்புகின்ற சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு அவர்கள் திட்டமிடுகிறார்களே, அந்தத் திட்டத்திற்கு பக்கபலமாக இருக்கும் வகையில், போலீஸ் துறையினுடைய அறிக்கையும் இருக்கிறது. எனவே, அங்கே இருக்கக்கூடிய, தமிழ்நாட்டினுடைய அந்த மாவட்டத்தினுடைய போலீசின் மீது எங்களுக்குக் கூட நம்பிக்கையில்லை. எனவே நாங்கள் வற்புறுத்துகிறோம், சி.பி.ஐ. விசாரணை மூலமாக இந்தச் சந்தேகங்கள் எல்லாம் தீர்க்கப்படவேண்டும். எனவே, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டு, ஏற்பட்டு இருக்கிற களங்கத்தைத் துடைத்து, மீனாட்சி அம்மன் கோவில் ஏதோ சில



பேருக்குத்தான் முக்கியமானது, புனிதமானது என்று தயவு செய்து யாரும் கருத வேண்டாம். நம்முடைய கலாச்சாரத்தின் சின்னமாக, தமிழர்களுடைய கலாச்சாரத்தின் சின்னமாக விளங்குகிற மீனாட்சி அம்மன் கோயிலுக்கு. அந்தக் கோயிலிலுள்ள ஒரு செங்கல்லுக்கு ஊனம் ஏற்பட்டாலும் அது விசாரணை செய்து, தீர்க்கப்படவேண்டும். எனவே, எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்பது முக்கியமல்ல. குண்டு வெடிப்பு நடந்தது என்பதுதான் முக்கியமானது. அதுவும் ஒரு பிரசித்திபெற்ற ஆலயத்தில் நடந்தது என்பது முக்கியமானது. எனவே, இதுகுறித்து ஆழமாக விசாரணை செய்து, நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், சி.பி.ஐ. விசாரணைக்கு அரசு தயாரா என்றும் நான் அறிய விரும்புகிறேன் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனிக்கு நான் சொன்னது மூத்த உறுப்பினரான மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுக்கும் பொருந்தும். நாட்டிலே நடக்கின்ற குற்றங்களுக்கு குற்றவாளி யார் என்ற தீர்ப்பு அளிப்பது சட்டமன்றத்தின் கடமையல்ல; காவல்துறை இருக்கிறது. காவல்துறை விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு அரசு பதில் சொல்ல வேண்டுமென்றும், குறிப்பாக இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவர்களுக்குத் தெரிந்த தகவல்களைக் கொடுப்பார்கள் என்றும்தான் நான் அனுமதித்தேன். நீங்கள் இப்படி விவரமாகப் பேசவேண்டுமென்றால் ஆளுநர் உரையில் உங்களுக்கு வாய்ப்பு இருக்கும். அந்த நேரத்தில், நீங்கள் பேசலாம். ஆகவே ஒருவர் கைது செய்யப்பட்டு அவரிடம் கட்டாயமாக ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாகச் சொல்வது எல்லாம் இந்த விவாதத்திற்குப் பொருந்தாது என்று நினைவுபடுத்தி, அடுத்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களை அழைக்கின்றேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் நடந்த வெடிகுண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து மிகவும் பதட்டம் ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுக்கால சிறைவாசத்திற்குப் பிறகு, ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய

பெண்கள்தான் இன்றைக்கு விழாக்கோலம் எடுத்து இந்த ஆட்சியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் இந்த ஆட்சிக்கு எப்படியாவது களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும், இந்த ஆட்சிக்கு இடையூறு ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடும் கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே வெடிகுண்டு கலாச்சாரத்தை ஏற்படுத்திய மிச்ச சொச்சங்கள்தான் இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த வெடிகுண்டு சம்பவம். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இருக்கக்கூடிய வருத்தமெல்லாம் இந்த வெடிகுண்டு சம்பவத்தில் பொதுவாக ஒரு நிகழ்ச்சி நடைபெற்றாலே அது ஒரே கண் பார்வையாக இருந்துவிடக் கூடாது. சமயச் சார்பின்மையும், மத நல்லிணக்கமும் சரிவர பேணப்பட வேண்டுமென்றால், இன்றைக்கு நடைபெறுகின்ற அதிகார நிறுவனங்கள், existing established institutions, ஒரு மதச் சார்பு மனப்பான்மையோடு இருப்பதை மாற்றியமைக்க வழி காணவேண்டுமென்பது தான் என்னுடைய வேண்டுகோள். வழிபாட்டுத் தலங்களில் நடைபெறும் வன்முறைகளைக் கண்டறிய மதக் கண்ணாடி கொண்டு மட்டும் காவல் துறை ஆய்வு செய்யக்கூடாது. இன்னும் இப்படிப்பட்ட சிந்தனைகள், உண்மைகளை வெளிக் கொணர தடைக் கற்களாக இருந்து வருகின்றன. ஏனென்றால் சம்பவம் நடந்த 1½ மணி நேரத்தில் முதல் குற்றவாளி என்று சொல்லப்பட்டிருக்கின்ற அவருடைய இல்லத்திற்குக் காவல் துறை சென்றிருக்கிறது. இதுவே ஒரு தவறான முன்னுதாரணமாகச் சென்றுவிடும். எனவே சரியான பார்வை பார்க்க இந்த காவல்துறைக்கு தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி, விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனாட்சியம்மன் ஆலயம் நாட்டு வெடிகுண்டு இரண்டு வைக்கப்பட்டு தகர்க்கப்பட்டு லிங்கம் ஒன்று அங்கே சேதமடைந்த நிகழ்ச்சி தமிழகத்தில் வாழக்கூடிய மக்கள் அத்துணை பேருக்கும் வருத்தத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு நிகழ்ச்சி என்பதில் யாருக்கும் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் இந்த வெடிகுண்டுச் சம்பவத்தை, தாங்கள் ஏற்கெனவே சொன்னது போல், அரசின் கவனத்திற்கு ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்து, நடந்திருக்கிற நிகழ்ச்சிகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்க நிகழ்ச்சிகள், அதை நாம் எப்படி



கட்டுப்படுத்தப்போகிறோம். அரசு இயந்திரம் எப்படி இந்தக் குற்றவாளிகளை எல்லாம் கண்டுபிடித்து தடுத்து நிறுத்துகிற முயற்சியிலே இறங்கப்போகிறது என்பதைத்தான் நாம் இங்கே ஆழமாகச் சிந்திக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னதுபோல், சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால் என்ன, ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் என்ன என்ற அந்த விளக்கத்திற்குள்ளே போய் அதிகமாகப் பேசினால் அவையினுடைய நேரத்தை வீணடித்தது போல் ஆனாலும்கூட, தெரிந்தோ தெரியாமலோ விளக்கமாக இங்கே பேசப்பட்டு விட்டது.

*முற்பகல் 9-50*

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இந்த ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்ட பின்னாலே கோவிலுக்குப் போவதற்கே பெண்கள் எல்லாம் பயப்படுகிறார்கள் என்ற அச்சத்தை இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். கடந்த 5 ஆண்டு காலத்திலே எத்தனையோ ஹீரோ ஹோண்டாக்களில் ஹீரோக்கள் எல்லாம் வந்து பட்டப்பகலில் செயின்களைப் பறித்துப் போய் பல நூறு வழக்குகள் எல்லாம் பதியப்பட்டு ஒரு ஹீரோவைக் கூட கண்டுபிடிக்க முடியாத நிலையையெல்லாம் நாங்கள் பார்த்து இருக்கிறோம். சட்டமன்றத்திலே பலமுறை இங்கே பேசியிருக்கிறேன். அதேபோல சென்னையிலே- மாவட்டத்தினுடைய தலைநகரம் அல்ல, ஒரு மாநிலத்தினுடைய தலைநகரமான சென்னையிலே கூட-- வெடிகுண்டு எல்லாம் வெடிக்கப்பட்டு அலுவலகங்கள் எல்லாம் தகர்க்கப்பட்ட போது, நாங்களெல்லாம் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி போலவே கேட்டோம். அப்போது இருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அன்றைய முதல்வர் அவர்கள் சொன்னார்கள், சி.பி.ஐ.-க்காரர்கள் என்ன தேவலோகத்திலிருந்து வந்த தூதர்களா என்று கேட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னாலே சி.பி.ஐ.-க்காரர்கள் எல்லாம் தேவதூதர்களாக மாறியிருக்கிறார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கே இது எடுத்துக்காட்டு என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே 2 உறுப்பினர்களுக்கும் கருத்து வேறுபாடு என்பது, சொல்கிற விதத்திலேதான் வேறுபாடே ஒழிய, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களும் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறார், மாண்புமிகு உறுப்பினர்

லத்திப் அவர்களும் சி.பி.ஐ.விசாரணை கேட்கிறார். இதிலே என்னுடைய தாழ்மையான கருத்து என்னவென்று சொன்னால், வெடிகுண்டுச் சம்பவம் கோவிலிலே நிகழ்ந்திருக்கிறது. அதுவும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தமிழை வளர்த்து சங்கம் கண்ட அந்த மதுரையிலே ராஜாவாக இருந்து, இன்று முடிசூடா மன்னர், மாண்புமிகு முதல்வர் அவர்களால், நீங்கள் இங்கே ராஜாவாக ஆக்கப்பட்டு, இந்த மாமன்றத்திற்கு சபாநாயகராக வந்து அமர்ந்திருக்கிற உங்களுக்கும், மீனாட்சி அம்மன் கோவிலுக்கும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மதுரை மாநகரத்திலே சாதாரண குடிமகன். எந்தக் காலத்திலும் ராஜாவாக இருந்தது கிடையாது.

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்கள் சாதாரண குடிமகனாக இருந்தாலும் கூட, 233 சட்டமன்ற உறுப்பினர்களுடைய நாயகன், எங்களுடைய நெஞ்சங்களிலே நீங்காத இடம் பெற்று, இன்று சபையை நல்லமுறையிலே நடத்தி, பேச அனுமதித்து - 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடுவோமே' என்று 5 ஆண்டு காலம் கட்டுண்டு கிடந்த நாங்கள், இன்று வீரத்தோடு பேசுவதற்கு அனுமதித்திருக்கிற உங்களை நாங்கள் நாயகன் என்று சொல்வதை விட ராஜா என்று நாங்கள் நிச்சயமாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கே இரண்டு பேர்களைப் பற்றிச் சொல்லுகிறபோது, இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களும் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். கோவிலிலே ஒரு வெடிகுண்டுச் சம்பவம், 2 நாட்டு வெடிகுண்டுகள் வெடித்திருக்கிறது. அருமை நண்பர் தாமரைக்கனி அவர்களும், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களையெல்லாம் இங்கே இழுத்து. இதெல்லாம் கண்ணுக்குத் தெரியவில்லையா என்று சொன்னார்கள். ஒரு ஆட்சி மாற்றம் வந்த பின்னாலே, என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சார்ந்திருக்கிற அந்தக் கட்சியினுடைய செயலாளரே, அவர்களுக்கு ஒரு நல்ல காலத்தை ஒதுக்கி, ஒரு ஹனிமூன் பீரியட் என்று ஒன்றை கொடுக்க வேண்டும், ஆகவே நான் இப்போது அமைதியாக இருக்கிறேன் என்று கூட அவர் தன்னுடைய வாக்குமூலத்தை ஸ்டேட்மென்டாக பேப்பரிலே அறிக்கை வாயிலாகச் சொல்லியிருக்கிறார்கள்........

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசும்போது நீங்கள் குறுக்கிடக்கூடாது. அவர் முடித்த பின்னாலே உங்களுடைய விவரத்தைக் கேட்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேப்பரிலே ஏதோ ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறேன் என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த உடனே சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** I am not yielding. இப்போது காவல் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், கள் என்பது அப்படியே இருக்கிறது. மொந்தை மாற்றப்பட்டிருக்கிறது. புதிய மொந்தை. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, பிளாக் ஷீப், கருப்பு ஆடுகளாக பல பேர் இருக்கிறார்கள் என்பதிலே ஐயமில்லை. அதை ஒப்புக் கொள்கிறேன். இருந்தாலும் ஒரு புலன் விசாரணையை நடத்துகிறபோது, எடுத்த எடுப்பிலேயே இந்து முன்னணியைச் சார்ந்தவர்கள். அவர்கள் தான் செய்திருக்க வேண்டும் என்றும், உடனே தேசிய லீக்கைச் சேர்ந்தவர்கள் அப்படி இருந்திருக்கவே முடியாது, ஒரு சமுதாயத்தையே இது இழிப்பது போல் இருக்கிறது என்றும் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுப்பது தவறு. சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்பதை விட. எங்களுக்கெல்லாம் தமிழகத்தினுடைய பொதுமக்களுடைய சாதாரண பிரதிநிதிகள் என்ற முறையில் நாங்கள் கேட்பது எல்லாம் பாரபட்சம் அற்ற ஒரு புலன் விசாரணையை உடனடியாகத் தொடங்கி - கோவிலுக்கு போவதற்கே பெண்கள் பயப்படுகிறார்கள் என்பது அல்ல, கோவிலுக்கு எல்லாம் பெண்கள் போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க--இப்போது நீங்கள் போலீசை இன்னும் கொஞ்சம் கடுமையாக ஆக்கி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பின்னாலே, இன்னும் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து அவர்கள் அச்சப்படுவதற்கே இடம் இருக்காத ஒரு சூழ்நிலையை உருவாக்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆனால் வெடிகுண்டு சம்பவம் கண்டிக்கக் கூடியது. இந்த நிகழ்ச்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வேண்டும். இன்று கூட ஒரு வெடி குண்டு சம்பவம் நடந்து ஒரு சாராய வியாபாரி இறந்திருக்கிறார் என்ற செய்தி வருகிறது. இப்படி வெடிகுண்டு சம்பவம் எங்கே நடந்தாலும் அது வன்மையாக கண்டிக்கத்தக்க ஒன்று. சட்டம் ஒழுங்கை இது வேறு பக்கம் இழுத்துச் செல்லக்கூடிய ஒன்று என்பதை

நான் முதல்வருடைய கவனத்திற்கு கொண்டு வந்து, உடனடியாக இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஆங்காங்கே வரக்கூடாத அளவுக்கு போலீசில்--பொறுப்புள்ள காவல்துறை சில கால கட்டங்களில் பொறுப்பற்று தடம் புரண்டு போயிருந்தாலும் கூட, ஒரு ஆட்சி மாற்றத்தை உருவாக்கிய மக்கள், மக்கள் அளித்திருக்கிற வாக்கே, அந்த மக்களுக்கு ஒரு பெரிய மாற்றம் வேண்டும் என்ற காரணத்தினால் கொடுக்கப்பட்ட வாக்கு. இந்த வாக்கிற்கிணங்க-- நீங்கள் ஒரு மாற்றத்தை காவல் துறையிலும் கொண்டு வந்து இதுபோன்ற நிகழ்வுகள் இனிமேல் நடக்காது என்கிற உத்திரவாதத்தை நிச்சயமாக அளிக்கின்ற வகையிலே உங்களுடைய ஆட்சி அமைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இங்கே சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று இரண்டு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த தேவதூதர்களாக இந்த சாதாரண காவல்துறையைச் சார்ந்தவர்கள் இருந்தாலும்கூட அவர்கள் கேட்ட வண்ணமே சி.பி.ஐ. விசாரணைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்திரவிடவேண்டும். அதற்குமேல் சந்தேகம் இருந்தால் நீதிவிசாரணைக்கும் உத்திரவிட்டு இதிலே யார் உண்மையான குற்றவாளி என்று கண்டுபிடித்து கடுமையாக தண்டனை பெறுவதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து அமைகிறேன்.

*முற்பகல் 9-55*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.*

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே நடைபெற்ற குண்டு வெடிப்பு நிகழ்வு குறித்து அதிகாரிகள் மூலமாக நான் பெற்றுள்ள குறிப்பை முதலில் இந்த அவையின் முன் வைத்துவிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கான விளக்கத்தை பிறகு கூறலாம் என்ற நிலையில் முதலில் அந்த அறிக்கையினை படிக்க விரும்புகிறேன்.

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் சந்நிதியில் இரண்டாவது பிரகாரத்தில் கிரகக் கதவுகள் உள்ள பதினோரு அறைகளில் ஏகதச சிவலிங்கங்கள் உள்ளன. அந்த சிவலிங்கங்களுக்கு பூஜைகள் எதுவும் நடைபெறுவதில்லை. பொதுவாக இரண்டாம் பிரகாரத்தில் பொதுமக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகவே இருக்கும். திருக்கோயில்



காலை 4 மணி முதல் பிற்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் வழிபாட்டுக்காக திறந்திருக்கும். பாதுகாப்புக்காக தனி காவல் அலுவலர்களும் திருக்கோயில் பாதுகாப்பு அலுவலர்களும் பணியில் அமர்த்தப்பட்டு உள்ளார்கள். 18-5-1996 ஆம் நாள் மேற்படி 16 அலுவலர்கள் மேலரதவீதி, அம்மன் சந்நிதி, ராஜ கோபுரம், சாமி சந்நிதி, தெற்கு ஆடி பொற்றாமரைக்குளம், வடக்கு ஆடி கருவூலம், அஷ்டாதி மண்டபம் ஆகிய இடங்களில் பணியில் இருந்தார்கள். அன்று இரவு சுமார் 7.25 மணிக்கு சாமி சந்நிதி மேற்புற இரண்டாவது பிரகாரத்தில் வெடிகுண்டு வெடிக்கும் சத்தம் கேட்டு கோயில் ஊழியர்களும் பாதுகாப்பு அலுவலில் இருந்த மதுரை மீனாட்சியம்மன் ஆலய காவல் நிலையத்தின் சார்பு ஆய்வாளரும் விரைந்து சென்றார்கள். மேற்படி சந்நிதியிலிருந்து வெடி மருந்து வாசனையும், புகையும் வந்துள்ளன. கிரில் கதவு பூட்டியபடி காணப்பட்டது. மின்சார பல்பு ஒன்று உடைந்து காணப்பட்டது. சிவலிங்கம் இருந்த சந்நிதியின் சுவரில் குண்டு வெடித்ததில் சிதறிய இரும்புத் துகள்கள் ஏற்படுத்திய சிறுசிறு சேதங்கள் காணப்பட்டன. சிவலிங்கத்திற்கு எந்தவிதமான சேதமும் இல்லை. சந்நிதியின் முன்னறையின் கதவோரமும் இரண்டாவது அறையில் சிவலிங்கத்தின் முன்பும் தரையில் குண்டு வெடித்ததற்கான அடையாளமாக சிறு சிறு பள்ளங்கள் இருந்தன. உடனடியாக கிடைத்த தகவலின்பேரில் காவல்துறை உயர் அதிகாரிகளும் மாவட்ட ஆட்சியரும் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டார்கள். வெடிபொருள் சட்டம் பிரிவு 3-ன் கீழ் மதுரை மீனாட்சியம்மன் கோவில் காவல் நிலைய குற்ற எண் 262/96-ல் இச்சம்பவம் தொடர்பாக 18-5-1996 அன்று இரவு 8-30 மணிக்கு சார்பு ஆய்வாளர் ஒரு வழக்கைப் பதிவு செய்தார். கைரேகை நிபுணர் மற்றும் நடமாடும் ஆராய்ச்சிக்கூட அதிகாரி ஆகியோரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டார்கள். சம்பவம் நடந்த இடத்தில் சிதறிக் கிடந்த இரும்புத் துண்டுகளும் வெடிபொருள் வாசனை உள்ள நொறுங்கிய கற்களும் வெடிகுண்டை மறைத்துக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்பட்ட சிதறிய காகிதத்துண்டுகளும், எரிந்த மற்றும் எரியாத தீக்குச்சியும் கைப்பற்றப்பட்டன. சம்பவத்திற்கு நேரடியான சாட்சிகள் யாரும் இல்லை. கோயில் வளாகத்தில் இருந்த சிவலிங்கத்திற்கோ, பொதுமக்களுக்கோ சேதமோ அல்லது காயமோ இல்லை. புலன் விசாரணை நடத்த தனிக்குழு ஒன்று காவல் உதவி ஆணையாளர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. புலன் விசாரணையில் வெடித்த வெடிகுண்டுகள் இரும்புக்குழாய் ரக வெடிகுண்டு என்றும் ஜெல்லட்டின்

என்ற வெடி பொருளை கருமருந்து திரி மற்றும் டெட்டனேட்டர் மூலம் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிய வந்துள்ளது. வழக்கு விசாரணையில் 21-5-1996 அன்று மதுரையைச் சேர்ந்த அலி என்பவருடைய மகன் சினி நயினா முகமது என்பவர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தின்படி 2 பைப் குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர் 1994 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்து முன்னணி மாநில செயலாளராக இருந்த ராஜகோபால் என்பவர் கொலையுண்ட வழக்கில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளி வந்தவர்.

*முற்பகல் 10-00*

மேலும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான மதுரை நரிமேடு காதர் பாட்சா என்பவர் மகன் காஜா உசேன் மற்றும் மதுரை நெல்பேட்டை சிக்கந்தர் என்பவரின் மகன் சேட் என்கின்ற சேக் அப்துல்லா ஆகிய இருவரையும் 23-5-1996 அன்று கைது செய்து 24-5-1996 அன்று மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். வெடிகுண்டு சம்பவம் நடந்தவுடன் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களும், காவல் துறை-டி.ஜி.பி.-தலைவர் அவர்களும் அங்கே சென்று இடத்தைப் பார்வையிட்டுள்ளார்கள். தற்போது மதுரை கோவிலில் எந்தவிதமான அச்சமும் இன்றி மக்கள் வந்து செல்கிறார்கள். போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எந்தவிதமான பதட்டமோ, பீதியோ இன்றி அமைதியான சூழ்நிலை அங்கே நிலவுகிறது. இது பெறப்பட்டுள்ள அறிக்கை. இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களைப் பற்றி நான் சில விளக்கங்களை அளிக்க விரும்புகின்றேன்.

கடந்த காலத்தில் தலைநகரத்தில் சேத்துப்பட்டில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வெடித்து 11 பேர் பலியானார்கள். சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் இந்து முன்னணி அலுவலகத்தில் குண்டு வெடித்து இந்து முன்னணியினுடைய மாவட்ட செயலாளரே பலியானார். மயிலாடுதுறையில் பி.ஜே.பி. தலைவருக்கு பார்சலில் ஒரு வெடி குண்டு வந்ததாக கடந்த கால ஆட்சியில் செய்தி வந்தது. நாகூரில் பார்சல் குண்டு வெடித்து இந்து முன்னணி பிரமுகருடைய துணைவியார் மரணம் அடைந்தார். திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் இல்லத்து முகப்பில் குண்டு வெடித்தது. சேலம் மாவட்டம் வாழப்பாடியில் வெடி குண்டு வெடித்ததில் 8 பேர் பலியானார்கள். இவைகள் எல்லாம் கடந்த



காலத்தில் நடைபெற்றவை. கொரட்டூரில் கோஷ்டி சண்டையிலே வெடிகுண்டு கையாளப்பட்டது. அரியாங்குப்பம் அருகே காவல் நிலையத்தின் மீதே வெடிகுண்டு வீசப்பட்டது. இவைகள் எல்லாம் கடந்த கால நிகழ்வுகள்,

நான் கடந்த கால நிகழ்வுகள் முன் மாதிரியாக இருந்தது, இந்தக் காலத்திலும் இவைகள் தொடரவேண்டும் என்று விரும்புகிறவன் அல்ல. இந்த அவையில் உள்ள யாரும் அப்படி நிச்சயமாக விரும்பமாட்டீர்கள் என்று எனக்கு மிக நன்றாகத் தெரியும். அதிகாரிகள் தந்துள்ள இந்த அறிக்கையிலுள்ள அத்தனையும் உண்மை என்று நான் நம்பி இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்ல மாட்டேன். இந்த அவை இருப்பதே எடுத்து வைக்கப்படுகின்ற கருத்துக்களில் உங்களுக்குள்ள மன வேறுபாடுகளை, கருத்து வேறுபாடுகளை எடுத்துச் சொல்வதற்காகத்தான். எனவேதான் இன்னும் உண்மையை அறிந்துகொள்ள சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்றும், நீதி விசாரணை தேவை என்றும் மாண்புமிகு உறுப்பினர்களால் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன எடுத்துச் சொன்னாலும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஏதோ இந்த ஆட்சி வந்தால் கோவிலுக்கு எல்லாம் ஆபத்து என்று முன்பே எச்சரிக்கப்பட்டது போலவும் அது இப்போது உண்மையாகி விட்டதைப் போலவும், ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார். அது அவர்கள் நடத்திய பிரச்சாரம். அந்தப் பிரச்சாரம் மக்கள் இடத்திலே எடுபட்டதா, இல்லையா என்பது இந்த அவையைப் பார்த்தாலே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே நான் அதற்கு வேறு எந்த பதிலும் சொல்ல விரும்பவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அதனுடைய தலைவனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எனக்கு, கோவில்களைப் பற்றி உள்ள கொள்கை என்ன என்பதை இன்று அல்ல, ஏறத்தாழ ஒரு 40, 50, ஆண்டுகளுக்கு முன்பே பராசக்தி படத்தில் விளக்கியிருக்கிறேன். கோவில்கள் கூடாது என்பது அல்ல, கோவில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கொள்கை என்று விளக்கியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே கோவில்களுக்கு எந்த ஆபத்தும் இந்த ஆட்சியினால் வராது எனபதற்கு கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியே சான்று பகன்று கொண்டிருக்கிறது. திருவாரூரில் ஓடாமல் கிடந்த திருவாரூர் தேரை, 20 ஆண்டு காலம் ஓடாமல் இருந்த தேரை, 1967 ஆம் ஆண்டு கழக ஆட்சி வந்த பிறகு தான் அதிலும் குறிப்பாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகுதான் ஓட வைத்த நிகழ்ச்சி

நடைபெற்றது. பல ஆலயங்களுக்குக் குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன. பல ஆலயங்களுக்குத் திருப்பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே அவைத்தலைவராக அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களுடைய தந்தையார் அவர்களே இந்தத் திருப்பணிகள் செய்வதில் எவ்வளவு ஆர்வம் படைத்தவர் என்பதும், அதற்கு மதுரை மீனாட்சியம்மன் ஆலயமே சான்று பகன்று கொண்டிருப்பதும் இந்த நாட்டிலே உள்ள அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

முற்பகல் 10–05

வேண்டுமென்றே, ஒரு வெடிகுண்டு நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தலாம் என்று வெடிகுண்டு வீசியவர்கள் கருதியதைவிட அதைப்பற்றிப் பேசுகின்றவர்கள் கருதுவது நல்லதல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இதில் திட்டமிட்ட சதி இருப்பதாக என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் அப்துல் லத்திப் அவர்கள் இங்கே எடுத்துக்கூறி, எனவே இதற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று குறிப்பிட்டார். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சி.பி.ஐ. வைத்தாலும் சரி, நீதி விசாரணை வைத்தாலும் சரி, இரண்டில் ஒன்றை, அல்லது போதுமான தடுப்பு நடவடிக்கைகள் எடுங்கள் என்று அவர் கேட்டுக்கொண்டார். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் தன்னுடைய கருத்தை இங்கே வலியுறுத்தி, இனி இதுபோன்ற காரியங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்று எடுத்துக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதுபோன்ற காரியங்கள் நடைபெறாது என்று நான் திட்டவட்டமாக, நிச்சயமாகக் கூற முடியாது. ஏனென்றால், இந்தக் கலாச்சாரம் இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் பல ஆண்டுக்காலத்திற்கு முன்பே பரவிவிட்ட ஒன்றாகும். உலக உத்தமர் காந்தியடிகளையே சுட்டுக் கொன்ற பெருமையிழந்த நாடு இந்த நாடு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அன்னை இந்திராகாந்தியே அவருடைய பாதுகாப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்கின்ற சிறுமைக்கு ஆளான நாடு இந்த நாடு. இந்தியாவினுடைய இளந்தலைவர் ராஜீவ் காந்தி அவர்களையே சுட்டுக் கொன்ற நாடு, பிணமாக்கிய நாடு, பரிதாபத்துக்குரிய இந்த நாடு என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.



ஒரு நடிகர் வெடிகுண்டு கலாச்சாரத்தைப் பற்றிப் பேசினார், இப்பொழுது அவர் எங்கே போனார் என்றெல்லாம் தாமரைக்கனி அவர்கள் விலாசத்தை விசாரித்துக் கொண்டிருந்தார். அவர் நடிகர் என்று குறிப்பிட்டாலும்கூட அவர் யார் என்பதை ஞானசேகரன் அவர்கள் குறிப்பிடுகையில் விளக்கினார், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களைப்பற்றி.

அவர் அரசியலிலே முழுமையாக ஈடுபடாவிட்டாலும்கூட, சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற அளவிற்கு நம்முடைய தாமரைக்கனி அவர்கள் அவருக்கு ஒரு சிறப்பு அளித்தமைக்காக நான் நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் சார்பிலே நன்றி கூறிக்கொள்ளத்தான் வேண்டும்.

அவர் என்ன பேசினார்? இயக்குநர் மணிரத்தினம் வீட்டில் ஒரு குண்டு வெடித்தது. அந்தக் குண்டு வெடித்ததைச் சோதனை செய்ய வந்த போலீஸ்காரர்கள் மிரட்டப்பட்டார்கள் என்றார். யாரால்? ஆட்சியாளர்களால், உன்னை யார் அங்கே போகச் சொன்னது, உன்னை யார் அதைப்பற்றி ஆராயச் செய்யச் சொன்னது என்று மிரட்டப்பட்டார்களாம். இன்று அப்படி அல்ல. ஒரு நடவடிக்கை நடந்தால் அதைப்பற்றி விசாரிக்கச் செல்கின்ற போலீஸ்காரர்கள் சுதந்திரமாகச் செயல்பட விடுகின்ற ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அன்றைக்கு மணிரத்தினம் வீட்டிலே குண்டு வெடித்தபோது அதைப்பற்றி விசாரிக்கச் சென்றவர்கள், அதைத் தொடர்ந்து மணிரத்தினத்தினுடைய இல்லத்திற்குப் பாதுகாப்பு அளித்தவர்களெல்லாம் அன்றைக்கு தண்டிக்கப்பட்டார்கள்.

எனவேதான் ரஜினிகாந்த் அவர்கள், அவர் பேசிய ஒரு விழாவில், மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களையும் வைத்துக் கொண்டு பேசிய விழாவில், தமிழ்நாட்டில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவி வருகிறது. அது தடுக்கப்பட வேண்டுமென்றுதான் சொன்னார். அதற்கு எவ்வளவு பெரிய தண்டனை ! யாருக்கு? ஆர்.எம். வீரப்பனுக்கு. அவர் பேசியதை அமைச்சர் கேட்டுக் கொண்டிருந்தார் என்பதற்காக அவருடைய அமைச்சர் பதவியே போய்விட்டது. இப்பொழுது தாமரைக்கனி பேசியதை இவ்வளவு அமைச்சர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக ஒரு அமைச்சருடைய பதவியும் போய் விடவில்லை; போய்விடாது.

எனவே நிகழ்ச்சிகள், அந்த நிகழ்ச்சிகள் தடுக்கப்பட்டனவா அல்லவா என்பதைவிட அந்த நிகழ்ச்சிகளுக்குரிய நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டனவா அல்லவா என்பதுதான் மிக முக்கியமான பிரச்சினை. அது மாத்திரமல்ல; அது தடுக்கப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக ஊக்கப்படுத்தப்படுகின்ற அளவிற்கும், உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல், அகப்படாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற அளவிற்கும் ஆட்சியாளர்களே துணை போவதுமான நிலை இந்த ஆட்சியில் நிச்சயமாக இருக்காது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய லத்திப் அவர்களும், தாமரைக்கனி அவர்களும், நம்முடைய ஞானசேகரன் அவர்களும், கிருஷ்ணசாமி அவர்களும் எடுத்துக் காட்டியதைப்போல யாரோ குற்றம் செய்யப் போய் யாரோ சிக்கிக் கொள்கிற நிலைமை இல்லாமல் இதற்கு நிச்சயம் ஒரு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கருதுவீர்களேயானால் நான் உடனடியாக, ஆம், வைக்கிறேன் என்று உறுதி அளிக்க முடியாவிட்டாலும் அதைப்பற்றி தக்க பரிசீலனை செய்து, தேவை என்றால் அதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று கூறி அமைகின்றேன். வணக்கம்.

*முற்பகல் 10-10*

## (ஆ) வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதால் ஏராளமான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து விவாதிக்க வேண்டுமென்று அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள் திரு ஆர். காந்தி, திரு. ம. அப்துல் லத்திப், திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு உறுப்பினர் காந்தி அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே ஒரு தீ விபத்து ஏற்பட்டதால் அங்கே அவசரமாகப் போய்விட்டார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்களை அழைக்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்திப்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பொருளாதாரத்தை மிக ஆழமாக பாதிக்கக்கூடிய ஒரு முக்கியமானப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். குறிப்பாக வடாற்காடு



மாவட்டத்தைச் சார்ந்த 3 உறுப்பினர்கள் இந்த கவனஈர்ப்பு தீர்மானத்தை கொடுத்திருக்கிறார்கள். காரணம் வடாற்காடு மாவட்டம்தான் தோல் தொழிற்சாலைகள் திடீரென்று மூடப்பட்டதினால் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்ததோடு மட்டுமல்லாமல் பட்டினி பசியோடு கண்டவர்களையெல்லாம் தொழிற்சாலைகள் திறக்கப்படுமா என்று கேட்டு ஏக்கப்பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் எங்களுடைய மாவட்டத்திற்கு தேர்தல் பிரச்சாரத்தின்போது வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயே பலபேர் முறையிட்டு மனுக்களை சமர்ப்பித்ததன் வாயிலாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுமாயின் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனறும், அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், விவசாயிகளாக இருந்தாலும், பொது மக்களாக இருந்தாலும் அல்லது இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றவர்களாக இருந்தாலும் அவர்களுடைய துயரைத் துடைப்பதற்கு முத்தரப்பு மாநாடு ஒன்றை நடத்தி இதற்கு விரைவான தீர்வைக் காண்போம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து வாக்குறுதி தந்தார்கள். என்னுடைய மாவட்ட மக்கள் அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுகுறித்து முதல்வர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பதில் இன்றைக்கும் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில், தோல் தொழிற் சாலைகள் மூடப்பட்ட பிரச்சினையில் உச்சநீதிமன்றமும் தொடர்பு கொண்டிருப்பதனால், நான் விரிவாக பேசுவது ஏற்புடையதல்ல. இருந்தாலும் இதனுடைய விளைவு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் இதிலே அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உண்ணுவதற்கு உணவு இல்லாமல் அங்கே ஒரு சமுதாயக் கொந்தளிப்பே ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாண்புமிகு முலமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அதோடு,, இது வெளிநாட்டு செலாவணிகளை அதிகமாக ஈட்டித் தருகின்ற ஒரு தொழில் துறையாகும். எனவே, இன்றைக்கு இந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதனால் நாட்டுக்குத் தேவையான வெளிநாட்டு செலாவணிகளை நாம் பெருமளவுக்கு இன்றைக்கு இழக்கக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அதோடு நம்முடைய மாநில அரசுக்குக் கிடைக்கக்கூடிய வரிகள், விற்பனை வரியாக இருந்தாலும், கலால்

வரியாக இருந்தாலும், இவை எல்லாம்கூட பெருமளவுக்கு குறையக்கூடிய அபாயம் இன்றைக்கு நம்மை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இதைவிடப் பெரும் அபாயம், இந்தத் தொழிற்சாலைகளில் இன்றைக்கு சிலர் இங்கே இருக்கின்ற தொழிற்சாலைகளை மூடிவிட்டு, அண்டை மாநிலங்களுக்கே சென்றுவிட்டார்கள். இன்னும் இருக்கக்கூடியவர்கள் இந்தத் தொழிற்சாலைகளை மூடிவிட்டு அண்டை மாநிலங்களுக்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவேதான், இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுப்பார்கள், தீர்வு காண்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதை இந்த அவை மூலமாக அவர்கள் உறுதி செய்தால், வெளியே இருக்கக்கூடிய பாதிக்கப்பட்ட மக்களுக்கு அது பெருமளவுக்கு ஒரு பரிகாரமாக இருக்கும் என்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையை நான் இந்தச் சபை மூலமாக ஈர்த்து, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு, என்ன நடவடிக்கை அரசு எடுக்க இருக்கிறது என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான தோல் தொழிற்சாலைகள் உச்சநீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க மூடப்பட்டிருக்கின்றன. உச்சநீதிமன்றம் ஏன் அந்த ஆணையைப் பிறப்பித்தது என்பதையும் நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏற்கெனவே நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த அரசினுடைய கொள்கையை ஆளுநர் உரையிலே 17-வது பாராவில் சொல்லும்போது சுற்றுப்புற சூழ்நிலையை நாங்கள் காத்து அதேபோல் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கிற காரணத்தால் வேலையிழந்து பரிதவிக்கிற இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய நிலையையும் நாம் கருத்தில் கொண்டு இதற்கு ஒரு நல்ல முடிவை எடுப்போம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல எங்களுடைய



மாவட்டத்திற்கு ஓட்டு வேட்டைக்காக வருகிறபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆம்பூர் கூட்டத்திலும், பேரணாம்பட்டு கூட்டத்திலும், அப்போது அங்கே வேலையிழந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் எல்லாம் மனு கொடுத்தபோது அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட்டு டேனரிகளைத் திறப்பதற்கான முயற்சிகளை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எடுப்போம் என்று அவர்கள் சொன்ன வார்த்தையே அங்கே கூடியிருந்த வேலையற்ற மக்களுடைய நெஞ்சங்களிலே எல்லாம் ஈரத்தை உருவாக்கித் தந்தது.

'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில், ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடினான் பாரதி. எங்களுடைய மாவட்டத்தில் இன்று இருக்கிற இலட்சக்கணக்கான--அருமை நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சொல்கிறபோது ஆயிரக்கணக்கில் என்று சொன்னார்கள். பேரணாம்பட்டைச் சுற்றியே ஆயிரம் வந்துவிடும். பிறகு இராணிப்பேட்டை, மேல்விஷாரம், வேலூர், உம்ராபாத், வாணியம்பாடி என்று பல இடங்களில், அதாவது, என்னுடைய மாவட்டத்தில் பாலாற்றை ஒட்டியிருக்கின்ற எல்லா இடங்களிலும் டேனரிகள் இருக்கின்ற காரணத்தால் இன்று நிலத்தடி நீர் அதாவது 200 அடி ஆழம் வரை கூட மாசு பட்டு, குடிநீர் கிடைப்பதேகூட எங்களுக்குச் சிக்கலாகி இருக்கிறது. ஒரு கட்டுரையிலே கூடப் படித்தேன். இதுபோன்ற மாசு படிந்த தண்ணீரைக் குடித்தால் ஆண்கள் ஆண்மை இழக்கக்கூடிய நிலைமைகூட உருவாகின்றது என்று பத்திரிகையில் நாங்கள் பார்த்து நிச்சயமாக பயந்துவிட்டோம். இப்போதல்ல, காரணம், ஆண்மை இருக்கிறது என்று நிரூபித்துவிட்டவர்கள் இன்று அவையிலே இருக்கிற காரணத்தால் இனி வரக்கூடிய சந்ததியினரைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 200 அடி ஆழத்தில்கூட நிலத்தடி நீர் கெட்டுப் போய் மாசு பட்டிருக்கிறது. எனவே சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்க டேனரி உரிமையாளர்களிடமிருந்து அதற்கான ஒரு பங்கு, மத்திய அரசு ஒரு பங்கு, மாநில அரசு ஒரு பங்கு இப்படி மூன்று பேரும் இணைந்து சுத்திகரிப்பு ஆலைகளை முழுமையாக ஏற்படுத்த வேண்டும். உச்சநீதிமன்றமே, இந்த சுத்திகரிப்பு ஆலைகள் இல்லாத காரணத்தால்தான் அப்படிப்பட்ட ஒரு ஆணையை உருவாக்கித் தந்தது. எனவே, இலட்சக்கணக்கான மக்கள் வேலையிழந்து இருக்கிற காரணத்தால் வேறு ஏதாவது நாம் செய்துவிட்டால்கூட அது 'கன்டெம்ப்ட் ஆஃப் கோர்ட்' என்பதில் வந்துவிடும். அதையும் இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டி இருக்கிறது. அதாவது உச்சநீதிமன்ற ஆணை இருக்கிறபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த

ஆலைகளைத் திறக்கலாம் என்று உத்தரவிட்டாலும் கூட திறக்க முடியாது. இந்தச் சிக்கலான சூழ்நிலையில் எப்படியாவது ஒரு முடிவை உருவாக்கித் தர வேண்டும். மத்தளத்திற்கு எப்படி இரண்டு பக்கமும் இடியோ அதுபோல் ஒரு பக்கம் மாண்புமிகு முதலவர் அவர்களை சுப்ரீம் கோர்ட் இடிக்கிறது, இன்னொரு பக்கம் வேலையில்லாத மக்களுடைய உணர்வுகள் இடிக்கின்றன. இந்த இரண்டு இடிகளையும் தாங்கிக் கொண்டு இதிலே சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் ஒரு தீர்வை எடுக்கவேண்டும். அதைச் சிந்தித்துத்தான் எடுக்கவேண்டும்.

*முற்பகல் 10–20*

ஏற்கனவே ஆக்ரா, உத்தரபிரதேசம் போன்ற இடங்களில் அரசே உச்சநீதிமன்றத்தை அணுகி அதற்கான உத்தரவுகளைப் பெற்றன. அதாவது, சுத்திகரிப்பு ஆலைகளை உருவாக்கிவிட்டால் இந்தத் தொழிலைத் தொடர்ந்து நடத்தலாம் என்கிற நிலை இருக்கிற காரணத்தால் மாநில அரசு, மத்திய அரசை அணுகி அதற்கான பங்கைப் பெற்று தோல்தொழிற்சாலை உரிமையாளர்களிடமிருந்தும் உரிய பங்கைப் பெற்று எங்கெங்கெல்லாம் இன்று சுத்திகரிப்பு நிலையங்கள் இல்லாமல் இருக்கின்றனவோ அங்கெல்லாம் உருவாக்கவேண்டும். அங்கே முன்னாள் பிரெசிடென்ட் அவர்கள் ஒரு அடிக்கல் நாட்டிவிட்டுப் போனார். இராணிப்பேட்டையில் அந்த சுத்திகரிப்பு ஆலை இன்னும் திறக்கப்படவே இல்லை. இப்படி பல இடங்களிலே அடிக்கல் நாட்டுகிறார்கள். பிறகு அப்படியே விட்டுவிடுகிறார்கள். சுத்திகரிப்பு நிலையம் வராமல் போய்விடுகிற காரணத்தினாலே எங்களுடைய மாவட்டத்தில் உள்ள பாலாறு என்பது இன்றைக்கு பாழாறு ஆக ஆகிவிட்டது. பாலாறு என்று பெயர் வந்ததற்குக் காரணமே, எப்படி தாய்ப்பால் தானாக சுரந்து குழந்தைக்கு இனிமையான பாலை வழங்குகிறதோ அந்த அளவிற்கு நல்ல நீரை வழங்கித் தந்தது பாலாறு. ஆக, பாலாறு பாழாறு ஆகிவிட்ட நிலையைக் கண்டு நாங்கள் அஞ்சுகிறோம். எங்களுக்குக்கூட, இந்தப் பிரச்சினையை எழுப்புகிறபோது பொதுமக்கள் ஒரு பக்கம் நிலத்தடி நீர் கெட்டுப் போய்விட்டது, நீங்கள் தோல் தொழிற்சாலைகளுடைய உரிமையாளர்களுக்கு வக்காலத்து வாங்குகிறீர்கள் என்று ஒருபக்கம் இடிக்கிறார்கள். வேலையற்ற தொழிலாளர்களை பார்க்கிறபோது, நீங்கள் நிலத்தடி நீரை மட்டும்தான் பார்க்கிறீர்கள், நாங்கள் வேலையில்லாமல் இருக்கிறோம், எங்களுக்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று இடிக்கிறார்கள். மத்தளத்துக்கு எப்படி இருபக்கமும் இடியோ அதே





இடி எங்களுக்கும் வந்து விழுகிறது. இருந்தாலும், இதற்கு எப்படியாவது ஒரு தனிக்குழுவை அமைத்தாவது, உச்சநீதிமன்றத்தை அணுகியாவது நீங்கள் மூடிக்கிடக்கின்ற தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு, நீங்கள்-மாண்புமிகு முதல்வர் அவர்கள்--போர்க்கால நடவடிக்கையை எடுத்து இன்று வாடிக்கிடக்கின்ற, வற்றிய வயிறோடு வாழ்ந்து கொண்டிருக்கிற வேலையிழந்த பல லட்சக்கணக்கான மக்களுக்கு ஆதரவு தரக்கூடிய வகையில் அவர்களுடைய நெஞ்சத்தில் ஈரத்தை உருவாக்குகின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, அந்த ஆலைகளை திறந்து அவர்களுக்கு ஒரு வேலைவாய்ப்பு உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, நிலத்தடி நீரும் கெட்டுவிடாமல், ஆண்மையெல்லாம் எதிர்காலத்திலே நிலைத்து இந்தச் சமுதாயத்திலே இருக்க வேண்டும் என்ற வகையில் நிலத்தடிநீரையும் பாதுகாக்க வேண்டிய தலையாய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்ற வகையிலே, நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் வகையிலே, சுத்திகரிப்பு நிலையங்களை ஆங்காங்கே உருவாக்குவதோடு, உடனடியாக அந்த இடங்களிலே ஆலைகள் திறக்கப்படுமா, அதற்கான முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் எடுப்பார்களா என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன சட்டமன்றக் கூட்டத் தொடரில் சுற்றுப்புறச் சூழல் கெட்டுவிட்டது, அதனாலே சுப்ரீம் கோர்ட் உத்தரவுபடி ஆலைகளை மூட வேண்டும் என்று இதே மாண்புமிகு உறுப்பினர் பேசினார். இந்த சட்டசபைக் கூட்டத்தில் டாக்டர் கலைஞருக்கு ஏற்றாற்போல பேசுகிறார். எது உண்மை? ஒன்றுமே புரியமாட்டேன் என்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள் ஒரு தவறான தகவலை இந்தச் சபைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். சுற்றுப்புறச் சூழல் கெடுகிறது என்று பேசியிருக்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை. இப்போதுகூட இதே கருத்தைத்தான் வலியுறுத்திப் பேசினேன். மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி. 'டபிள் எட்ஜிடு வெப்பன்' இது.

[திரு. சி. ஞானசேகரன்] [1996 மே 27

இரண்டு பக்கமும் கூர்மையாக இருக்கிறது. எந்தப் பக்கம் போனாலும் நமக்கு ஆபத்துதான். ஆகவே, ஒரு நடுப்பகுதியை நாம் தேர்ந்தெடுத்து போகவேண்டும் என்று நான் பேசியதை மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள் ஏனோ கவனிக்காமல், எங்கே சிந்தித்துக் கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரியவில்லை. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலும்கூட, சுற்றுச் சூழல் கெடுகிறது, நீங்கள் சுத்திகரிப்பு நிலையத்தைத் திறங்கள் என்றுதான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களைக் கேட்டுக்கொண்டேன். எப்போதோ பிரசிடெண்ட்டாக இருந்தவர் நட்டுவிட்டுப் போன அடிக்கல், அடிக்கல்லாகவே இருக்கிறது. ஏன் சுத்திகரிப்பு ஆலை வரவில்லை என்று கேட்டிருந்தேனேயொழிய மூடவேண்டும் என்று சொல்லவில்லை. காரணம், அவற்றை மூடவேண்டும் என்று சொன்னால் 100 கட்டிடங்களை இடிப்பார்கள். இன்று பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலையிழந்து கிடக்கிறார்கள். அவர்களையும் நாம் பார்த்தாக வேண்டும். சுற்றுச் சூழலையும் நாம் பார்த்தாக வேண்டும். இருக்கக்கூடிய இரண்டு கருத்தையும் ஒரேசீராக ஆராய்ந்து, இரண்டுபுறமும் பார்த்து, நீதியான கருத்தைத்தான் நாம் எடுத்துவைக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறேன். ஆகவே, திரு. தாமரைக்கனி அவர்கள் முன்பு அப்படிச் சொன்னேன் என்று சொன்னார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தகுந்தாற்போல் ஆடும் வழக்கம், ஜால்ரா போடும் வழக்கம், நிச்சயமாக, சத்தியமாக எங்களுக்குக் கிடையாது. குற்றம் செய்பவர்கள் யாராக இருந்தாலும், நக்கீரன் முறையிலே, 'குற்றம் குற்றமே' என்று வாதிடுகிற ஒரு நிலையில்தான் என்றுமே இருப்போமேயொழிய, உங்களைப் போல் முன்பு ஒன்று பேசிவிட்டு இப்போது மாற்றிக் கூறுகிற இனத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள் இல்லையென்பதை ஆணித்தரமாக எடுத்து வைத்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் தீர்மானம் வெடியாக இருந்தது. இரண்டாவது வெறும் இடியாக இருக்கிறது. (சிரிப்பு) ஏனென்றால், இந்த இரண்டு வார்த்தைகளும், இரண்டு தீர்மானங்களிலும் மிகத் தாராளமாக, ஏராளமாக புழங்கின. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்திய



1996 மே 27] [டாக்டர் மு. கருணாநிதி]

தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் அப்துல் லத்தீப் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும் கொண்டுள்ள உணர்வுக்கு சற்றும் மாறுபட்டதல்ல இந்த அரசின் உணர்வு என்ற காரணத்தினாலேதான் இந்தப் பிரச்சினை குறித்து ஆளுநர் உரையிலேயே விளக்கமாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது. அந்த உரை பற்றி நடைபெறும் விவாதத்தில் அதைப் பற்றி பேச வேண்டிய கருத்துக்களையெல்லாம் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த தொகுதிகளின் உறுப்பினர்கள் என்ற முறையில் உரிமை எடுத்துக் கொண்டு திரு. லத்தீப் அவர்களும், திரு. ஞானசேகரன் அவர்களும் இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உணர்வு ஒன்றுதான் என்றாலும்கூட சில விவரங்களை இந்த அவையும் அறிந்துகொள்ள வேண்டும், நாடும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சில புள்ளிவிவரங்களைத் தர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாட்டில் தோல் பதனிடும் நிறுவனங்களில் வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் 569-ம், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 70-ம், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 165-ம், திருச்சி மாவட்டத்தில் 23-ம், பெரியார் மாவட்டத்தில் 64-ம், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2-ம், தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் 1-ம் என்ற வகையில் மொத்தம் 894 நிறுவனங்கள், தோல் பதனிடும் நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த 894 தோல் பதனிடும் நிறுவனங்களில் வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் 208-ம், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 70-ம், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 45-ம், திருச்சி மாவட்டத்தில் 23-ம், பெரியார் மாவட்டத்தில் 60-ம், புதுக்கோட்டை மாவட்டத்தில் -ம் என்ற வகையில் 407 நிறுவனங்கள் உச்ச நீதிமன்ற ஆணைக்கிணங்க மூடப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் சுமார் 25,600 பேரும், பெரியார் மாவட்டத்தில் சுமார் 5,000 பேரும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் சுமார் 16,000 பேரும், ஆக மொத்தம் சுமார் 46,600 தொழிலாளர்கள் இந்த 3 மாவட்டங்களில் மட்டும் பணி இழந்திருக்கின்றார்கள். தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுகளினால் வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் லட்சம் ஏக்கர் நிலமும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 22,230 ஏக்கர் நிலமும், பெரியார் மாவட்டத்தில் காவிரி நதியின் பாசன ஆயக்கட்டு நிலங்களும், காளிங்கராயன் கால்வாய் ஆயக்கட்டுதாரர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் பெறப்பட்டுள்ளது.

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள 569 தொழிற்சாலைகளில் 51 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் தோல் கழிவுகளை சுத்திகரிக்கும் வசதி தனித்தனியே உள்ளது. இது தவிர, 461 பொது கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் வாயிலாக தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுகளை சுத்திகரிக்க வசதி உள்ளது. 57 தொழிற்சாலைகள் எந்தவித சுத்திகரிப்பு வசதியும் இன்றி உள்ளன. வேலூர் மக்கள் நல மன்றம், வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுகளால் சுற்றுப்புறச் சூழல் பாதித்துள்ளது என்றும், குடிநீர் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வேளாண்மை நிலங்கள் பாதிக்கப்பட்டு விட்டன என்றும் அவற்றிற்குப் பரிகாரம் தேட, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை 1991ஆம் ஆண்டு தொடுத்து, அந்த வழக்கு 914/91 என்ற எண்ணில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கை விசாரித்து வரும் உச்சநீதிமன்றம் 1-5-1995-ல் இந்த மாவட்டத்திலே உள்ள 57 தோல் பதனிடும் தொழிற்சாலைகளை கழிவு சுத்திகரிப்பு இல்லாத காரணத்தால் மூடிவிட வேண்டும் என்றும், எஞ்சியுள்ள 494 தொழிற்சாலைகளில் 51 தொழிற்சாலைகள் தங்களுடைய தனிப்பட்ட முறையிலான சுத்திகரிப்பு நிலையங்களை வைத்துள்ளன என்றும், 445 தொழிற்சாலைகள் 20 பொது சுத்திகரிப்பு அமைப்புகள் வாயிலாக கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் பெற்றுள்ளன என்ற அளவில் சட்டப்படியான சுத்திகரிப்பு நிலையை நடைமுறைப்படுத்த 3 மாத கால அவகாசம் அளித்தது. மேலும் 10-5-1995 ஆணையின்படி ஏற்கெனவே மூடும்படி ஆணையிடப்பட்ட 57 தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டால் அவற்றை நேரடி ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படியும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் 8-9-1995 ஆம் தேதியிட்ட ஆணை வாயிலாக உச்ச நீதிமன்றம் மேலும் 14 பொது சுத்திகரிப்பு அமைப்புகளின்பால்பட்ட 162 தோல் பதனிடும் தொழிற்சாலைகளை உடனடியாக மூடிவிட வேண்டும் என்றும் ஆணையிட்டது. எஞ்சியுள்ள 6 பொது சுத்திகரிப்பு அமைப்புகளுக்குட்பட்ட 299 தொழிற்சாலைகள் சட்ட நிலைக்கு உட்பட்ட சுத்திகரிப்பு நிலையை அடைய 31-12-1995 வரை கால அவகாசம் கொடுத்தது.

முற்பகல் 10-30

உச்ச நீதிமன்றம் பிறகு பிறப்பித்த ஆணைகளின் வாயிலாக ஏற்கெனவே மூடப்பட்ட 57 தொழிற்சாலைகளில் 15-ஐயும், 162-ல் 7 தொழிற்சாலைகளையும்தான் இயங்க அனுமதி அளித்தது. உச்ச நீதிமன்றம் தனது 9-4-1996 தேதியிட்ட ஆணையில் வடஆற்காடு-





அம்பேத்கர் மாவட்டத்தில் 34 தொழிற்சாலைகளை மூடும்படி ஆணையிட்டது. மேற்படி ஆணையில் 6 பொது சுத்திகரிப்பு அமைப்புகளுக்குட்பட்ட 299 தொழிற்சாலைகள் சட்டநிலைகளுக்குட்பட்ட சுத்திகரிப்பு அளவை எய்தியதால் அவை நடைபெற ஆணையிட்டது. 6-5-1996 ஆம் தேதியிட்ட ஆணையின்படி வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் மேலும் 23 தொழிற்சாலைகளைத் திறக்க அனுமதித்தது. வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் பொது சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவி செயல்பட இதுவரை ரூ. 1086 இலட்சம் மானியமாக மத்திய, மாநில அரசுகள் தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகக் கொடுத்துள்ளன. இதில் மத்திய அரசின் மானியம் மட்டும் ரூ. 409 இலட்சம் ஆகும். தற்போதுள்ள திட்டத்தின்படி மாநில, மத்திய அரசுகள் மானியம் தலா 25 சதவீதம் அல்லது ரூ. 100 இலட்சத்திற்கு மிகாமல் வழங்க வகை உள்ளது. பொது சுத்திகரிப்பு அமைப்புகள் கம்பெனிகளாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மத்திய மாநில அரசுகளின் மானியம் தவிர வங்கி, நிதி நிறுவனங்கள் வாயிலாகக் கடன் உதவி பெற்றால்தான் இவைகளை நிறைவேற்ற முடியும். அநேக அமைப்புகள், ஐ.டி.பி.ஐ., ஹட்கோ போன்ற அமைப்புகளிடமிருந்து கடன் உதவி பெற இயலாத நிலையில் தங்களுடைய சுத்திகரிப்பு நிலையங்களைக் கட்டி முடிக்க முடியாத சூழ்நிலையில் உள்ளன. இந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்ட காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் துயரம் குறித்து, முன்பே இந்த அரசு அறிந்திருந்த காரணத்தால்தான், ஆளுநர் உரையில் இந்தப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டு, விவசாயிகளின் நலன் பாதிக்கப்படாமல், அதே நேரத்தில் குடிநீரும் பாதிக்கப்படாமல், தோல் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர் வாழ்க்கையும் பாதிக்கப்படாமல் தமிழக அரசு முயற்சி எடுத்து முத்தரப்பு பேச்சு வார்த்தை நடத்தித் தீர்வு காணப்படுமென்று விளக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தோல் தொழிலாளர்கள் துயரத்தைப் போக்க இந்த அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளும் என்ற உத்தரவாதத்தை நான் தெரிவித்துக் கொண்டு அமர்கின்றேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அளித்த அந்த விரிவான விளக்க அறிக்கையோடு, இதுவும் இணைந்து கோர்வையாக இருக்க வேண்டுமென்பதற்காக ஒரு விளக்கத்தை முதலமைச்சர் இடத்திலே அறிய விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை உருவாக முக்கியமான

காரணம் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. ஆனால், இந்த தீர்ப்பை நோக்கிய காலத்தில் தமிழகம் மாத்திரம் அல்ல, உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள்கூட இதே வகையிலே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பால் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருந்தது. ஆனால், அந்த மூன்று அரசாங்கங்களுடைய அரசு வழக்குரைஞர்கள், இன்றுள்ள நிலையை சரியாக உச்ச நீதிமன்றத்தில் எடுத்துச் சொன்ன காரணத்தால், அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் விடுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு வழக்குரைஞர் இதுகுறித்து சரியான விளக்கம் உச்ச நீதிமன்றத்திலே கொடுக்காத காரணத்தால் இந்த நிலைமை உருவாகியிருக்கிறது என்றும், --குறிப்பாக இந்தக் கழிவு நீர் குறித்து. இதற்கு சர்டிபிகேட் வழங்க 'NEERI' என்ற அமைப்பு நாக்பூரிலே இருக்கிறது. நம்முடைய ஐ.ஐ.டி. என்று சொல்லக்கூடிய அமைப்பும் இதனோடு தொடர்பு கொண்டிருக்கிறது. எனவே, அவர்கள்தான் பி.ஓ.டி., சி.ஓ.டி., பயோ-ஆக்சிஜன் குரூப் என்றெல்லாம் பாகுபாடு செய்கின்றார்கள். நம்முடைய தொழிற்சாலைகள் எல்லாம் 'NEERI' என்ற அமைப்பிலேயிருந்து, இந்த அமைப்புகளிடமிருந்து சர்டிபிகேட் பெற்றிருக்கிறார்கள். நம்முடைய ஐ.ஐ.டி கூட இதற்கு சரியான சர்டிபிகேட் அளித்திருக்கிறது. இங்கேயிருக்கிற லெதர் ரிசர்ச் இன்ஸ்டிடியூட். இதுதான் முக்கியமான அமைப்பு. அவர்களுடைய ஆய்வின் அடிப்படையிலேதான் கழிவு நீரிலே எந்த அளவுக்குத் தூய்மை இருக்க வேண்டுமென்று நிர்ணயித்துச் சொல்கிறார்கள். அவர்கள் நிர்ணயித்துக் கொடுத்த பிறகுதான், ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் வழங்கப்படுகிறது. நம்முடைய உள்ளாட்சி மன்றங்கள்கூட இதிலே தொடர்பு கொண்டிருக்கின்றன. இவைகளெல்லாம் இணைந்து லைசென்சுகள் வழங்கப்பட்டு, கழிவுப்பகுதி எவ்வளவு இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே அந்த உண்மைகள் எல்லாம் எடுத்துச் சொல்லப்படாத காரணத்தால்தான் நமக்கு மாத்திரம் இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. எனவே, இதுகுறித்து தனியாக ஒரு சிறப்பு வழக்கறிஞரை நம்முடைய தமிழக அரசின் சார்பாக நியமித்து, அவர்கள் முறையாக உச்ச நீதிமன்றத்திலே எடுத்துச்சொல்லி, இந்த உண்மைகளையெல்லாம் விளக்கிச் சொல்லி ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு, அரசு இக்கருத்தினையும் கவனத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



*முற்பகல் 10-35*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** *சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னபிறகு சட்டப்படி விளக்கங்கள் கோர நான் அனுமதிக்கக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் ஒரு மூத்த உறுப்பினர். அவர் இந்தக் கருத்தை முதலிலே பேசும்போது சொல்லியிருந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போதே பதில் சொல்வதற்குத் தயாராக இருந்திருப்பார்கள். (குறுக்கீடு)* I am standing. *பொதுவாக விதிகளை மீறி, குறிப்பாக எதிர்ப்பக்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு, நான் அதிக சலுகை கொடுக்கிறேன் என்ற ஒரு உணர்வு இருப்பதை நான் பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள்தான் முதலிலே செய்தார்கள். கதவைத் தட்டாமல் அவர் உள்ளே நுழைந்தார், அவர் நுழைந்த கதவுக்குள்ளே மற்றவர்கள் நுழையக்கூடாது என்று ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிக் கொண்டிருந்தார். ஆகவே, திட்டவட்டமாகக் கூறுகின்றேன். சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களில் சுருக்கமாகப் பேசவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்த பிறகு உறுப்பினர்கள் இனிமேல் விளக்கம் கேட்கக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

Hon. Member, you are a senior Member. You must learn to obey the Chair.

**Thiru M. Abdul Latheef :** Please hear........

**Mr. Speaker :** No, you please listen to me. I am on my legs. You sit down. I will give you permission. Kindly sit down. I am standing. All I brought to your notice is that this information was available to you even when you had originally spoken. You could have asked the Hon. Chief Minister when you had originally spoken, "other State Governments had obtained exemption from the Supreme Court, why not this Government also follow the same ?" After the Chief Minister has replied, you want to give this new information now. That is what I object.

**Thiru M. Abdul Latheef :** This is neither under Rule 56 nor 57-- neither call attention motion nor adjournment motion. It is in this peculiar situation I am that placed. What I submit is that questions arise from the replies given by the Members of the Treasury benches. I am raising this question which arises out of the reply given by the Hon. Chief Minister. Therefore, it is only from the reply that this question arises. This is the way in which the matter is sorted out. So far as call attention motion is concerned, the Hon. Chief Minister is ready to reply. Please......

**Mr. Speaker :** I am not going to prevent the Chief Minister from replying. All I am telling you is that as a senior member of the House you must set up healthy precedents. If you had the information that other State Governments had obtained exemption from the Supreme Court, you should have mentioned it in the first part of your speech. The Chief Minister would have been ready to give a reply, or would have given you an assurance that this Government would act like other State Governments. You should not raise it as a clarification after the Chief Minister has replied. Hon. Chief Minister.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணத்தான் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெறும்போது, இதிலே அக்கறையுள்ள அந்த வட்டாரத்தைச் சேர்ந்த மாண்புமிகு .உறுப்பினரைக்கூட அழைத்துப் பேசலாம். அப்போது இந்தக் கருத்துக்களை அங்கே எடுத்துவைக்க, மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் போன்றவர்களுக்கு உரிமையுண்டு. வேறு மாநிலங்களில் எப்படிச் செயல்பட்டார்கள், வழக்குகள் எப்படி நடைபெற்றன என்ற விவரங்கள் எல்லாம் இப்போது என்னிடத்திலே இல்லை. இப்போதுள்ள பிரச்சினையே இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பதுதான். தொழிலாளர்கள் வாழவேண்டும். குடிதண்ணீரைப் பருகுகின்ற மக்களும் உயிரோடு இருக்கவேண்டும். அதற்கு அந்தத் தொழிற்சாலைகள் நடைபெற வேண்டும். உச்சநீதிமன்றத்தை எப்படி அணுகவேண்டும் என்பதற்கான முத்தரப்புப் பேச்சுவார்த்தையிலே நமக்குள் ஒரு உடன்பாடு ஏற்பட்டுவிட்டால், யார் இந்த வழக்கைப் போட்டார்களோ அவர்களேகூட இதைத் திரும்பப் பெறுவதற்கு வாய்ப்புகள் உண்டு.



எனவே, முத்தரப்புப் பேச்சுவார்த்தையைத்தான் முக்கியமாகக் கருதி, அதிலே இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்துவைத்து, மற்ற மாநிலங்கள் எப்படி நடந்துகொண்டன என்ற முன்னுதாரணங்களைப் பின்பற்றி நாம் நடந்து கொள்ளலாம். எனவே, இந்த விளக்கம் போதுமென்று கருதுகின்றேன்.

*முற்பகல் 10-40*

## 2. அறிவிப்புகள்

### (அ) வினாக்களுக்குத் துறைகள் விரைந்து பதிலனுப்ப வேண்டியது குறித்து

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** அடுத்து ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அவை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அந்த வினாக்களுக்கான விடைகள் வருவதற்கு சில நாட்கள் ஆகலாம். எனவே சில நாட்களுக்கு பேரவையில் "வினாக்கள்-விடைகள்" நேரம் இருக்காது என்பதை அறிவிக்கிறேன்.

இந்த நேரத்திலே அரசுத் துறை அதிகாரிகளின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற விதிகளின்படி வினாக்களுக்கான விடைகள் 42 நாட்களுக்குள் வரவேண்டும். எதிர்பாராத சூழ்நிலையில் இன்னும் 2 வாரங்கள் அவகாசம் கொடுக்கப்படும் என்று விதிகள் இருக்கின்றன. நான் என்னுடைய அலுவலகத்திலே பார்க்கிறபோது கடந்த காலங்களிலே ஒரு ஆண்டு முடிந்தும் கூட பதில் வராமல் இருப்பதைப் பார்த்தேன். இந்த நிலை நீடிக்கக்கூடாது என்று அறிவிக்கின்றேன். 42 நாட்களுக்குள் பதில் சொல்ல முடியாவிட்டால் இரண்டு வார காலம் அவகாசம் கேட்டு துறை எழுதலாம். அந்த இரண்டு வாரம் கழிந்து அதற்குப் பிறகும் பதில் கொடுக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அந்தத் துறை அதிகாரிகள் பேரவைத் தலைவரை நேரில் சந்தித்து காரணங்களைச் சொல்லவேண்டும் என்று அறிவிக்கிறேன். அடுத்து அரசினர் தீர்மானங்கள்.

[1996 மே 27

# 3. அரசினர் தீர்மானங்கள்

## (அ) மதிப்பீட்டுக் குழு-உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன்கீழ், 1996-97ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## (ஆ) பொதுக் கணக்குக் குழு-உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203-ன் கீழ், 1996-97 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."



1996 மே 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## (இ) பொது நிறுவனங்கள் குழு-உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன் கீழ், 1996-97 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஈ) உரிமைக் குழு-உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன் கீழ், 1996-97 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 2. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஆ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்--கால அட்டவணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல், ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல்' நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1996-ஆம் ஆண்டு மே திங்கள் 28-ஆம் நாள் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.





வேட்புத்தாளை பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத்தாள்கள் 1996-ஆம் ஆண்டு மே திங்கள் 30-ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் மே திங்கள் 31-ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

அடுத்து ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சொக்கர்.

*முற்பகல் 10-45*

## 4. தகவல் கோரல்

### பேரவைமுன் வைக்கப்பெற்ற சில ஏடுகள் காலதாமதமாக வைக்கப்பட்டுள்ளது குறித்து

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர்களுக்கு முன்னால், அவைமுன் வைக்கப்படும் ஏடுகள் என்ற பிரிவில் இங்கே ஒரு செய்தியை நாம் பார்க்கிறோம். அதில் 'அ' பிரிவில் 8 பொருள்களும், 'ஆ' பிரிவில் ஒரு அறிக்கையும் வைக்கப்பட்டுள்ளன. 'அ' பிரிவில் உள்ள 1, 3, 5, 6, என்ற இனங்களில் சில தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை வரியிலிருந்து 'டெபரல்' அளித்து விற்பனை வரியை உடனே கட்ட வேண்டியதில்லை, ஒத்திப்போடப்பட்டுள்ளது என்ற அளவில் அறிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சலுகைகள் பெறப்பட்ட 4 கம்பெனிகள்--ஆணை வழங்கப்பட்ட தேதிகள் அதாவது முதலாவதற்கு அரசாணை வழங்கப்பட்ட தேதி 12-12-1995, மற்றொன்றுக்கு அரசாணை வழங்கப்பட்ட தேதி 15-11-1995, மற்றொன்றுக்கு அரசாணை வழங்கப்பட்ட தேதி 11-12-1995, மற்றொன்றுக்கு அரசாணை வழங்கப்பட்ட தேதி 17-11-1995 ஆகும். இத்தனை நாட்களுக்கு முன்பாகவே அந்தச் சலுகைகள் அந்தத் தனியார் கம்பெனிகளுக்கு வழங்கப்பட்டிருந்தும், இதுநாள் வரையிலும் பேரவையில் வைக்கப்படாமல் இவ்வளவு காலம் கடந்து அவை வைக்கப்படவேண்டிய

காரணம் என்ன? இதில் நான் என்ன குறிப்பிடுகிறேன் என்றால், கடந்த ஆட்சிக்காலத்தில் எவ்வளவோ தவறுகள் நடந்தன. அந்தத் தவறுகளை எல்லாம் சந்தடி சாக்கில் நமக்குத் தெரியாமல் இங்கே வைத்து, அதற்குப் பிறகு வந்த அரசும் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது என்ற ஒரு களங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது.

நான் சட்டமன்றப் பேரவைச் செயலாளரை இது குறித்து சுமார் 10 நிமிடங்களுக்கு முன்பு கேட்டபோது, அவை ஒப்புதலுக்காக வைக்கப்படவேண்டியதில்லை என்றும் தகவலுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவித்தார்கள். தகவலுக்காக வைக்கப்படுவதாக எடுத்துக்கொண்டாலும்கூட, ஏன் இவ்வளவு காலம் கடந்து வைக்கப்பட்டிருக்கிறது, முந்தைய ஆட்சிக் காலத்தில் இவை ஏன் வைக்கப்படவில்லை? ஒப்புதலுக்காக வைக்கவேண்டுமென்ற நிலை மாறி சும்மா ஒப்புக்காக வைக்கப்படுகிறது என்றால் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் வந்தமர்ந்து பேசுவதைக் கேட்டு, வைக்கப்பட்டதை படித்துப் பார்த்து எழுந்து போகக்கூடிய நிலை இருப்பது சரியில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இதைப்பற்றி அரசு ஏற்கெனவே பார்த்து விட்டதா, இதை அப்படியே நாம் பாஸ் செய்து விடலாமா என்று விளக்கம் கூறினால் இதை பாஸ் செய்துவிடலாம். இல்லையென்றால் மறுபடியும் மீண்டும் ஒரு நாள் இதை அவைக்குக் கொண்டுவரலாம் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் துறைக்கு, இந்த உத்தரவுகள் எப்போது வந்தன என்ற விவரங்கள் தெரியவில்லை. அந்த விவரங்களைக் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து என்னை அறையிலே சந்திக்கவும். இதுகுறித்த விவரங்களைப் பார்த்து மேற்கொண்டு நடவடிக்கை எப்படி இருக்கவேண்டுமென்று அப்போது நான் அவர்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்கிறேன்.



## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். இன்று விவாதத்தை தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. திருவேங்கடம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

***திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றியினைத் தெரிவிக்கின்ற தீர்மானத்தை முன்மொழிந்துள்ளதை நானும் வழிமொழிந்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள கலசப்பாக்கம் தொகுதியில் 6-வது முறையாக கழக வேட்பாளராக போட்டியிடுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்த கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும், உங்கள் மூலமாக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 6 முறை நான் பொதுத் தேர்தலில் போட்டியிட்டாலும், 4வது முறையாக இந்தப் பேரவைக்கு என்னை அனுப்பி வைத்த கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் உங்கள் மூலமாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

தமிழகத்தில் ஐந்து ஆண்டு காலமாக ஒரு ஆட்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தது. இங்கே கூட நண்பர் ஒருவர் சொன்னார். ஒரு அரசியல் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது அடிக்கடி இப்படி சொல்வார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். "மங்கை சூதகமானால் கங்கையிலே நீராடலாம். கங்கையே சூதகமாகிவிட்டால் மங்கை எங்கே நீராடுவது" என்று சொல்வார்கள். கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்தத் தமிழகம் என்கிற கங்கை எப்படி களங்கப்பட்டிருந்தது என்பதை தமிழகத்திலுள்ள வாக்காளப் பெருமக்கள் மட்டுமல்ல ஆட்சியிலே இருந்த கட்சியைத் தவிர பெரும்பாலான எதிர்க்கட்சிகள், தி.மு.க. முற்போக்கு கூட்டணியோடு போட்டியிட்ட தோழமைக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் உணர்ந்து, வாக்காளப் பெருமக்கள்

பெருவாரியான வாக்குகளை குறிப்பாக தாய்மார்கள் ஆதரவு அளித்ததன் காரணமாக இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சருடைய தாரக மந்திரமே "சொன்னதைச் செய்வோம். எதைச் செய்யமுடியுமோ அதைத்தான் சொல்வோம்" என்பது நாடறிந்த ஒரு கருத்தாகும். அந்த நிலையிலேதான் அவர்கள் தேர்தல் நேரத்திலே சொல்லிய, ஏழை எளிய ஆதிதிராவிட மக்கள், கிராமங்களில் இருக்கின்ற விவசாய மக்களை பெரிதும் பாதித்த, இதுவரையில் எந்த ஒரு அரசும் தமிழகத்திலே செய்யாத ஒரு கொடுமையை ஐந்து ஆண்டு காலமாக ஆட்சி செய்த ஒரு அரசு விதித்திருந்த தரை வரியை நீக்கி இன்றையதினம் ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்றியிருக்கிறார்கள். அது போன்று சீனியாரிடி அடிப்படையிலே ஆசிரியர்களுடைய நியமனம் இருக்கும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்றையதினம் தமிழகத்தில் வறட்சியினுடைய கொடுமையினால் கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் குடிநீர் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவைகளை நான் போக்குவேன் என்றும், சாதாரண ஏழை எளிய மக்களுடைய அன்றாட பிரச்சினையில் ஏற்படுகிற கஷ்டங்களை என்னுடைய அரசு நீக்கப் பாடுபடும் என்றும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் வறட்சியினுடைய பிடியிலே எல்லா மாவட்டங்களும் தவித்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்று இருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் பெரும்பாலான அதிகாரிகள் இந்த அரசோடு ஒத்துழைக்கவேண்டுமென்று கருதினாலும் கூட அரசில் பணியாற்றுகின்ற சில அதிகாரிகள் இன்றும் இந்த ஆட்சி வந்ததைக் கூட விரும்பாதவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. உதாரணத்திற்கு நான் இங்கே சொல்லிக்கொண்டிருக்கிற வறட்சியால் கூட்டுறவு கடன்கள் ஒத்தி வைக்கப்படுகின்றது என்றும், கூட்டுறவு கடன்களை வசூலிக்கக் கூடாது என்றும் நாம் சொல்லிக்கொண்டிருந்தாலும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே முதலமைச்சராக பொறுப்பேற்றபிறகு இரண்டு நாட்களிலேயே அங்கு கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூட்டுறவு கடனுக்காக ஜப்தியே செய்து விட்டார்கள். நாங்கள் கூட



கேட்டோம்; நீங்கள் கடன் வசூலிப்பதை கூட ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தடுக்கவில்லை, ஆனால் உடனடியாக ஜப்தி செய்கிறீர்கள், என்ன நியாயம் என்று கேட்டால், அதற்கு சரியான பதில் எந்த ஒரு அதிகாரிகளிடத்திலேயும் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம், அப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்து நாம் ஆட்சி நடத்த வேண்டிய ஒரு நிலையிலே இருக்கிறோம். அதே போன்று ஏற்கெனவே இருந்த அரசு, வறட்சி மாவட்டங்களை அறிவித்த போது திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் அதிலே விடப்பட்டது. இன்றைய தினம் நம்முடைய அரசு திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தையும் வறட்சி மாவட்டத்திலே சேர்த்து அறிவிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

எங்களுடைய பகுதியிலே கள்ளக்குறிச்சியிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. இன்றையதினம் விவசாயிகளுடைய பிரச்சினை என்று எடுத்துக்கொண்டால் கரும்பு பயிரிட்டிருக்கிற விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம், அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 7½ இலட்சம் டன் பயிர்செய்யப்படும் கரும்பை ஒரு ஆண்டு காலத்திலே அரைத்து சர்க்கரையாக மாற்றுவோம் என்ற வகையில் பயிர் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் 6 மாத காலத்திலே அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையால் இதுவரையிலே 2½ இலட்சம் ஏக்கராவில் பயிர்செய்யப்பட்ட கரும்பைத்தான் அரைவை செய்திருக்கிறார்கள். இன்னும் 4 மாத காலந்தான் அவர்கள் சர்க்கரை ஆலையை இயக்கமுடியும். பிறகு அதை நிறுத்த வேண்டிய நிலையிலே இருக்கிறது. அதிலே என்னுடைய மாவட்டம் மட்டுமல்ல,. திருவண்ணாமலை, கலசப்பாக்கம், பக்கத்திலே இருக்கிற ரிஷிவந்தியம், சங்கராபுரம், தண்டராம்பட்டு போன்ற பகுதிகளும் அடங்கியிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த விவசாயிகளுடைய பிரச்சினையை கனிவோடு அணுகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், இருக்கின்ற இந்தக் குறுகிய காலத்தில், பக்கத்திலே இருக்கின்ற தனியார் சர்க்கரை ஆலைகள் அல்லது கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்-திருப்பத்தூர், அரூர் போன்ற ஆலைப் பகுதிகளிலே இருந்து கரும்பை எடுக்கச் செய்தாவது அரைக்கச் செய்யவேண்டும்.

இல்லையென்றால் இந்தப் பகுதி மக்கள், கரும்பு பயிர் செய்திருக்கி விவசாய மக்கள் பெரிதும் நஷ்டத்திற்கு ஆளாவார்கள் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்றையதினம் இவ்வளவு பெரிய நெருக்கடியான நேரத்தில் அந்த ஆலையிலே தனி அதிகாரிகள் இல்லை. ஒரு சிறந்த தனி அதிகாரியை தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும். ஏற்கெனவே ஒரு ஆலையைப் புதிதாகக் கட்டினார்கள். அதுவும் திறக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இரண்டு ஆலைகளும் இதுவரையிலும் ஒரே நேரத்திலே அரைக்கவில்லை என்பதையும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று 40 ஆண்டுகளுக்கு முன்னதாக அந்த ஆலை ஏற்பட்ட நேரத்தில் அங்கே ஏராளமான தேக்குமரங்கள் நடப்பட்டன. ஏற்கெனவே இருந்த ஒரு தனி அதிகாரி அவருடைய உறவினருக்கு ஏற்கெனவே இருந்த ஒரு அமைச்சர் வீடு கட்டுவதற்காக அந்த மரங்களை வெட்டி எடுத்துச் சென்று விட்டார்கள் என்று தகவல் சொல்லப்படுகிறது. மொத்தத்தில் அங்கே அந்தத் தேக்கு மரங்கள் இல்லை. அவை ஏலம் விடப்பட்டதா, இல்லையா என்று எங்களுக்குத் தெரியாவிட்டாலும் எங்களுடைய கவனத்திற்கு அங்கு இருக்கின்ற சிப்பந்திகள் இந்தத் தகவலைக் கொண்டு வருகின்றார்கள். அந்த விஷயத்திலேயும் இந்த அரசு விசாரணை செய்து, தவறு நடந்திருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கிராமச்சாலைகள். ஏற்கெனவே இது நாடறிந்த உண்மை. சாலைகள் போட மதிப்பீடுகள் தயார் செய்யப்படும். எந்தெந்தச் சாலைகள் என்று பெயர் அறிவிக்கப்படும். ஆனால் டெண்டர் வைக்கப்படமாட்டாது; அங்கு எந்த ஒப்பந்தக்காரராக இருந்தாலும் ஷெட்யூல் தரப்படமாட்டாது; உடனே அதற்குண்டான சதவிகிதத்தை கோட்டையிலே அன்றிருந்த அமைச்சரிடத்திலே யார் கொடுக்கிறார்களோ அவர்களுக்குத்தான வேலை தரப்படும். இது கடந்த 5 ஆண்டுக்காலமாக இந்த நாட்டிலே எழுதப்படாத சட்டமாகவே இயங்கி வந்தது. ஆனால் அந்த மாதிரி சாலைபோட டெண்டர் எடுத்த ஒப்பந்தக்காரர்கள் ஒழுங்காகச் சாலையைப் போட்டார்களா என்றால் இல்லை. அவர்கள், அதிகாரிகள், அமைச்சர்கள், மேலிடத்திற்குத் தரப்பட்ட எல்லாப் பணத்தையும் கழித்துக்கொண்டு, தேவையான



ஜல்லி போடுவதில்லை, சரியான, சீரான சாலை போடுவதில்லை; அந்தச் சாலைகளைச் செப்பனிடுவது இல்லை. இன்றையதினம் இப்படி தமிழ்நாடு பலவகையிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை ஏற்கெனவே நாடு அறியும். நம்முடைய அரசாங்கம் இதற்கு சீரான நடவடிக்கை எடுப்பது மட்டுமல்ல, அவைகளையெல்லாம் நீதிபதி மூலமாகவோ அல்லது குழு ஒன்றை அமைத்தோ விசாரித்து-இதிலே தவறு கட்டாயம் நடந்திருக்கிறது. உங்களுக்கும் தெரிந்திருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு-நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அதுபோல தனியார் பஸ்கள். ஏற்கெனவே பல்வேறு இடங்களிலே ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் ஏற்கெனவே இருந்த அரசு அவர்களிடத்திலே கையூட்டுப் பெற்று, அவர்கள் எந்த மார்க்கத்தை வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம், ஓடுகிற மார்க்கத்திலே உள்ளவற்றைக் குறைத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் சௌகரியத்திற்கு செய்து விட்டார்கள். ஆனால், இன்றையதினம் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகும் அவை நடைமுறையில் இருக்கின்றன. அதைப் பொதுமக்கள் என்னிடத்திலே முறையிடுகின்றார்கள். பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று தெருவிளக்குகள். நிச்சயமாக கிராமங்களிலே தெருவிளக்குகள் எரிவது இல்லை. நான்கூட அதிகாரிகளிடத்திலே கேட்டேன். அதற்கு அவர்கள், நாங்கள் விளக்குகள் வாங்கி விடுகிறோம், அதைப் போடவும் செய்கிறோம், ஆனால் ஒன்றிரண்டு நாட்கள் தான் எரிகின்றன, நாங்கள் என்ன செய்யமுடியும் என்று சொல்கிறார்கள். காரணம், ஏற்கெனவே இருந்த சுடுகாட்டு ஊழல் என்று சொல்லப்பட்ட ஒரு அமைச்சர், ஒரு கம்பெனியை அங்கீகரித்து, அதிலேதான், நீங்கள் தெருவிளக்குகள் வாங்கவேண்டுமென்று உத்தரவு இருக்கின்றது. புதிய அரசிலும் அதன்படி தெருவிளக்குகளை வாங்குகிறார்கள், போடுகிறார்கள். ஆனால் எரிவதில்லை. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், இதிலே மிக வேகமாக கவனம் செலுத்தி, உடனடியாக தரமான நல்ல கம்பெனிகளிலே அந்த தெருவிளக்குகளை வாங்குவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

V24,31'N96
218922

*முற்பகல் 11-00*

அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சீனியாரிட்டி அடிப்படையிலே ஆசிரியர்களை நியமனம் செய்வதாகச் சொன்னார்கள். அதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் இன்றைய தினம், துவக்கப் பாடசாலைகளில், பல்வேறு பாடங்களுக்கு ஆசிரியர்கள் கிடையாது. உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் கூட ஆசிரியர்கள் இல்லாமல் போதிய பாடங்கள் நடத்த முடியாமல் போகிறது. கிராமப்புறங்களில் இருக்கின்ற பாடசாலைகள் போதிய ஆசிரியர்கள் இல்லாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உங்களுக்குத் தெரியும். 10 ஆம் வகுப்பு அல்லது பிளஸ் 2 பரீட்சை எழுதும் மாணவர்கள், பரீட்சை எழுதி, அதிக மார்க்குகளைப் பெற்றால்தான் அவர்கள் தேர்வு செய்கின்ற பாடங்களிலே அவர்கள் சேர்ந்து படிக்க முடியும். ஆனால் இன்றைய தினம், கல்வி மிகத் தாழ்ந்துபோய் இருக்கின்றது. அதிலே நீங்கள் கவனம் செலுத்தி, போதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

என்னுடைய பகுதியிலேதான் ஜவ்வாது மலை இருக்கிறது. அங்கே சந்தனம், இந்தியாவிலேயே மிக உயர்ந்த சந்தனக் காடுகள் எல்லாம் இருந்தன. நானும், பல்வேறு நேரங்களில், சட்டமன்ற உறுப்பினராகப் போனபோது அந்தத் தோப்புகளைப் பார்த்த காட்சிகள் எல்லாம் உண்டு. ஆனால் அந்த ஐந்தாண்டுக் காலத்தில், அங்கு சந்தன மரங்கள் இருந்த இடமே தெரியவில்லை. அங்கே சந்தன மரங்கள் எங்கே என்றால், பொதுமக்கள் பதில் சொல்லப் பயப்படுகிறார்கள். அந்த அளவிற்கு ஜவ்வாது மலையிலே சந்தனக் காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால் இந்த அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது. இன்றையதினம் புதிய திட்டத்தை வகுத்தாக வேண்டும். அதைத் தடுத்தாக வேண்டும். ஏற்கெனவே அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளே களவாடுகின்றனர். வேறு தனியார் வந்து, களவாடினாலும் கூட பரவாயில்லை. வனத்துறையைச் சேர்ந்த பெரும்பான்மையான அதிகாரிகள், அந்தத் துறையினுடைய அமைச்சரோடு சேர்ந்து அந்த சந்தனக் காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன என்பதை இந்த நேரத்தில் உங்கள் மூலமாக இந்த புதிய அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதைத் தடுத்தே ஆக வேண்டும். இல்லையென்று சொன்னால், எதிர்காலத்தில், அந்தப் பகுதியிலே சந்தன மரம் என்று இருந்ததா என்று கூட வருகின்ற சந்ததியினருக்குத் தெரியாமல் போகும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.



ஆனால் இன்னொன்றையும் சொல்கிறேன். சில பகுதிகளிலே பட்டா நிலங்களிலே சந்தனமரம் இருந்தால், அந்த பட்டாதாரர்களுக்கே, வருவாயில் பங்கு உண்டு என்கிறார்கள். அந்தப் பகுதியிலே அப்படி ஒரு திட்டம் இல்லை என்று நான் அறிகிறேன். அதைத் தமிழகம் பூராவுமே, மேலும் மலை வாழ் மக்களுடைய பட்டா நிலங்களில் கூட மரம் முளைத்தால், அரசுக்குத்தான் சொந்தம் என்ற போதிலும், அந்த மரம் வெட்டப்படுகின்றபோது, அவர்களும் சேர்ந்து காவல் காப்பார்களேயானால், அரசுக்கு வருகின்ற வருவாயில் அந்த விவசாயிகளுக்கு உரிய பங்கு தரவேண்டும். இன்னொன்றையும் இந்த அரசாங்கம் செய்யலாம். பக்கத்திலே இருக்கின்ற கிராம மக்கள் இப்படி மரங்கள் களவாடப்படுகின்றபோது, பிடிப்பார்களேயானால் அந்த மரங்களின் மதிப்பீட்டில், பிடிக்கின்ற பொது மக்களுக்கு, உரிய சதவீதத்தை அளிப்பார்களேயானால், அது ஒரு பாதுகாவலாக விளங்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். *(குறுக்கீடு)*

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாய்ண்ட் ஆஃப் ஆர்டர். சட்டமன்றத்தின் முதல் நாள் மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றுகிறபோது, பொதுவாக அரசாங்கத்தின் மீது பல்வேறுவிதமான குற்றச்சாட்டுகள் சொல்கிறபோது முதல்நாள் என்பதால் குறுக்கிடவில்லை. இரண்டாவது நாளும், மூன்றாவது நாளும் இப்படி பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றுகிறபோது, காட்டிலே சந்தன மரங்கள் வெட்டப்பட்டன, கடத்தப்பட்டன, அழிக்கப்பட்டுவிட்டன என்று எல்லாம் சொல்ல அவருக்கு உரிமை இருக்கிறது. அதிலே அதிகாரிகளும், அமைச்சரும் சேர்ந்து செய்தார்கள் என்றெல்லாம் சட்டமன்ற விதிகளுக்குட்பட்டு நிச்சயமாக பேசமுடியாது. எனவே நான் கருதுகிறேன். குற்றச்சாட்டுகள் சொல்லுகிறபோது, அப்படி இருந்தால் என்ன ஏரியாவிலே, எங்கே நடந்தது, எந்த அமைச்சர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று குறிப்பிட்டுச் சொல்லட்டும். ஒட்டுமொத்தமாக இப்படியே பேசிக்கொண்டே போனால், நாங்களும் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தால், அது நியாயம் இல்லை. ஆகையால் ஸ்பெசிபிக்காக குற்றச்சாட்டுகள் இருந்தால் சொல்லுங்கள். நான் முடிந்தால் மறுக்கிறேன். பொதுவாக ஒட்டுமொத்தமாக பேசிக்கொண்டிருப்பது, சபையின் மரபுக்கு உட்பட்டதல்ல. அதைத் தவிர்க்கவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி.

*முற்பகல் 11.05*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ஒரு நல்ல கருத்தை இங்கே சொன்னார்கள். இந்தப் பேரவை அதைப் பின்பற்றும், பின்பற்றுவதற்கு நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள் என்றும் நான் நினைக்கிறேன். எனக்கு ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது. யாரும் வருத்தப்படக்கூடாது. சைத்தான் வேதம் ஓதுவதைப்போல என்று சொல்லுவார்கள். இதே பேரவையிலே எங்களைப் போன்ற பல்வேறு உறுப்பினர்களுடைய கடுமையான கண்டனத்திற்குப் பிறகும்கூட, அன்றைக்கு இருந்த ஒரு பெண் உறுப்பினர் எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்களைப் பற்றி மிகக் கேவலமாகப் பேசினார்கள். இன்றைக்கு இருக்கிற முதலமைச்சரைப் பற்றியும் அவருடைய மகளைப் பற்றியும் கேவலமாகப் பேசிய ஒரு உறுப்பினருக்கு அடுத்த கூட்டத் தொடரிலேயே அமைச்சர் பதவியும் கொடுக்கப்பட்டது. எனவே, அதற்காக இப்போது பேசுகிறார்கள், நியாயப்படுத்துகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. பேசிய உறுப்பினர், மரங்கள் இருந்தது, காணவில்லை என்றுதான் சொன்னாரேயொழிய மரங்களை யார் வெட்டிக்கொண்டு போனார்கள் என்பதை வேண்டுமானால் திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரிந்தால் சொல்லலாம்; அது தப்பில்லை. எனவே, இதற்குப் போய் உரிமை கொடுத்து இருக்கிறீர்கள் என்பதற்காக மிகப் பெரிய நியாயங்களை எல்லாம் தயவு செய்து பேசக்கூடாது என்றும், அதற்கு நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் என்ன விளக்கம் சொல்கின்றீர்கள் என்றும் நான் அறிய விரும்புகின்றேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள், முன்னாலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மகளைப்பற்றியெல்லாம் பேசினார்கள் என்று முன்னாலே இருந்த ஒரு அமைச்சரைப்பற்றி எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அது சபைக் குறிப்பிலேயே இல்லாதது, இருந்து நீக்கப்பட்டது. அது போன்ற நிகழ்ச்சிகளை, செய்திகளை மீண்டும் சபைக் குறிப்பிலே ஏன் நீங்களே ஏற்றிக்கொள்ளவேண்டும்? (குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** சபைக் குறிப்பிலே இருக்கிறது.



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அதை நீங்கள் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இருக்கட்டும் என்றால், இருக்கட்டும்; ஆட்சேபணை எனக்கு ஒன்றும் அதுபற்றி கிடையாது.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களே, எது எது இருக்கவேண்டுமோ அது அது அப்படியே இருக்கும். ஏற்கெனவே இதே மாமன்றத்தில் பேரவைத் தலைவராக இருந்தவர் அவர் பேசிய வார்த்தைகளை அவரே நீக்கிக்கொண்ட வரலாறு எல்லாம் உங்களுக்குத் தெரியும். எனவே, எது நீக்கப்படவேண்டுமோ அது நீக்கப்படும்; எது இருக்கவேண்டுமோ அது இருக்கும்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசுவதைப் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நேரத்தின் அருமை கருதி விளக்கமாக என்னால் பேச இயலவில்லை. எனக்கு ஒன்றிரண்டு நிமிடங்கள் ஒதுக்கித் தரவேண்டும். ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்கிறேன். இன்றையதினம் வீட்டுவசதித் துறை அமைசசராக இருக்கிற மாண்புமிகு பிச்சாண்டி அவர்கள் அன்று ஒரு நிகழ்ச்சிக்கு பட்டப்பகலிலே வருகிறார்கள். வனத்துறை அதிகாரிகள் மடக்கி அவரை அடிக்கிறார்கள். போளூரிலே மிகப்பெரிய போராட்டம், இங்கே உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் ராஜேந்திரன், மற்றும் என்னுடைய தலைமையில் நடைபெறுகின்றது. அப்போது இருந்த அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள், எங்களிடத்திலே வந்து, நடந்தது தவறுதான்; மன்னிப்புக் கேட்கிறோம்; இந்த வனத்துறை அதிகாரியை மாற்றுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இன்னும் நான் ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்கிறேன். அன்றையதினம் வனத்துறை அமைச்சராக இருந்த அன்றைய அமைச்சரை நானே நேரில் சந்தித்து இந்த விளக்கத்தை சொன்னேன். ஆனாலும் அந்த அதிகாரியை மாற்றவில்லை. இன்று வேண்டுமானால் இந்த அரசாங்கம் ஒரு விசாரணையைப் போடுமேயானால், பொதுமக்களிடத்திலே போய் கேளுங்கள், கட்சிக்காரர்கள் தேவையில்லை, பல உண்மைகள் நாட்டுக்கும் தெரியும்; தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவதற்கு அது காரணமாகவும் இருக்கும்; நான் பேசுவது எதையும் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதை நான் தெரிவித்து உங்களுடைய ஆணைக்கு ஏற்ப விளக்கமாகப் பேசாமல், ஒன்றிரண்டு நிமிடங்களிலேயே முடித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய வடஆற்காடு மாவட்டத்திலே இருந்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அன்றையதினம் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்று பிரித்துத் தந்தார்கள். அது பூரணமாக ஒரு மாவட்டமாக விளங்குவதற்கு முன்னதாகவே அன்றையதினம் ஆட்சி கலைக்கப்பட்டது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம், 1990-லே ஒரு மாவட்ட அலுவலகம் கட்டுவதற்காக ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து உத்திரவு பிறப்பித்தார்கள்; ஆனால், கலைஞர் அவர்கள் ஒரு உத்திரவு பிறப்பித்து அதற்கு பின்னால் வருகிற அரசாங்கம் அங்கே கட்டுவதா என்ற காரணத்திற்காக அதை ரத்து செய்து, இந்த ஐந்தாண்டுக்காலமாக காலதாமதம் செய்து ரமண ஆசிரமத்திற்குப் பக்கத்திலே ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து வேலையைத் துவக்கினார்கள். இன்று அது உயர்நீதிமன்றத்திலே ஸ்டேயிலே இருக்கிறது. நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர், இன்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அந்த இடத்தைப் பார்த்து தேர்ந்தெடுத்தார்கள். ஏற்கெனவே மாவட்டத்திற்கு--எல்லாவிதமான பகுதி மக்களுக்கும் வசதியாக இருந்த அந்த இடத்திலே (மணி அடிக்கப்பட்டது) உரையை முடித்துவிடுகிறேன். மாவட்ட அலுவலகத்தைக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று எங்களுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் . . .

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்புகளுக்கு எல்லாம் கவர்னர் உரைக்கு நான் பதில் அளிக்கிற நேரத்தில் அப்பொழுது விளக்கங்களை அளித்துக்கொண்டிருக்க முடியாது என்பதற்காக இடையிடையே ஒன்றிரண்டை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சம்புவராயர் மாவட்டம் முதலிலே என்னுடைய அருமை நண்பர் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, அதைத் தொடங்கி வைக்கக்கூடிய வாய்ப்பு நான் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு தான் ஏற்பட்டது. அப்பொழுது திருவண்ணாமலையில் நடைபெற்ற அந்த விழாவில்



சம்புவராயர் மாவட்டத்தைத் தொடங்கிவைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்காக ஒரு பகுதியையும் தேர்ந்தெடுத்து, அங்கே தான் கலெக்டர் அலுவலகம் கட்டப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல என்ன காரணத்தினாலோ, வேண்டுமென்றே முதலில் இருந்த அரசு தேர்ந்தெடுத்த இடத்தை விட்டுவிட்டு ரமண ஆசிரமத்திற்கு இடையூறாக ஒரு இடத்தில் கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்து, அதன் காரணமாக அதில் தடை வாங்கப்பட்டு, கட்டிடம் கட்டுகிற பணியே இன்றைக்கு நின்று போயிருக்கிறது. இது குறித்து ரமண ஆசிரமத்தின் சார்பாகவும் எனக்கு தகவல் தரப்பட்டுள்ளது, விண்ணப்பம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்கு முன்புகூட அந்த விண்ணப்பம் எனக்கு வந்து சேர்ந்திருக்கிறது. எனவே, ரமண ஆசிரமம் என்னுடைய கொள்கைக்கு உகந்ததா அல்லவா என்பது வேறாக இருந்தாலும்கூட--அந்த ஆசிரமத்திற்கு வருகின்ற பக்தர்கள் பலபேர், அவர்களுடைய முறையீட்டின்படி--நிச்சயமாக கலெக்டர் அலுவலகம் அந்த இடத்தில் கட்டப்படாமல் முன்பு பார்த்த இடத்திலேயோ அல்லது வேறு தகுதியான இடத்திலோ தான் கட்டப்படும் என்ற உறுதியை திருவேங்கடம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். எங்களுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் விவசாயத்தையே தான் நம்பி இருக்கின்ற மாவட்டம். ஏற்கெனவே நம்முடைய அரசு இருந்தபொழுது, நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் செண்பகதோப்பு அணை--ஏற்கெனவே கால்கோள் விழா இவைகள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களால் செய்யப்பட்டன. அதை அப்படியே கைவிட்டுவிட்டார்கள்--அதேபோல, குப்பநத்தம் அணைக்கட்டை கட்ட நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். அவைகளும் கைவிடப்பட்டன. மீண்டும் இந்த அரசு எங்களுடைய மாவட்டத்திலே செண்பகதோப்பு அணை, குப்பநத்தம் அணையைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு கூட்டுறவுத் துறை சார்பிலே

தாய் உள்ளத்தோடு ஒரு சர்க்கரை ஆலையை அறிவித்தார்கள். ஆனால், நம்முடைய ஆட்சி போனதற்குப் பிறகு அது ஒரு தனியார் ஆலையாக அந்தப் பகுதிக்கு வந்தது. ஆனால், அதைக்கூட இன்று வரை ஆரம்பிக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது). ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். கரும்பு பதிவு செய்யப்பட்டு, ஆனால் 20 மாத காலமாக அந்த ஆலையும் செயல்பட முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே எங்களுடைய மாவட்டத்திலே அந்த தனியார் ஆலையை சேர்த்தாலும் கூட இரண்டு ஆலைகள் தான் வருகின்றன. மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக முதலமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொள்வது, திருவண்ணாமலையில், அதே செய்யாற்றங்கரையிலேயே இன்னும் செங்கத்திற்கும் திருவண்ணாமலைக்கும் மையத்தில் புதிதாக ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை தந்து, அந்த விவசாயிகளுக்கு, திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டத்திற்கு ஒரு நல்ல செய்தியை, ஒரு நல்ல நிலையை தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, எங்களுடைய கலசப்பாக்கம் தொகுதியிலே ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும். காரணம், எங்கள் பகுதியிலே எல்லா என்ஜினியரிங் கல்லூரிகளும் வடக்கே போய்விட்டன. அதனால் எங்கள் மாவட்டத்திற்கு ஒரு புதிய வேளாண்மைக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பித்து, அந்த மாவட்டத்தை நீங்கள் நல்ல முறையிலே வளப்படுத்த வேண்டும். என்றைக்கும் உங்கள் பின்னாலே இருக்கின்ற அந்த மாவட்டத்திற்கு நீங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றிகூறி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஊராட்சி, நகராட்சி ஆகியவைகளுக்கு மின் விளக்கு சம்பந்தமாகவும், குழாய் விளக்குகள் மற்றும் சோக்குகள் வாங்குவதில் ஏராளமான குறைபாடுகள் காணப்படுகின்றன, அவைகள் எரிவதில்லை என்று சொல்லுவதோடு மாண்புமிகு உறுப்பினர்கள் நிறுத்திக்கொள்கிறார்கள். மூத்த உறுப்பினராகிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்களும் அதோடுதான் நிறுத்தியிருக்கிறார்கள். எங்களிடத்திலே நேரில் சொல்கிறவர்களும் அந்தக் குறையை மட்டும் தான்



சொல்கிறார்கள். இப்படி செய்தால் நலமாக இருக்கும், இதை வாங்கலாம், இந்த கம்பெனியைத் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ளும்போது இப்படி தான் தொடர்பு கொள்ள வேண்டுமென்று நீங்கள் பேசுகிறபோது தேவைப்பட்டால் அதைக்குறிப்பிடுகிற வகையில் நீங்கள் பேசினால் எனக்கு நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். காரணம், ஒரு வார காலமாக அதைப்பற்றி அதிகாரிகளோடு தொடர்புகொண்டும் ஒரு முடிவுக்கும் வர என்னால் இயலவில்லை. அதற்குக் காரணம் ஏற்கெனவே எங்கள் அரசு இருந்தபோது ஒரு முடிவுக்கு வந்து அது 3,4 மாத காலம் சிறப்பாக நடைபெற்று இடையிலே அது கைவிடப்பட்டிருக்கிறது. எதற்காக கைவிடப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் காணப்படவில்லை. கைவிடப்பட்டிருக்கிறதே தவிர வேறு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆகையினால் அதற்கான சிறந்த காரணங்களைச் சொல்லி, இப்படி இப்படி அதை வாங்கவேண்டும், அதை இந்த இந்த முறையில் வாங்கவேண்டுமென்று நீங்கள் எல்லாம் பேசும்போதோ அல்லது எனக்கு எழுத்து மூலமாக உறுப்பினர்கள் எழுதி தந்தாலோ, கூடுமானவரை அதைப் பின்பற்றி நடக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

*முற்பகல் 11.15*

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் முதலிலேயே சொன்னேன். ஏற்கெனவே இருந்த அரசு டெண்டர் கோரி செய்தார்கள். அவர்களுக்கு எந்தக் கம்பெனி அதிகமாகக் கமிஷன் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு ஆர்டர் கொடுத்தார்கள். அதிகாரிகள் மைசூர் கம்பெனி என்று சொல்கிறார்கள். வாங்குகிறார்கள், மாட்டுகிறார்கள், ஆனால் எரிவதில்லை. 1989–90ல் செய்ததைப் போல இப்போதே உடனடியாக நாம் வாங்கலாம். தனியாருக்குக்கூட வேண்டாம், எல்லா இடத்திலும் சூப்பர் மார்க்கெட் இருக்கிறது. நல்ல ஸ்டாண்டர்டு கம்பெனிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. பணம் கொஞ்சம் அதிகமாகலாம். ஆனால் அதிக நாட்கள் லைஃப் வரும். அந்த வகையில் உடனடியாக வாங்கலாம். பிறகு பொறுமையாக அதைப்பற்றி அமைச்சர் விசாரித்து அது நல்ல கம்பெனியா இல்லையா என்று பார்த்து நிரந்தரமாக வாங்கலாம். (குறுக்கீடு). இன்றைய நிலையில் இப்போது காமதேனுவில் வாங்கவேண்டுமென்று தந்தி மூலம் எல்லா கலெக்டர்களுக்கும் தெரிவிக்கலாம். கலெக்டர்களுக்கு டெலக்சில் தெரிவிக்கலாம். (மணியடிக்கப் பெற்றது)

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். சுந்தரம்.

***திரு. பி.ஆர். சுந்தரம்:*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தில் வாழையடி வாழை என வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் தானைத் தலைவன், என்னை ஆளாக்கிய மறைந்த புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் என்னை அரவணைத்து இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவைக்கு அறிமுகப்படுத்திய என்னுடைய தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மரியாதைத் தமிழ்மணக்கும் கொங்குச் சீமையில் மாங்கனி நகராம் சேலம் மாவட்டம் ராசிபுரம் மக்களுக்கும் எனது முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த 11-வது சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரைமீதான விவாதத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொறடா என்கின்ற முறையில் சட்டப்பேரவையில் என் கன்னிப்பேச்சினைத் தொடங்குகின்றேன். மேதகு ஆளுநர் உரை பத்தி 6-ல் இந்தித் திணிப்பைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்பதுதான் எங்களுடைய, புரட்சித் தலைவியை ஒப்பற்ற தலைவியாக ஏற்றுக்கொண்டிருக்கும் எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்ினுடைய லட்சியமாகும். தமிழை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கவேண்டி அரசியல் சட்டம் மாற்றப்படவேண்டும் என்பதுதான் எங்கள் கழகத்தின் கொள்கையுமாகும். இந்தக் கொள்கையை நாங்கள் வரவேற்கும் பட்சத்தில், ஒன்றை இந்த அரசுக்கு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். மறைந்த பாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது, இந்திமொழி அயல்நாடுகளில் வளருவதையும், பரப்பப்படுவதையும் அறிந்துவர, இடம்பெற்ற குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினரை அன்றைய முதல்வர் அவர்கள் அனுப்பிவைத்த நிகழ்ச்சி போல, இனி வருங்காலங்களில் அத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் இந்த அரசு பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது இந்த அரசின் நிலைப்பாடு என்று இதிலே சொல்லப்பட்டுள்ளது. *(குறுக்கீடு)*



***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** திரு. சி.டி. தண்டபாணி, அமருங்கள், ஒரு உறுப்பினர் கன்னிப்பேச்சை ஆற்றும்போது யாரும் குறுக்கிடக்கூடாது என்பது மரபு. ஏற்கெனவே நீங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். மரபைக் கடைப்பிடித்து அமரவும். திரு. சுந்தரம் தொடர்ந்து பேசவும்.

***திரு. பி.ஆர். சுந்தரம்:*** தமிழ்மொழியை வளர்க்கும் நோக்குடன் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் டாக்டர் புரட்சித் தலைவர் நடத்தினார். எட்டாவது உலகத்தமிழ் மாநாடு கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்களால் தஞ்சையில் நடத்தப்பட்டது. அந்த இரண்டு மாநாடுகளுக்கும் இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன. தமிழ்மொழியை வளர்ப்பேன் என்று கூறும் இன்றைய முதல்வர் அவர்கள் மாநாட்டுக்கு வருவதற்கு எண்ணம் இல்லை என்றாலும், அந்த மாநாட்டை வாழ்த்த அவருக்கு மனம் இல்லை. இருப்பினும் இந்த அரசு அறிவித்த தமிழ் ஆட்சி மொழித் துறை அமைச்சகத்தை வரவேற்கிறேன். இத்தோடு அனைத்திலும் தமிழ், அறிவியலிலும் தமிழ்; இன்றும் தமிழ், என்றும் தமிழ் என்று உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு மீண்டும் உயிர்த்துடிப்பை அளித்தது எங்கள் தலைவி அவர்களின் இனிய முழக்கம் என்பதை இந்தப் பேரவையில் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

முற்பகல் 11-20

பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியவர்களுக்கு...(குறுக்கீடு)

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** திரு. குமாரதாஸ், உறுப்பினர் முதல்முதலாகப் பேசுகிறார். நீங்கள் எது சொல்வதாக இருந்தாலும் அவர் பேசி முடித்த பிறகு சொல்லலாம். திரு. சுந்தரம் தொடர்ந்து பேசுங்கள்.

***திரு. பி.ஆர். சுந்தரம்:*** வேலை வாய்ப்பிலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டை அரசியல் சட்டமாக்க பாடுபட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலம் காலமாக பாதிக்கப்பட்ட மக்களின் உணர்ச்சிகளுக்கு, அவர்கள் பட்ட காயங்களுக்கு வார்த்தைகளால் ஒத்தடம் தராமல், சட்டப்பாதுகாப்பு மூலம் செயலில் தீர்வு தந்தது எங்கள் கழக அரசு என்று கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதுவரையில் இட ஒதுக்கீடு அரசு உத்தரவாகத்தான் இருந்து வந்தது. எங்கள் அரசு தான் சட்டமாக ஆக்க முயற்சி எடுத்துக் கொண்டது. சட்டமாக ஆக்குவதற்கு மட்டுமல்லாமல் அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்தது. இத்துடன் நின்றுவிடாமல் நீதிமன்றத்திற்கு சென்று தடையாணை வாங்கக்கூடாது என்பதற்காக அரசியல் சட்டத்தில் 9-வது அட்டவணையில் சேர்க்க எங்கள் அரசு நடவடிக்கை எடுத்து வெற்றியும் கண்டது. இதைச் செய்து முடிக்க அன்றைய இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்களை எங்கள் முதல்வர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களோடு சென்று பார்த்தார்கள். நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டம் விவாதத்திற்கு வருகிறபோது நாடாளுமன்றத்தில் இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்பதற்கு எங்கள் பொதுச் செயலாளர் நாடாளுமன்றத்தில் உள்ள எல்லா கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதி, ஒத்துழைப்பைப் பெற்றுத் தந்தார்கள்.

மேதகு ஆளுநர் உரையில் கூட்டுறவுத் தேர்தல் நடத்துவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தகுதியற்ற நபர்களை நீக்கி விட்டு, தகுதியுள்ள நபர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து தேர்தல் நடத்த மேலும் 3 மாத கால அவகாசம் தேவைப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தான் திருடி, மற்றவர்களை நம்ப மாட்டாள் என்று கூறுவார்கள். அதைப் போல திராவிட முன்னேற்றக் கழகம் தன்னைப் போல மற்றவர்களை கருதிக் கொள்கிறது. தகுதியற்ற உறுப்பினர்களை யார் சேர்த்தார்கள்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. திருவேங்கடம். இது உறுப்பினருடைய கன்னிப் பேச்சு. யாரும் அதில் குறுக்கிடக்கூடாது. ஆகவே தான் எல்லோரும் அமைதியாக உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு இந்த அரசு அச்சாரம் போடுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. புதிய உறுப்பினர்களை முறையற்ற முறையில் சேர்க்காமல் இருப்பதற்கு யார் உறுதி அளிப்பது? அப்படி உறுதி அளிக்க வேண்டுமென்றால் சேர்க்கப்படும் உறுப்பினர்கள் சரிதானா என்று பார்ப்பதற்கு இந்த அரசு என்ன திட்டம் வைத்துள்ளது என்பதை தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.



நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் குறிப்பிட்ட நாளில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலைக்கு அரிசி வழங்கிய சாதனைகளை எங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று வழங்கிய எங்கள் கழக அரசின் சாதனையும், குடும்ப கார்டு ஒன்றுக்கு 20 கிலோ அரிசி வழங்கிய எங்கள் தலைவி அவர்களுடைய சாதனையும் இந்த ஆட்சியில் தொடரும் என்று நம்புகிறேன்.

இந்த அரசு சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் முழு கவனம் செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் ஏற்படும் தூய்மைக்கேடு, தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இரண்டையும் கருத்திற்கொண்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதிலே விவசாயிகள் பாதிக்கப்படாமல், தோல் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பணியாளர்கள் வாழ்க்கையும் பாதிக்கப்படாமல் அரசு முயற்சி எடுத்து முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சார்ந்திருக்கும் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் சுமார் 600 ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தி செய்யும் ஆலைகள் இருக்கின்றன. அவை அனைத்தும் சிறு தொழில் நிறுவனங்கள். அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை மீண்டும் நாங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்தலாம் என்றாலும் அந்தத் தண்ணீரை சுத்திகரிப்பு செய்து மீண்டும் விவசாயத்திற்கு பாய்ச்சுவது என்பது நலிவடைந்த நிலையில் உள்ள அந்த ஆலை அதிபர்களால் முடியாத செயல் என்பதைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து அவர்கள் அந்தத் தொழிலை செய்து வருகிறார்கள்.

*முற்பகல் 11-25*

ஆனால், இந்த ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தொழில் என்பது சிறு விவசாயிகளால் சிறு தொழிலாக எங்கள் சேலம் மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபாய் மதிப்பிலே கட்டப்பட்டு இருக்கிற தொழிற்சாலைகளுக்கு, அவர்கள் கூறும் விதியின்படி, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபாய் செலவில் இந்தச் சுத்திகரிப்பு நிலையம் கட்டி, அந்தத்

தண்ணீரை மீண்டும் விவசாயத்திற்குப் பாய்ச்ச வேண்டும் என்பது-மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்-இயலாத காரியம். நலிவு அடைந்த நிலையில் உள்ள அந்தத் தொழிலுக்கும், தோல் பதனிடும் தொழிற்சாலை பிரச்சினையைப் போல, அதையும் மனதில் கொண்டு ஜவ்வரிசி ஆலை அதிபர்கள், விவசாயிகள் மற்றும் வேலை செய்யும் தொழிலாளர்கள், சுகாதாரம் ஆகியவற்றை மனதில் கொண்டு, முத்தரப்புப் பேச்சு வார்த்தை நடத்தி, அந்தத் தொழில் மேலும் நசிந்துவிடாமல் இருக்க இந்த அரசு தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 1 நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, சென்ற சனிக்கிழமை அன்று உங்களுடைய தோழமைக் கட்சி உறுப்பினர்களுக்கு நீங்கள் 30 நிமிட நேரம் ஒதுக்கித் தந்தீர்கள். தற்போது திரு. திருவேங்கடம் அவர்களுக்கு கிட்டத்தட்ட 15 நிமிடம் ஒதுக்கித்தந்தீர்கள். உங்களுடைய தோழமைக் கட்சிக்கு ஒரு நியதி, எங்களுக்கு ஒரு நியதியா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த இருக்கைக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது. விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசிய காரணத்தால், அவர்களுக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டது. இப்போது கூட 10 நிமிடம் பேசி இருக்கிறீர்கள் என்றுதான் நினைவூட்டினேன். நீங்கள் சீக்கிரம் வாசித்து முடித்துவிடுவது நல்லது.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் வாசிப்பதாக.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடித்துவிடுவது நல்லது. (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 16 வயது வரையில் உள்ள சிறார்கள் அனைவரும் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டு, கல்வி கற்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஒன்றும் புதிதல்ல. இந்தத் திட்டம் 125 கோடியே 8 லட்சம் ரூபாய் செலவில், 1994-95-இல் எங்களுடைய அரசால் மேற்கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் 14 வயது வரையிலான அனைத்து சிறார்களும் தொடக்கப்பள்ளியில் நின்றுவிடாமல், தொடர்ந்து



பள்ளிக் கல்வி பெறும் வகையில், சட்டம் ஒன்றை எங்களது அரசு கொண்டுவந்துள்ளது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத குடியிருப்புகள் இல்லை என்ற நிலை வரவேண்டும் என்று கூறியுள்ளீர்கள். இந்த ஆண்டு இறுதியில், 1996 ஆம் ஆண்டு இறுதியில் கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வரும் என்று கூறியிருக்கிறீர்கள். இந்தத் திட்டத்தினை, 1995-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் 27 ஆம் நாள் ஹைதராபாத்தில் நடைபெற்ற முதல்வர்கள் கூட்டத்தில், ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்களும், எங்களது மாண்புமிகு முதல்வர் அவர்களும் விவாதித்து பின் 1995 டிசம்பர் மாதத்திற்குள் குறைந்த அளவு 300 கோடி கன அடி தண்ணீராவது சென்னை மாநகருக்குக் கிடைக்கும் என்று ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள். அதன் விளைவாக 300 கோடி கன அடி தண்ணீர் கிடைக்கப்பெறும் என்றும், அதை சுத்திகரிப்பு செய்து, வினியோகம் செய்யும் வகையில் 177 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு இறுதிக்குள் சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதிநீர் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதேவேளையில் கனி கொய்யும் நேரத்தில், விதையிட்டவர்களையும், நீர் பாய்ச்சி உரமிட்டு வளர்த்தவர்களையும் நன்றியுள்ள நெஞ்சங்கள் மறவாது என்று நினைவு கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஊராட்சி மன்றத் தேர்தல்கள், இந்தச் சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடத்தும் வழிமுறைகளைப் பற்றித் தெரிந்து தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளீர்கள். ஊராட்சி மன்றங்களுக்கு எந்த அடிப்படையில் எவ்வாறு தேர்தல்களை நீங்கள் நடத்தப் போகிறீர்கள் என்பதைப் பற்றி மேதகு ஆளுநர் உரையில் விளக்கமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமய சார்பின்மைக் கொள்கையையும், சமுதாய நல்லிணக்கத்தையும் போற்றிப் பேணுகின்ற அரசு என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அதற்கு ஏற்ப, முந்தைய எங்களது ஆட்சியில் நடைபெற்று வந்த கோவில் பூசைகள், ஒருகால பூசைகள் அனைத்தும் தொடரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய அரசு, தேர்தல் வாக்குறுதியில், தமிழகத்தில் உள்ள பினாமி நிலங்களைக் கண்டுபிடித்து, அந்த நிலங்கள் நிலமற்றவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தது. இந்த மேதகு ஆளுநர் உரையில், அதுபற்றி ஏன் குறிப்பிடப்படவில்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

நெசவாளர்களின் பிரச்சினையை மனதில் கொண்டு, அவர்களுடைய கோரிக்கையான 22 அம்சத் திட்டங்களைப் பற்றி, மேதகு ஆளுநர் உரையில், குறிப்பிடாதது வருத்தத்தை அளிக்கிறது. இன்றைய அரசு பதவி ஏற்றவுடன், முதன் முதலாக அறிவித்தது சுமார் 14 கோடி ரூபாய் தரை வரி ரத்து என்று கூறியுள்ளது. இந்தத் தரை வரியை வசூலிக்கக்கூடாது என்று எங்களுடைய அரசு 17-3-1996அன்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உத்தரவிட்டு இருக்கிறது. அந்த உத்தரவாதத்தைத்தான் நீங்கள் கையெழுத்து இட்டிருக்கிறீர்கள் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களது கழக பொதுச் செயலாளர் அவர்கள் 1991-ஆம் ஆண்டில் முதன் முதலில் பதவியேற்றவுடன் அவர் போட்ட முதல் கையெழுத்து மது ஒழிக்கப்பட வேண்டுமென்பதுதான். அதிலே கிட்டத்தட்ட ரூ. 350 கோடி இழப்பு ஏற்பட்டாலும் அவர்கள் அந்தச் சட்டத்தை இயற்றி, பல லட்சக்கணக்கான தாய்மார்களுடைய குறைகளை நிவர்த்தி செய்திருக்கிறார்கள் என்று கூறிக் கொண்டு என்னுடைய தொகுதியைப் பற்றி நிறைய பேச வேண்டியிருந்தாலும்...(குறுக்கீடு)

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு, சங்கே முழங்கு" என்று கூறி, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் பேசுகிறபோது கன்னி உரை என்கிற காரணத்தினாலே யாருமே குறுக்கிடாமல், மரபு கருதி, அமைதியாக இருந்தோம். அவர்கள் கூறுகிறபோது உலகத் தமிழ் மாநாடு என்ற ஒன்று நடந்தது, அதிலே ஏன் இன்றைய முதல்வர் வரவில்லை என்று அவர் ஒரு வினாவைத் தொடுத்திருந்தார்கள். மயிர்



நீப்பின் உயிர் வாழா கவரிமான் என்பதற்கிணங்க முறையான அழைப்பு இல்லாமல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்று அனுப்பப்பட்ட அழைப்பை ஏற்று யார்தான் அங்கே வருவார்கள்? அந்நாள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த எங்களுக்கே அந்த கதி, அப்போது எங்களுக்கே முறையான அழைப்பு இல்லாமல் நாங்களே அதில் கலந்துகொள்ளவில்லை. ஆகவே ஊழல் மாநாடாகத்தான் அது இருந்ததேயொழிய உலகத் தமிழ் மாநாடாக இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகத் தமிழ் மாநாடு என்கிறபோது தமிழினுடைய ஒட்டுமொத்த உருவமாக அமர்ந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவரே தமிழ் என்று இருந்த காரணத்தினால் அவர் வராமல் நின்று இருக்கலாம். முறையான அழைப்பு இல்லை என்பதுதான் உண்மை. ஏதோ ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள். இங்கே பேசுகிறபோது முதல் கையெழுத்து போட்டவுடன் மதுவை ஒழித்துவிட்டதாகச் சொன்னார்கள். மது என்பது தெருத் தெருவாக ஆறாக ஓடிய கதை ஐந்து ஆண்டுகாலம் நீடித்தபோதும் தொடர்ந்து நாங்கள் அதை வலியுறுத்தியும் அது நிறுத்தப்படவில்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து மாண்புமிகு உறுப்பினர் அது எப்படி ஒழிந்தது என்பதை விளக்குவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னுடைய கன்னிப் பேச்சில் கூட்டுறவுத் துறை தேர்தல் நடைபெறவில்லை என்ற ஆதங்கத்தை வெளியிட்டார்கள். ஐந்து ஆண்டுக்காலம் இல்லாத ஆதங்கம் இன்றைக்கு அவர்கள் படிப்பினைக்குப் பின்னால் வந்துள்ளதாக கருதுகிறேன். உயர்நீதிமன்றம் தேர்தல் நடத்த வேண்டும், உச்ச நீதிமன்றம் கூட்டுறவுத் தேர்தலை நடத்தவேண்டுமென்று சொல்லியும்கூட, அதற்கான எந்த ஆயத்த நிலையும் இல்லாமல் இருந்தது முந்தைய அரசு. அவர்களுடைய உறுப்பினரவர்கள் இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். பேரவையின் தகவலுக்கு ஒரு அதிர்ச்சியான செய்தியைக் கூற விழைகிறேன். 28-7-91 முதல் 31-7-92 முடிய ஆரம்ப வேளாண்மைத் தொடக்க சங்கங்களுக்கு ஏறக்குறைய 21.69 லட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, 21.67 லட்சம் உறுப்பினர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி அக்கிரமம், அநியாயம் நடந்திருக்கிற அந்த ஆரம்ப கூட்டுறவு சங்கங்களுடைய உறுப்பினர்கள் தேர்தலை விரைவுபடுத்தி இந்த அரசு விரைவில் நடத்தவேண்டும் என்பதுதான் முதல்வருடைய ஆணை. விரைவில் அது நிறைவேற்றப்படும். *(குறுக்கீடு)*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்களும் பழைய ஸ்பீக்கர் மாதிரி என்ன, என்ன என்று கேட்க ஆரம்பித்து விட்டீர்கள். *(குறுக்கீடு)*.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேட்கலாம், தப்பு அல்ல. இந்த இருக்கையின் மீது உங்களுக்கு இருந்த அச்சம் இன்னும் அகலவில்லை என்று நினைக்கிறேன். *(சிரிப்பு)* நீங்கள் தைரியமாகப் பேசலாம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இங்கே கள்ளிப் பேச்சு பேசுகிறபோது ஏதோ பழைய முதலமைச்சருக்கு தமிழ் மீது அளவு கடந்த பற்று இருந்த மாதிரி குறிப்பிட்டுப் பேசினார்கள். அந்த நண்பருக்குக் கூட தெரிந்திருக்காது என்று கருதுகிறேன். நம்முடைய நிரந்தர முன்னாள் முதலமைச்சர், பாராளுமன்றத்தில் மேலவை உறுப்பினராக இருந்த நேரத்தில், இந்தியிலேயே அங்கே உரையாற்றி இருக்கிறார்கள். இந்தியிலே அங்கே உரையாற்றிவிட்டு, இங்கே தமிழிலே தனக்கு பற்று இருப்பதாகக் காட்டிக்கொள்வது மிகக் கேவலமான ஒரு செயலாக இருக்கும். எனவே தமிழ்மீது பற்று இருப்பது போல பாசாங்கு காட்டுபவர்களை உலகுக்கு நீங்கள் அடையாளம் காட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-35*

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தி திணிக்கப்படுவதை எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறதோ அது போல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கிறது என்ற பொருளிலே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் உரையாற்றிய போது சொன்னார்கள். நான் இதுகுறித்து மீண்டும் சொல்லவேண்டும் என்று சொன்னால், 1977லே, புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்தபோது சொன்னதை நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு என்பதைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இரண்டும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்து இந்தி திணிப்பை எதிர்க்கும் என்று அன்றைய முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களே பேசினார்கள். அது வேறு பிரச்சினை. ஆனால் ஒருவருக்கு பல மொழிகள் தெரிந்திருப்பது இழுக்கென்றோ, அவமானமென்றோ சொல்ல முடியாது. முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு பல மொழிகள் தெரிந்திருக்கலாம். தெரிந்த மொழியிலே பேசலாம். இந்தியிலே பேசினால் பேசுவதே தவறு, மொழி தெரிந்திருப்பதே தவறு என்பதைப்போல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கொச்சைப்படுத்துவது நியாயம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுகிற அன்பர்கள், முதலமைச்சரைப் பார்த்தோ, அமைச்சர்களைப் பார்த்தோ சொன்னால், அதற்கு ஆளும் கட்சியின் சார்பிலே தான் பதிலை எதிர்பார்க்கிறோமே தவிர, பக்கத்திலே இருக்கிற காங்கிரஸ் தோழர்கள், தமிழ் மாநில காங்கிரஸ் தோழர்கள் ஏன் இவ்வளவு ஜால்ரா போட இங்கே தொடங்கியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு ஆக்கபூர்வமான எதிர்கட்சியாக இருந்து செயல்படவேண்டும் என்று தான் பொது மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். பெரிய தலைவர் மூப்பனார் அவர்களே வெளியிலே இதை சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்களே தவிர, அரசாங்கத்திற்கு நீங்கள் வக்காலத்து வாங்கி, வாங்கி பேசவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கவில்லை. இது வேண்டுமானால் முதலமைச்சரை மகிழ்ச்சிப்படுத்தலாம், வெளியே இருக்கிற மக்களை மகிழ்ச்சிப்படுத்தாது என்கிற உணர்வோடு நீங்கள் தயவு செய்து பேச வேண்டும் என்று முன்னாள் தோழர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முன் வரிசையில் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களை விட, தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் அதிகமாக ஆத்திரப்படுகிறார்கள் என்று கேட்கிறார்கள். நீங்கள் ஒருவர் தான் இருந்தீர்கள், அடி வாங்கினீர்கள், நாங்கள் 61 பேர்கள் இருந்தோம், அடி வாங்கினோம். ஆகவே அங்கே ஒரு பங்கு வரக்கூடிய உணர்வை விட 61 பங்கு அதிகமாக எங்களுக்கு உணர்வு வரத்தானே செய்யும், எப்படி அமைதியாக இருக்க முடியும்?

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த உணர்வு எல்லாம் உங்களுக்கு வந்திருக்கிறது. நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தேர்தலுக்கு முன்னாலே 30 நாட்களுக்கு முன்னாலே தான் வந்ததே தவிர 3 ஆண்டு காலம் இங்கே நீங்களும் ஜால்ரா அடித்ததையெல்லாம் மறந்து விடாதீர்கள். அதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாராவது ஒருவர், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வெளிப்படையாகவே கேட்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டிற்கு யார்யாரெல்லாம் போகவில்லையோ அவர்களுக்கெல்லாம் தமிழ் மீது பற்று இல்லை என்று பொருள் என்று சொன்னால், இன்றைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூட அந்த உலகத் தமிழ் மாநாட்டிற்கு போகவில்லை என்ற காரணத்திற்காக அவருக்கு தமிழ் உணர்வு இல்லை என்று பொருளா என்று அறிவிக்க வேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது என்று சொன்னால் முதலமைச்சர் அவர்கள் என்ன காரணத்தினாலே போகவில்லை என்பதை விளக்குவதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் இருக்கிறது. அவர்தான் முதலமைச்சர். எழுந்து சொல்லலாம், பேசலாம். அதற்கு நீங்கள் ஏன் இவ்வளவு வக்காலத்து வாங்குகிறீர்கள்? உங்களுடைய பிரதமர் அன்றைய நரசிம்ம ராவும் தானே அங்கே வந்தார்? இங்கே பேசுகிற அன்பர்கள் எல்லாம் அன்றைக்கு ராஜிநாமா செய்தீர்களா? நீங்கள் தானே போய் வரவேற்றீர்கள்? திருச்சியிலே போய் யார் வரவேற்றது? அன்றைய பிரதமராக இருந்த திரு. நரசிம்ம ராவ், காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வந்தபோது, அவரை நீங்கள் வரவேற்கவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் ஒரு உறுப்பினரால் ஒரு தவறான கருத்து சொல்லப்படும்போது அது தவறான கருத்து என்பதை



உடனடியாக உணர்கிற மற்றொரு உறுப்பினர் அதை எடுத்துக்காட்டுவது தவறில்லை. அவர் சொன்னார், தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டிற்கு நான் செல்லவில்லை, ஆகவே எனக்கு தமிழ் உணர்வு இல்லை என்பதைப் போல அண்ணா தி.மு.க. உறுப்பினர் பேசினார். முறையாக எனக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. முன்னாள் முதலமைச்சர் என்று கூட முகவரி இட்டு அனுப்பப்படவில்லை. மு. கருணாநிதி, முன்னாள் எம்.எல்.ஏ. என்று அனுப்பப்பட்டது. நான் கூட அதை மறந்திருந்தேன். மறப்போம், மன்னிப்போம் என்ற அண்ணாவின் மரபிலே வந்தவர்கள் அல்லவா, அதனால் மறந்திருந்தேன். நம்முடைய அன்பிற்குரிய ஞானசேகரன் அவர்கள், திடீர் என்று அதை நினைவுபடுத்திக் கொண்டு, அதை எடுத்துச் சொன்னார். அது எப்படி தவறு, எப்படி ஜால்ரா ஆக முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு போன்ற இந்த அவையினுடைய மூத்த உறுப்பினர்கள், ஜால்ரா போன்ற அந்த வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்துவது நம்முடைய மரபுக்கு ஏற்றதாகத் தெரியவில்லை. ஒருவேளை அது 'பார்லியமென்டரி வேர்ட்'-ஆ, இல்லையா என்பது வேறு விவகாரம். இருந்தாலும் அந்த வார்த்தையைப் பயன்படுத்துவது திருநாவுக்கரசு போன்ற, நாடாளுமன்ற மரபுகளை, சட்டமன்ற மரபுகளை உணர்ந்தவர்களால் பயன்படுத்தப்படக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தை இதோடு முடித்துக். கொள்ளலாம். முதல்வர் அவர்கள் விளக்கமாகச். சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சபையினுடைய மரபுக்கு உட்பட்டதாக இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, ஜால்ரா என்று சொன்னவார்த்தையை வேண்டுமானால் நீங்கள் சபைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுங்கள், எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் சொல்ல வந்த பொருள் என்னவென்றால், நாங்கள் குற்றச்சாட்டு சொன்னாலும் சரி, ஆளும் கட்சியிடமிருந்து ஏதாவது பதிலை எதிர்பார்த்தாலும் சரி, ஆளும் கட்சியில் நிறைய பேசத் தெரிந்த--முதலமைச்சர் நன்றாகப் பேசத் தெரிந்தவர் இருக்கிறார். அமைச்சர்கள் எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நன்றாகப் பேசத் தெரிந்தவர்கள்--அவர்கள் பதில் சொல்லட்டும். எதற்காக தமிழ் மாநில காங்கிரசினர் எழுந்து

எழுந்து பரிந்து பேசுகிறார்கள் என்றுதான் கேட்டேன். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கு எல்லோருக்கும் பதில் சொல்கிற உரிமையுண்டு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எதற்காக அவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்க யாருக்கும் உரிமையில்லை. அவர்களுக்கு சொல்ல உரிமையிருக்கிறது. சொல்கிறார்கள். நீங்கள் ஏன் வக்காலத்து வாங்குகிறீர்கள் என்று யாரும் கேட்க முடியாது. அவர்களுக்கு உரிமையிருக்கிறது. தோழமைக் கட்சி என்பதற்காக அவர்கள் எதிரான கருத்துக்களை சொல்லக்கூடாதா, என்ன? அன்றைக்கு அழகிரி அவர்கள் பேசினார்கள். எல்லாக் கருத்துக்களையும், கவர்னர் உரையில் இருந்த எல்லாக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டதாக அவர் சொல்லவில்லை. அவர் திருத்தங்களைச் சொன்னார். அதைப் போல தோழமைக் கட்சியைச் சேர்ந்த சுப்பராயன் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டதாகச் சொல்லவில்லை. வேறுசில விட்டுப்போய் இருக்கிற, அவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டும் என்ற கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். எனவே, அவர்களுடைய தலைவர் திரு. மூப்பனார் அவர்களும், அதைப் போலவே இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் திரு. நல்லகண்ணு அவர்களும் என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்றால் நாங்கள் ஆக்கபூர்வமான எதிர்கட்சியாக செயல்படுவோம், எதிரிக் கட்சியாக செயல்பட மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் தவறு செய்தால் தட்டிக் கேட்போம் என்று சொன்னார்கள். நான் அதைக்கூட குட்டிக் கேளுங்கள் என்றேகூட சொல்லியிருக்கின்றேன். 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்' என்பதை உணராத அரசு அன்று இருந்தது. உணர்ந்த அரசு இன்று இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்திலே, விவாதத்திலே இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே, "தமிழ் உணர்வு இல்லை, தமிழ் உணர்வு இல்லை" என்று ஆரம்பித்து, விவாதம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. எனவே, இதோடு முற்றுப்புள்ளி வைத்து, அடுத்த உறுப்பினர் ஆர். சிவராமன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.



**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடி வாங்காதவர்கள், அடி வாங்கியதாக தவறான தகவலைச் சொல்லலாமா...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தாமரைக்கனி, இப்படி முறைகேடாக நடப்பது நன்றாக இல்லை. நான் இந்த இருக்கையில் இருக்கின்ற காரணத்தால் நான் ஒரு கட்டுப்பாட்டுக்குள், மரபுக்கு உட்பட்டு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். நானே பாதிக்கப்பட்டவன் அன்றைக்கு. நான் பேச ஆரம்பித்தால் நன்றாக இருக்காது, உட்காருங்கள். யார் யார் அடிபட்டார்கள், எப்படி, எப்படி நடத்தப்பட்டார்கள் என்பது நாட்டுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் தயவுசெய்து அமருங்கள். அடுத்த உறுப்பினர் திரு. ஆர். சிவராமன். (குறுக்கீடு)

**திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் இங்கே அதிகம் பேர் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் பதில் சொல்லாமல் தமிழ் மாநில காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஏன் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். ஆனால், எங்களுடைய ஆதங்கத்தை நாங்கள் வெளிப்படுத்தக் கடமையுண்டு என்ற காரணத்தினால் இதைச் சொல்லுகின்றேன். கடந்த சட்டமன்றத்திலே எங்கள் கட்சியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி மட்டும்தான் இருந்தார்கள், பாதிக்கப்பட்டவர்கள் 61 பேர் நாங்கள் தான் என்று மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள்கூட குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான், உடலிலே வலி இருப்பவர்களுக்குத்தான் வலியின் அருமை தெரியும். அதனால் வலிபெற்றவர்கள் என்ற முறையில் அவர்கள் இங்கே அந்தக் கருத்தை எடுத்துக் கூறினார்கள். இதில் இன்னொன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்களைப் பற்றிக் கூறிய கருத்தை, ஒரு மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றிச் சொல்லிய கருத்தை, இந்த சபையிலே உறுப்பினராக இருக்கக்கூடிய யார் வேண்டுமானாலும் எடுத்துப் பேசலாம். இன்னார்தான், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான், அவர்கள் தான், இவர்கள் தான் பேச வேண்டும் என்று இல்லை. உதாரணத்துக்கு, மருத்துவர் இடத்திலே செல்லும்போது

தலை வலிக்கிறதா என்று சொன்னால், வலிக்கக்கூடியத் தலை அதற்கு பதில் சொல்வது இல்லை. வாய்தான், தலை வலிக்கிறது என்று சொல்கிறது. அதைப்போல எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சினையை அவர்கள் எடுத்துச் சொல்வது தவறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே முதல்வர் போதுமான விளக்கம் அளித்து இருக்கிறார். அருள்கூர்ந்து அமருங்கள். அடுத்த உறுப்பினர் திரு. ஆர். சிவராமன். (குறுக்கீடு)

**திரு. டி. இராஜேந்தர்:** நான் ஒன்றும் இருக்கை மேலே குற்றம் சொல்லவில்லை. முதல்வர் சொன்னார்கள். முதல்வர் கருத்தை சொன்னதற்குப் பிறகு, ஆளும் கட்சி உறுப்பினர் என்று அவர் சொன்ன காரணத்திற்காக, நானும் ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கும்போது, என் கருத்தைச் சொல்வது தவறு இல்லை என்று நினைக்கின்றேன். நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. நீங்களும் முன்னாள் சபாநாயகரைப் போல ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதைக் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

*(முற்பகல் 11-45)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் உணர்வு மதிக்கப்படுகிறது. ஆனாலும் முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே போதுமான விளக்கம் தந்துவிட்ட காரணத்தால் விவாதத்தை நீட்டிக்க விரும்பவில்லை. எனவே, அடுத்த உறுப்பினரை அழைக்கிறேன். திரு. சிவராமன்.

***திரு. ஆர். சிவ்ராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்த, தமிழினத்தின் தனிப்பெருந்தலைவர், சங்கத் தமிழ் தந்த தங்கத் தமிழர், குறளோவியம் கண்ட கோமான், பூம்புகார் ஈன்றெடுத்த முத்தமிழ் வேந்தர், பத்து வயது பாலகனாக இருந்த நேரத்தில், இரத்தம் சிந்தும் அரசியலுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட திருவாரூர் சோழன் தமிழக முதல்வர் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

சங்ககாலம் முதல் அண்மைக்காலம் வரை திருப்பத்தூர் தொகுதிக்கு ஒரு சிறப்பு உண்டு. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி வள்ளல் வாழ்ந்த [illegible] திருப்பத்தூர் தொகுதி. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தத்துவத்தைக் கூறிய கணியன் பூங்குன்றனார் பிறந்த பகுதி. தமிழரசன்



பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் வாழ்ந்த பகுதி, திருப்பத்தூர் தொகுதி. மருது இருவர், சின்ன மருது, பெரிய மருது வாழ்ந்து நினைவிடம் அமைக்கப்பட்ட பகுதி, திருப்பத்தூர் தொகுதி, கவியரசர் கண்ணதாசன் பிறந்த மண், சிறுகதை மன்னர் அண்ணன் தென்னரசு அவர்கள் வாழ்ந்த பகுதி திருப்பத்தூர் தொகுதி. சிறப்பு வாய்ந்த திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர், சிங்கம்புணரி என்ற இரண்டு ஒன்றியத்தை உள்ளடக்கிய தொகுதியாக 1989 ஆம் ஆண்டு திகழ்ந்தது. அன்றையதினம் சிங்கம்புணரி ஒன்றியத்தில் மக்கட்தொகை கணக்கீட்டின்படி அதிகம் இருப்பதை உணர்ந்து பார்த்து, அன்றையதினம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அண்ணன் தென்னரசு அவர்கள் அங்கு மக்கள் தொகை அதிகம் இருப்பதை உணர்ந்து பார்த்து, அங்கிருக்கக்கூடிய 52 பஞ்சாயத்துக்களையும் ஒன்றுதிரள சேர்த்து அவர்களுடைய தீர்மானத்தோடு 22 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய ஒரு ஒன்றியமாகவும், 30 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய ஒன்றியமாகவும் அறிவிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 22 ஒன்றியங்களைப் பிரித்து, அறிவிக்க வேண்டிய ஒன்றியத்திற்கு என்ன பெயர் அறிவிக்கலாம் எனக் கருதி, அன்றையதினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது எல்லாம் பாரிவள்ளல் வாழ்ந்த பகுதி என்ற காரணத்தால் பாரிவள்ளல் ஒன்றியம் என அறிவிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதற்குள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கலைக்கப்பட்டதன் காரணத்தால், அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் பாரிவள்ளல் என்ற பெயரைச் சூட்டாமல், அங்கிருக்கக்கூடிய ஒரு குக்கிராமத்தினுடைய பெயரைச் சூட்டி எஸ். புதூர் ஒன்றியம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு இதைக் கவனத்தில் ஏற்றுக்கொண்டு, மக்களுடைய குறையாக இருக்கக்கூடிய இந்த எண்ணத்தை உடனே ஏற்றுக்கொண்டு, எஸ். புதூர் ஒன்றியம் என இருக்கக்கூடிய ஒன்றியத்தை பாரிவள்ளல் ஒன்றியமாக உடனே அறிவிக்க வேண்டும் என இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் தண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டாலும் திருப்பத்தூர் தொகுதியைப் பொறுத்தவரை தண்ணீர் பிரச்சினை அதிகமாகவே இருந்து கொண்டிருக்கிறது. அப்படி தண்ணீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்பதற்காக அந்தப் பகுதியில் எங்கு இயற்கை ஊற்று இருக்கிறது என்பதை உணர்ந்து பார்த்து, 1989 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்த அண்ணன் தென்னரசு அவர்கள், அனைத்து அதிகாரிகளையும் அழைத்து,

எங்கு இயற்கை ஊற்று இருக்கிறது என்பதை சோதனை எடுத்து காரைக்குடிக்கு அருகாமையில் இருக்கக்கூடிய கிராமத்தில் போதுமான நீர் ஊற்று இருக்கிறது என முடிவு செய்து, அந்த தண்ணீரைக் கொண்டு வருவதற்காக திட்டமிடப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டாலும், அன்றையதினம் ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்தவர்கள் முறையாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் இன்னும் திருப்பத்தூர் தொகுதிக்கு அந்தத் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல், திருப்பத்தூர் தொகுதி மக்கள் தண்ணீர் இன்றி தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு முறையான நடவடிக்கை எடுத்து அந்தத் தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

திருப்பத்தூர் தொகுதியைப் பொறுத்தவரையிலும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தொகுதியாக இருந்தாலும் தொழிற்சாலைகள் இல்லாத தொகுதியாக இன்றும் இருந்து வருகிறது. படித்தவர்கள் எல்லாம் வேலையில்லாமல் தவிக்கக்கூடிய தொகுதியாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அண்ணன் தென்னரசு அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் திருப்பத்தூர் தொகுதியிலுள்ள எல்லா படித்த இளைஞர்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும் என்ற சீரிய எண்ணத்தோடு, ஒரு கூட்டுறவு பஞ்சாலையை உருவாக்கவேண்டும் என்ற திட்டம் திட்டப்பட்டு நடவடிக்கை எடுத்த நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்தவர்களும் அதற்குண்டான நடவடிக்கையை எடுக்காத காரணத்தால் படித்த இளைஞர்கள் எல்லாம் வேலையின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு முற்பட்டு திருப்பத்தூர் தொகுதியில் ஒரு கூட்டுறவு பஞ்சாலையை துவக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தொகுதியாக திருப்பத்தூர் தொகுதி இருந்தாலும், படித்தவர்கள் பலர் வாழக்கூடிய தொகுதியாக இருந்தாலும் அங்கே ஒரு தொழில் கல்வி நிலையம் கூட இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, திருப்பத்தூர் தொகுதி வாழ் மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, இந்த அரசு திருப்பத்தூர் தொகுதியில் ஒரு தொழில் கல்வி நிலையம் உருவாக்கிட முற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் கடந்த 5 ஆண்டு காலத்தில் நடந்த ஊழல் பற்றி இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக இங்கே பேசிய பெரியவர் திருவேங்கடம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு ஊழல்கள் நடந்திருப்பதை பத்திரிக்கைகள் தினம் தினம் எழுதிக் கொண்டிருக்கின்றன. இதை நான் கூறுவதற்குக் காரணம், குறிப்பாக பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்சாரத்துறை போன்ற இலாக்காக்களில், அதிலும் குறிப்பாக, திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகி அமைச்சர் பெருமகனாராக பதவி ஏற்றவர்கள் எல்லாம் ஏழை எளிய மக்களுடைய வரிப்பணத்தை, கொள்ளையடித்து கோடிக்கணக்கான ரூபாயை தங்களுடைய சுய நலத்திற்காகப் பெருக்கி வைத்திருக்கிறார்கள் என்ற செய்தி தினம் தினம் பத்திரிக்கைகளில் வந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்த அரசு, மக்களுடைய வரிப் பணத்தைக் கொள்ளையடித்தவர்களை விசாரணை செய்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கிட வேண்டும். அப்படி தண்டனை வழங்கினால்தான் இந்த மாமன்றத்திற்கு வருகை தந்திருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் இனி தவறு செய்யக்கூடாது, மக்களுடைய வரிப் பணத்தை ஏமாற்றக்கூடாது என்ற உணர்வு இந்தச் சபையில் இருக்கக்கூடிய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களின் நெஞ்சங்களிலும் உதயம் ஆகும், அப்படி தவறு செய்தால் தண்டிக்கப்படுவார்கள் என்ற உணர்வு தமிழ்நாட்டு மக்களுடைய மனதில் உதயம் ஆகும். ஆகவே, இந்த அரசு, குறிப்பாக பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்சாரத் துறை ஆகிய துறைகளில் கோடிக்கணக்கான ரூபாய் ஊழல் செய்யப்பட்டு இருப்பதை விசாரணை செய்து அந்த இலாக்காவினுடைய அமைச்சராக இருந்தவரை தண்டிக்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இதுபோன்ற என்னுடைய வேண்டுகோளை இந்த அரசு உறுதியாகச் செய்யும் என்ற நம்பிக்கையோடு,

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்றார் வள்ளுவப் பெருந்தகை. இன்று, வாழ்கின்ற வள்ளுவராக விளங்குகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "சொல்வதைச் செய்வோம், செய்வதையே சொல்வோம்" என்று தேர்தல் வாக்குறுதியை வழங்கினார்கள். அதேபோல் சொல்வதைச் செய்வோம் என்ற

பழமொழிக்கிணங்க கவர்னர் உரையிலே ஏழை எளிய மக்களுக்கு பயன்படக்கூடிய அளவில் பல்வேறு திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தரை வரி, நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அன்றாடம் உழைத்து வாழக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு பயன்படக்கூடியவகையில் நியாயவிலைக் கடைகளில் மாதந்தோறும் ஏழை எளிய மக்களுக்குத் தேவையான பொருட்களை தினமும் வழங்கலாம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக, இதுபோன்ற திட்டங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி இந்த அரசுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 11-வது சட்டமன்றப் பேரவையில் பேசுகின்ற இந்த அரிய வாய்ப்பினை எனக்கு அளித்திட்ட தமிழ் மாநில காங்கிரஸ் இயக்கத்தினுடைய தலைவர், எங்கள் தன்மானம் மிக்க தலைவர், கறை படியாத கரத்திற்குச் சொந்தக்காரர், எங்கள் அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களுக்கு நன்றி சொல்லி, என்னைத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பிய எனது சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் துவங்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றேன்.

ஒரு மனிதனுக்கு எந்தவிதமான மனப்பான்மை வேண்டும் என்று பாரதி இறைவனை வேண்டினார் என்று சொன்னால், எண்ணிய முடிதல் வேண்டும்; நல்லவை எண்ணல் வேண்டும்; திண்ணிய நெஞ்சம் வேண்டும்; தெளிந்த நல்லறிவு வேண்டும் என்று மகாகவி பாரதி அவர்கள் இறைவனை வேண்டுகின்றபொழுது நினைத்ததை முடிக்கின்ற, நல்லவை எண்ணுகின்ற, உறுதியான நெஞ்சுறுதி பெற்று, தெளிந்த நல்லறிவு வேண்டுமென்று பாரதி அவர்கள் வேண்டிக் கொண்டார்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரை இறைவனை வேண்டினாலும், வேண்டாவிட்டாலும், தமிழகத்து முதலமைச்சரவர்கள் நினைத்ததை முடிப்பதிலே யாருக்கும் சளைத்தவர் அல்ல என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். நல்லவை எண்ணுவதாக இருந்தாலும், உறுதியான நெஞ்சுறுதியாக இருந்தாலும், தெளிந்த



நல்லறிவாக இருந்தாலும் இயற்கையாகவே அவர் பெற்றிருந்தாலும் கூட, சிறிது நேரத்திற்கு முன்னால் அவர் சொன்னதுபோல, "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்" என்ற வள்ளுவனுடைய வாக்கிற்கேற்ப எதிர் வரிசையிலே நாங்கள் தோழமை இயக்கத்தோடு இங்கே அமர்ந்திருந்தாலும், எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டியது ஜனநாயகக் கடமை என்ற காரணத்தினாலே, ஒரு சில கருத்துக்களை உங்கள் மத்தியிலே சொல்லி விடைபெறலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றேன்.

ஆளுநர் உரை இந்த அரசினுடைய கொள்கையை மிகத் தெளிவாக இங்கே எடுத்து வைத்திருக்கின்றது. இந்த ஆண்டு எதைச் செய்ய வேண்டுமென்பதை, நல்ல பல திட்டங்களை இங்கே தெளிவாக எடுத்து வைத்திருந்தாலும், கடந்த அரசு கொண்டு வந்திருந்த திட்டமாக இருந்தாலும் கூட மக்களுக்கு அது பயன்படும் என்று சொன்னால் அதைத் தவறாமல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு பல்வேறு செயல் திட்டங்களை இங்கே அறிவித்திருக்கின்றது. இருந்தாலும் சென்னையிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற காரணத்தினால் நான் தேடிப் பார்த்தேன். சிறிது ஏமாற்றமாகக் கூட இருந்தது.

*நண்பகல் 12.00*

கடந்த அரசு சென்னை நகரத்து மக்களுடைய தாகத்தைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு புதிய வீராணம் திட்டம் என்ற ஒன்றை அறிவித்திருந்தது. அந்த திட்டத்தினைக் கடந்த அரசு கொண்டு வருகின்றபொழுது உலக வங்கி உதவியுடன் அந்தத் திட்டத்தை அறிவித்திருந்தாலும், திட்டத்தினைத் துவங்குகின்றபொழுது அதற்கான நிதி ஒதுக்கீடு 800 கோடி ரூபாய் என்று அறிவித்திருந்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஆளுநர் அறிக்கையைப் பார்ப்போம். ஆண்டு வருமான பட்ஜெட்டைத் தாக்கல் செய்கின்றபொழுதும் படிப்படியாக அது உயர்ந்து ஏறத்தாழ இரண்டாண்டுகளில் 1200 கோடி ரூபாய் என்று அவர்கள் அறிவித்தார்கள். சேத்தியாத்தோப்பிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவது அந்தத் திட்டம். சென்னை நகரினுடைய மக்கள் குடிநீருக்கு எந்த அளவிற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் முதலமைச்சரவர்கள் நன்கு உணர்ந்தவர்கள். இந்தத் திட்டத்தை ஒரேயடியாகச் செய்கின்ற, ஒரே கட்டமாகச் செய்கின்ற நிதியாதாரம் அரசினுடைய கையில் இல்லை என்று சொன்னால்கூட,

மேலைநாடுகளில் சொல்வது போன்று--அமெரிக்கா போன்ற மேலைநாடுகளிலே சொல்லுவார்கள்--Incremental completion என்று அத்திட்டத்தை மூன்று கட்டமாகச் செயல்படுத்த முடியும். சேத்தியாத் தோப்பிலிருந்து விழுப்புரம் அல்லது அச்சரப்பாக்கம் வரை ஒரு கட்டமாக, அச்சரப்பாக்கம் முதல் செங்கல்பட்டு வரை இரண்டாவது கட்டமாக, செங்கல்பட்டிலிருந்து சென்னைக்கு மூன்றாவது கட்டமாக இந்தப் பணியைச் செய்து முடிக்கலாம். செய்து முடிக்கின்ற காரணத்தினால், வருகின்ற பல்வேறு பகுதிகளில் நீராதாரம் இல்லாத காரணத்தினால் விவசாயம் செய்ய முடியாமல் வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் இத்திட்டம் பயன்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இரண்டாவது, தெலுங்கு கங்கைத் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக சென்னைக்கு வந்துவிடும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே மகிழ்ச்சியோடு நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நான் அதிலே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சென்னையினுடைய நீராதாரங்களான மூன்று ஏரிகள் நிரப்பப்படுகின்றன. அந்த நீர், நீராவியாக, எவாப்பரேஷன் ஆகி, ஏறத்தாழ 20 சதவீதம் நீர் நீராவியாகிவிடுகிறது. எவாப்பரேஷன் ஆகிவிடுகிறது. இந்த நிலையிலிருந்து நீர் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், இன்னும் இரண்டு ஏரிகள் வெட்டப்படும் என்று சொன்னால், இந்த எவாப்பரேஷன் லாஸ், அதைக் குறைப்பதற்கு, மேன்மை செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தத் திட்டம், வீராணம் திட்டம் என்பது கடந்த அரசினுடைய தவறுகளை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. அதிலே ஒன்றும் நான் மாற்றுக் கருத்து வைக்கவில்லை. ஏனென்று சொன்னால், திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றபோது அது 800 கோடி ரூபாய் திட்டம். திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று அவர்கள் முன்வருகின்றபோது அது 1200 கோடி ரூபாய் திட்டம். கடந்த கால அரசைப் பற்றி சொல்கின்றபோது, நான் சொல்லவில்லை, தமிழகத்து மக்கள் வெளிப்படையாகச் சொல்கின்றபோது 10 சதமான அரசு என்று சொல்வார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை 100 சதமான அரசாக ஏன் மாற்றப்பட்டது என்று தெரியவில்லை. எனவே, முதலமைச்சர் இந்தத் திட்டத்தினை மீண்டும் கவனத்திலே கொள்ள வேண்டும். 800 கோடி ரூபாயிலே அந்தத் திட்டத்தை செய்து முடிக்க முடியும் என்று அறிஞர் பெருமக்கள் சொல்கிறார்கள். வல்லுநர்கள் சொல்கிறார்கள். எனவே, இதை கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.



கடந்த காலத்து அரசினுடைய பொதுப்பணித்துறை பற்றி எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் மிகத் தெளிவாகச் சொன்னார். அதிலே எந்த அளவுக்குத் தவறு நடந்திருக்கிறது என்று சொன்னால், ஒரே ஒரு உதாரணம் மட்டும் தான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலைகள் போடுவதற்கு வாங்கப்படுகின்ற தார், பிட்டுமென், அது உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையங்களிலிருந்து இங்கே கொண்டுவருவதற்கான 'கன்வயன்ஸ்', அந்த கன்வயன்ஸ் என்பது கடந்த காலத்திலே அந்த நிறுவனமே, அரசு நிறுவனமே அப்போது ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால், கடந்த காலத்திலே ஒரு முகவரி இல்லாத கூட்டம் தமிழகத்திலே திரையின் பின்னாலேயிருந்து ஆட்டிப்படைத்த காரணத்தினால், அவருடைய தனி நிதி ஆதாரத்தை பெருக்கிக்கொள்ள வேண்டுமென்ற காரணத்தினால், இந்த கன்வயன்ஸ் வசதிகளை டிப்பார்ட்மெண்டே ஏற்றுக் கொண்டு தனியாருக்கு கொடுக்கப்பட்டது. அதிலே என்ன தவறு என்று சொன்னால், அந்த பிட்டுமென் உற்பத்தி செய்கின்ற நிறுவனம் இதை அனுப்புகின்றபோது அதற்காக இருந்த கட்டணத்தை இந்தப் பொதுப் பணித்துறை தனியாருக்கு விட்டுக்கொடுத்த காரணத்தினால் அதிலே ஏற்பட்ட கட்டண வித்தியாசம் என்ன என்று சொன்னால், 14 பைசா. 14 பைசா என்பது ஒரு டன் ஒரு கிலோ மீட்டர் செல்வதற்கு. பார்க்கின்றபோது 14 பைசாவாகத் தெரிகின்றது. ஆனால் 2½ ஆண்டு காலம் இது நடைமுறையிலே இருந்த காரணத்தினால் அரசுக்கு, 5½ கோடி தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பு என்பது ஏறத்தாழ 27 கோடி ரூபாய். 27 கோடி ரூபாய் 2½ ஆண்டு காலத்திலே ஏற்பட்டிருக்கின்ற இழப்பு என்பது சாதாரணமான இழப்பு அல்ல என்பதை முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். ஆனால், இந்த இக்கட்டான சூழ்நிலையிலும்கூட நேர்மையாகப் பணியாற்ற வேண்டுமென்று ஒரு அதிகாரி, மதுரையைச் சார்ந்த கோட்டப் பொறியாளர், இந்த வழியாக வாங்கமாட்டேன் என்று நேரிடையாக அதை உற்பத்தி செய்யும் நிறுவனத்திலிருந்து வாங்கினார். அவர்கள் வாங்கியபோது கடந்த காலத்திலே என்ன கட்டணம் இருந்ததோ அந்தக் கட்டணத்திற்குப் பெற முடிந்தது. இந்த உண்மை அன்றைய அமைச்சருக்குத் தெரிந்தவுடன் அன்றைக்கு அவர் பழிவாங்கப்பட்டார். எனவே இதெல்லாம் கடந்த கால அரசு செய்திருந்த தவறுகள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12.05

அதுபோல்தான் போடாத சாலைகளைப் போட்டதாகக் கணக்கு எழுதப்பட்டது. கோப்புகளைப் புரட்டிப் பார்ப்பீர்களேயானால் பல்வேறு கிராமப்புறங்களில் சாலைகளைப் போடாமலேயே போட்டதாகக் கணக்கெழுதப்பட்டு பல கோடிக்கணக்கான ரூபாய் மக்களுடைய வரிப்பணம் ஏதோ பல தோட்டங்களுக்கு சென்றது என்பது கடந்த கால வரலாறு என்பதை நாம் நினைவுகூர்ந்து பார்க்கவேண்டும். அப்படி கடந்த காலத்திலே நடந்த தவறுகளை மறப்போம், மன்னிப்போம் என்று விட்டுவிடுவது என்று சொன்னால் அது நிகழ்காலத்திற்கு அல்லது எதிர்காலத்திற்கு வழிகாட்டுவதாக அமைந்துவிடும். எனவே கடந்த கால தவறுகளை யார் செய்து இருந்தாலும் அது குறித்து விசாரணை செய்து அவர்களைத் தண்டிக்க வேண்டும். ஐந்தரை கோடி தமிழ் மக்களுக்கும் வந்து சேர வேண்டிய மக்களுடைய வரிப்பணம் தவறான பாதையில் சென்று விடாமல் மீண்டும் தமிழக கஜானாவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று சொன்னால் ஒரு மிகப் பெரிய சிறந்த துறையினுடைய நிபுணர்களை வைத்து ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்து தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டும். எத்தனை கோடி ரூபாய் தவறான பாதையில் சென்றிருந்தாலும் அதை மீட்டு எடுக்கவேண்டும். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும்.

அதுபோல்தான் கடந்த காலத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய கொடுமைகளில் ஒன்று ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியதாகும். 1989-ஆம் ஆண்டு மே திங்கள் 17-ஆம் தேதி அன்று, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது இன்றைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு அரசாணை எண். 535, 536 என்பனவற்றைப் பிறப்பித்தார்கள். அந்த ஆணையில், ஒரு கல்லூரி துவக்கப்பட வேண்டுமென்று சொன்னால் அதற்கு இன்னின்ன தகுதிகள் இருக்கவேண்டும் எனறு குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வந்தபிறகு அந்த அரசாணை பல்வேறு தவறுகளுக்குத் தடையாக இருக்கிறது என்ற காரணத்தால், பல்வேறு தனியார் கல்லூரிகளைத் துவங்க வேண்டும் என்று எண்ணியவர்களை நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்தரவு வாங்கச் சொன்னார்கள். நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால் இடைப்பட்ட காலத்தில் நீதிமன்றத்தில் விவாதம் நடத்து கொண்டிருந்த காலத்தில்



அந்த அரசால் இடையிலே சில தடுமாற்றங்களோடு அன்றைக்கு கல்வியே ஒரு விலைபொருளாக மாற்றப்பட்ட சூழ்நிலையை நாம் பார்த்தோம். அவர்கள் செய்த தவறுகளின் காரணமாக ஏறத்தாழ 250, 300 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அன்றைக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படித்து எதிர்காலத்திலே தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினார்களே மாணவச் செல்வங்கள், தங்களுடைய குழந்தைகளை ஆசிரியர்களாக்கிப் பார்க்கவேண்டுமென்று விரும்பிய ஏழை எளிய பெற்றோர்கள், தங்களுடைய தாலியை விற்று, சொத்துக்கள் நிலபுலங்கள் அத்தனையையும் விற்று தங்களுடைய மகன், மகள் படித்து நாளையதினம் ஒரு ஆசிரியப் பெருந்தகையாக சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெறுவார்கள் என்ற எண்ணத்தோடு, கனவுகளோடு அந்த ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளில் சேர்த்தார்களே, அவ்வாறு சேர்க்கப்பட்ட மாணவர்கள் மட்டும் ஏறத்தாழ 40000-க்கும் மேற்பட்டவர்கள். கடந்த கால ஆட்சி செய்த தவறுகளை அன்றைக்கே நாங்கள் சட்டமன்றத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் நீதிமன்றத்தில் நீதியரசர் சீனிவாசன் அவர்கள் ஒரு தீர்ப்பினைத் தந்தார்கள். அதிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உயர்ந்த இடத்திலே இருப்பவர்கள், அதிகாரத்திலே இருப்பவர்கள் தவறான வழிவகைகளைக் கையாண்டு இருக்கிறார்கள் என்று அதிலே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. எனவே யாரோ செய்த தவறு காரணமாக, அன்றைக்கு அதிகாரத்தில் இருந்தவர்கள் செய்த தவறு காரணமாக பாதிப்புக்கு உள்ளாகி இருப்பவர்கள் ஏறத்தாழ 40000-க்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்கள் எனபதைக் கருணை உள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். இன்றைக்கு நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி 40000 மாணவர்கள் என்கிறபோது இரண்டாண்டுகள் படித்து, தேர்விலே வெற்றி பெற்று பிறகு சான்றிதழை வாங்க முடியாமல் இருக்கிற மாணவர்கள் ஒரு பக்கம். ஓராண்டுத் தேர்வை எழுதி இன்னும் முடிவு என்ன என்று தெரியாத நிலையில் இருக்கிற மாணவச் செல்வங்கள் ஒரு பக்கம். தேர்வு எழுதாத மாணவச் செல்வங்கள் இன்னொரு பக்கம். இப்படி எல்லாம் இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிமன்றத்திலே தடை இருக்கின்றது என்ற காரணத்தால் இந்த மாணவர்களை எல்லாம் நடுவீதியில் விட்டுவிட முடியாது. அன்றைக்கு அந்த ஆட்சி செய்த தவறுகளை வீதிகள் தோறும் சென்று

பிரச்சாரம் செய்தவர்கள் நாம். எனவே இன்றைக்கு நல்ல திறமை வாய்ந்த நிபுணர்களை வைத்து ஒரு குழுவை அமைத்து அதன்மூலமாக இந்தப் பிரச்சினையை நாம் அணுகி நீதிமன்றத்திலே இருந்து தப்பிப்பதற்கு இந்தச் செல்வங்களுடைய எதிர்காலத்திற்கு நல்ல உத்தரவாதம் தருவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொன்னால் அதைச் செய்யவேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுதல் ஆகும்.

பிற்பகல் 12.10

இன்றைக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ மூன்று லட்சம் ஆசிரியப் பெருந்தகைகள் தேவைப்படுகிறார்கள். ஆண்டுதோறும் ஐயாயிரம் ஆசிரியப் பெருந்தகைகள் ஓய்வு பெற்றுச் சென்றுகொண்டிருககிறார்கள். இன்றைக்கு வேலையில் இருப்பவர்கள் மூன்று லட்சம் ஆசிரியர்கள். ஆனால், தமிழகத்தில் இருக்கின்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஏறத்தாழ 61, தனியார் உட்பட, அங்கீகாரத்தோடு இருப்பவை. மத்திய அரசாங்கம் இதுபோன்ற சிக்கல்களிலிருந்து விடுபடவேண்டும் என்பதற்காக 'நேஷனல் கவுன்சில் ஃபார் டீச்சிங் எஜுகேஷன்' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. அதனுடைய மண்டல அலுவலகம் பெங்களூரிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அலுவலகம் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை பரிசீலனை செய்து தகுந்த அனுமதி அவர்களுக்கு வழங்கமுடியுமா என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலையிலே இருக்கின்றது. இருந்தாலும், மாநில அரசுதான் அதற்கான என்.ஓ.சி. வழங்கக்கூடிய இடத்திலே இருக்கின்றது. ஏறத்தாழ இருநூறுக்கும் மேற்பட்ட மனுதாரர்கள் இன்றைக்கு தமிழக அரசை அணுகிக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு கட்டிடங்கள் எழுப்பப்பட்டு, அடித்தளங்களை அமைத்தவர்கள் எல்லாம் இன்றைக்கு மனு செய்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து எதிர்காலத்தில் இந்த ஆசிரியர் பயிற்சிக்கு நல்லதொரு வழியை காட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார், பதினாறு நிமிடங்கள் ஆகிவிட்டன. விரைவாகப் பேசி முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அதோடு கடந்த காலத்திலே தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை தண்டனைக்கு உட்படுத்த வேண்டியது நம்முடைய கடமை என்பதை தயவு செய்து மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தொழில் துறையைப் பற்றி பேசினார்கள். தொழில் துறையைப் பற்றி இங்கே சொல்லுகின்றபோது பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற நல்ல உறவை நாங்கள் ஏற்படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். கடந்த காலத்தில் இருந்த அரசால் சிங்கப்பூர் கோரிடார்-தொழில் பூங்கா- அமைப்பதற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஸ்பிக் குரூப் நிறுவனத்திற்கு அந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சோளிங்கநல்லூரிலே ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்திருந்தது. அதுபோலவே ஸ்ரீபெரும்புதூரில் ஐநூறு ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்தது. ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டு நீண்ட நெடுநாட்கள் ஆகிய பிறகும் இதுவரை அதற்கான பணிகள் துவங்கியதாக, என்னைப் பொறுத்தவரையில் பார்க்க முடியவில்லை. அந்த இடங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக இருக்கின்றன. வேளச்சேரி-தாம்பரம் சாலை, பழைய மாமல்லபுரம் சாலை போன்ற இடங்கள் முக்கியம் வாய்ந்த இடங்கள் ஆகும். எந்தக் காரணத்திற்காக அந்த இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதோ, அதற்காகப் பயன்படுத்தாமல் தவறான வழியிலே பயன்படுத்த வேண்டும், தனியார் ஆதாயம் பெறவேண்டும் என்று அந்த தனியார்கள் எண்ணிக்கொண்டிருப்பார்கள் என்று சொன்னால் அந்த எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, மீண்டும் அந்தத் தொழில் பூங்கா அங்கே உருவாவதற்கு நீங்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான ஆணைகளை நீங்கள் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அன்பிற்குரிய தலைவர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தொழில் துறையிலே, தாராளமயமாக்கப்பட்ட கொள்கையை இந்த நாட்டிலே கொண்டு வந்ததன் காரணமாக இன்றைக்கு பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்குவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமிழகத்தை அணுகிக்கொண்டிருக்கிறார்கள். நான்கூட கேள்விப்பட்டேன். ஏறத்தாழ 4500 கோடி ரூபாய்க்கான கார் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைப்பதற்கு கொரியா நாட்டிலேயிருந்து ஹூண்டாய் என்ற நிறுவனம் முன்வந்திருப்பதாக கேள்விப்பட்டேன். இன்டர்நேஷனல் கணக்குப்படி பார்க்கின்றபோது ஒரு கார் தயாரிக்கவேண்டும் என்று சொன்னால், அந்த கார் தயாரிப்பு மூலமாக ஏறத்தாழ ஏழு பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கின்றது. அந்த வகையில், அப்படிப் பார்க்கின்றபோது

ஃபோர்ட் நிறுவனம் ஒரு லட்சம் கார்களைத் தயாரிப்பதற்கு முன்வரவேண்டும். அதே போல இந்த ஹூண்டாய் நிறுவனம் ஏறத்தாழ இரண்டு லட்சம் கார்ளைத் தயாரிப்பதற்கு உங்களை அணுகிக் கொண்டிருக்கின்றது. ஆண்டுதோறும் மூன்று லட்சம் கார்களை தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் இங்கே வரும் என்று சொன்னால் அதன் மூலமாக வேலைவாய்ப்பைப் பெருக்குவார்கள். ஏறத்தாழ 21 லட்சம் பேர்கள் இதனால் பயனடைகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் இதனை நீங்கள் சரியான முறையில் அணுகவேண்டும் என்பதையும், கடந்த காலத்திலே இருந்த தடைகள் இந்த காலத்திலே இருக்காது என்ற நம்பிக்கையோடு நான் உங்களை கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு தொழிற்சாலை துவங்கப்பட வேண்டும் என்று சொன்னால், மின் உற்பத்தி நிலையங்கள் இங்கே உருவாக்கப்பட வேண்டும். கடந்த ஐந்து ஆண்டுகளாக நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் ஆளுநர் உரையாக இருந்தாலும் சரி, பட்ஜெட் உரையாக இருந்தாலும் சரி, அதிலே, ஜெயங்கொண்டத்தில் 3000 மெகாவாட் யூனிட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை கொண்டு வருவதற்கான, ஏறத்தாழ 15,000 கோடி ரூபாய்க்கான திட்டத்தை நாங்கள் கொண்டு வரப்போகிறோம் என்று அந்த அரசு அறிவித்தது. அது பத்திரிக்கையிலே எட்டு கால செய்தியைப் பெற்றது. ஆனால் இதுவரை அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டதாகக் கருதமுடியவில்லை. அதேசமயம் வெளிநாடுகளுக்குச் சென்ற அன்றைய பிரதமர் மேற்கு ஜெர்மனி நாட்டிற்குச் சென்றபோது உதவிட அந்த நாட்டினுடைய வங்கிகள் எல்லாம் முன்வந்தன; அந்த நாட்டினுடைய அதிபர் முன்னிலையில் அங்கே மின்உற்பத்தி நிலையங்களை உருவாக்குகின்ற மிகப்பெரிய கம்பெனிகளான மெக்னியல்ஸ் மேகர், சிமென்ஸ் ஆகியவை டிட்கோ கூட்டு நிறுவனத்தோடு ஒரு தொழிற்சாலையைத் துவங்குவதற்கு ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஆனால் அன்றைக்கு இருந்த தமிழக அரசு ஏனோ தெரியவில்லை, வந்து சேர வேண்டியது சேரவில்லை என்ற காரணத்தினாலா என்பது தெரியவில்லை, அந்தத் திட்டத்தை துவக்குவதற்கு அவர்கள் தயாராக இல்லாத காரணத்தால் அந்தத் திட்டம் இது வரை செயல்படுத்தப்படவில்லை. இதுபோன்ற மின் உற்பத்தி நிலையங்களை நீங்கள் புதிதாக கொண்டு வருகின்றபோது, அது முழுமை பெறுவதற்கு 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் கால அவகாசம் தேவைப்படுகின்றது. அதற்குள்ளாக தொழிற்சாலைகள் இங்கே



துவங்குகிற வாய்ப்பு இல்லாமல் போய்விடக்கூடாது என்ற காரணத்தால், நீங்கள் கேரளா போன்ற மாநிலங்களை அணுகி-20 மெகாவாட், 50 மெகாவாட் யூனிட்டுகள் தயாரிப்பதற்கென சிறு சிறு மின் உற்பத்தி நிலையங்கள் அங்கே உருவாக்கப்பட்டுள்ளது--அப்படிப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களை நீங்கள் உருவாக்குவீர்களானால் அதற்கு 6 மாத காலத்திற்குள்ளோ அல்லது அதற்குள்ளோ பணி முடிவடையும் நிலை ஏற்படும்.

பிற்பகல் 12-15

மிகத் தெளிவாக ஒன்றை நான் சொல்ல வேண்டும். 'எழில் மிகு சென்னை 2000' என்பதற்கு கடந்த கால அரசு 5 ஆண்டுகளுக்கு 2000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்து, மிகப் பெரிய விளம்பரத்தை எல்லாம் , ஆங்காங்கே பலவேறு இடங்களில் எல்லாம் விளம்பர வாசகங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த 2000 கோடி ரூபாயில் ஒரு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். கடந்த காலத்திலே சட்டமன்றத்திலே நான் பேசி இருக்கின்றேன், மக்கள் மன்றத்திலேயும் பேசியிருக்கிறேன். அன்றைக்கு எங்கள் இயக்கத்தினுடைய இளைஞர் காங்கிரஸ் தலைவராக நான் இருந்த காரணத்தால், பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கிறேன். கடந்த 1½, 2 ஆண்டு காலத்தில் சென்னை மாநகராட்சியின் பணி எப்படி இருந்தது என்பதை நீங்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்கக வேண்டும். அங்கே நடைபெற்றது என்பது 3, 4 மாதங்கள், 600 கோப்புகள் 500 கோப்புகள் என்று நீண்ட நெடுங்காலமாக கையெழுத்துப் போடாமல் அதிகாரிகள் அதை தேக்கி வைத்துவிட்டு, அதற்குப் பின்னால் தனி அதிகாரி வெளிநாட்டிற்கு சென்றவுடன், 10 நாட்கள் விடுமுறையில் சென்றவுடன் அந்த 10 நாட்களுக்குள்ளாக அவசர அவசரமாக, அந்தக் கோப்புகள் அத்தனையும், நள்ளிரவில் கையெழுத்துப் போடப்பட்ட சூழ்நிலையையும், அதிலே தவறு நடந்தது என்பதையும், அந்த 300 கோடி ரூபாய், 400 கோடி ரூபாயில் ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாக மக்களுடைய வரிப் பணம் கையாடப்பட்டுள்ளது என்பதையும், பல ஆதாரங்களோடு நாங்கள் சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லியிருந்தாலும் சரி, மக்கள் மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருந்தாலும், போராட்டங்கள் நடத்துவதாக நாங்கள் அறிவித்து இருந்தோம். இவற்றை நீங்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்குக்கூட நம்மால் அவற்றை சோதனை போட்டு தவறுகளை கண்டுபிடிக்க முடியும். கடந்த காலத்தில் சாலைகள் எப்படிப் போடப்பட்டன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த சட்டமன்றத்திற்கு வரும் வழியில், சிவானந்தா சாலை---உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டும். அந்தச் சாலையை---விரிவுபடுத்துவதற்கு கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்கிடு செய்திருந்தார்கள். அதனுடைய வரன்முறை என்னவென்று சொன்னால், அதன் நடைமுறை என்ன என்று சொன்னால்---அந்தச் சாலையில் ஆற்று மணல் போடுவதற்குப் பதிலாக---ஒரு அடி ஆழத்திற்கு ஆற்றுமணல் போட வேண்டும் என்றிருக்கிறது. ஆற்று மணல் ஒரு லோடு ரூ. 1500 ஆகும். ஆற்றுமணல்தான் போட வேண்டும். அதுதான் நடைமுறை. ஆனால் அவர்கள் பயன்படுத்தியது கடல் மணலைத்தான். கடல் மணல் ஒரு லோடு விலை ரூ. 200/-. ஆகவே, அதில் இருக்கும் வேறுபாட்டை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். போடப்பட்டு இருப்பது மணல்தான். ஆனால் ஆற்று மணலுக்குப் பதிலாக கடல் மணல் போட்ட காரணத்தால், கடல் மணலிலே இருக்கின்ற உப்புச் சத்து, அதற்கு மேல் போடப்பட்ட தார்களையெல்லாம் அரித்து எடுத்து விடுகிறது. சாலைகளையெல்லாம் அரித்து எடுத்துவிடுகின்றன. அதன் காரணமாக உள்ள அபாயத்தையும், அதனால் எத்தனை கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நாம் சோதனை போட்டு பார்க்க முடியும். இதுபோன்றுதான் ஒவ்வொரு சாலைகளும்.

10 நாட்களாக பத்திரிகைகளிலே பார்க்கிறேன். பொதுப் பணித்துறையின் சார்பாக பல்வேறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு இருப்பதைப் பார்க்கிறேன். 5 ஆண்டுகள் பார்க்காத ஒன்று. 5 ஆண்டுகளாக அமைச்சர்களுக்கு வேண்டியவர்கள் அல்லது முகவரி இல்லாத கூட்டத்திற்கு வேண்டியவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை நேரிடையாக அழைத்து அந்தப் பணிகளை கொடுத்தது கடந்த கால ஆட்சியின் மிகப் பெரிய மக்கள் விரோதச் செயலாகும்.

இந்த நாட்டு மக்கள் இதை உணர்ந்து கொண்டதால்தான், இன்றைக்கு மிகப் பெரிய நல்லதொரு ஜனநாயகம் முடிவை தமிழக மக்கள் தந்து இருக்கிறார்கள். கடந்த காலத்திலே நிகழ்ந்த தவறுகள், மாநகராட்சியிலே நடைபெற்ற ஊழல்கள், இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகார வர்க்கம், ஆட்சியாளருடைய துணையோடு அன்றைக்கு அடிக்கப்பட்ட கொள்ளை பற்றி விசாரணை செய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். காரணம் என்ன என்று சொன்னால், இன்னும் 3 மாதங்களில் நீங்கள் மாநகராட்சித் தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். மகிழ்ச்சியான செய்தி. இந்த மாநகராட்சி தேர்தல் நடத்தப்படுகிறபோது, கடந்த கால அரசு எப்படி சாலை போட்டிருக்கிறார்கள் என்பதை நாம் மக்கள்



மன்றத்திலே எடுத்து விளக்குவதன் மூலமாகத்தான், நாளைக்கு நாம் செய்கின்ற பணிகளுக்கு மக்கள் மத்தியிலேயிருந்து ஒரு நல்ல பலனைப் பெற முடியும். இன்றைக்கு சென்னை மாநகரை அழகுபடுத்துவதற்காக ரூ. 200 கோடிக்கான ஒரு திட்டத்தை நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள்.

பிற்பகல் 12-20

அதிலே ஒரு சிரமம் இருக்கிறது. இன்றைக்கு என்னைப் போன்று, சென்னையைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் பல்வேறு பகுதிகளிலே சாலைகள் போட வேண்டும், அடிப்படை வசதிகள் செய்ய வேண்டும் என்று நாங்கள் எண்ணிக் கொண்டிருந்தாலும்கூட, இன்றைக்கு தனியார் தெரு, 'ப்ரைவேட் ஸ்ட்ரீட்' என்று இருக்கிறது. இன்றைக்கு இந்த தனியார் தெருக்களிலே அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு அரசு முன் வராத காரணத்தினால் அந்தப் பகுதி மக்கள் அரசுக்கு வரி கட்டினாலும்கூட, இந்த நாட்டினுடைய குடிமக்கள் என்ற வாக்குரிமையை அவர்கள் பெற்றிருந்தாலும் கூட, இன்றைக்கு அவர்களுடைய பகுதிகள் சீரமைக்கப்படமுடியாத அளவிற்கு, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க முடியாத அளவிற்கு ஒரு அவலச் சூழ்நிலை தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இதனைச் சென்னையிலும் இன்றைக்குப் பார்க்கிறோம். எனவே, இந்த தனியார் தெரு என்கின்ற வரைமுறையின் காரணமாக அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றபோது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தனியார் தெருவாக இருந்தாலும், அரசால் கையகப்படுத்தப்பட்ட இடமாக இருந்தாலும், அவர்கள் வரிப்பணம் கட்டுகின்றார்கள், இந்த நாட்டினுடைய குடிமக்கள் என்கின்ற முறையில் அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துதரப்பட வேண்டியது ஒரு நாட்டினுடைய கடமை என்ற காரணத்தினால், அதை மீண்டும் பரிசீலனை செய்து, இன்றைக்கு சென்னையில் இருக்கின்ற தனியார் தெருக்களுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்துதரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும், அங்கே இருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினை. எந்தப் பகுதிக்குச் சென்று நாம் காலடி எடுத்து வைத்தாலும் பெண்கள் குடிநீர் கேட்டு ஓடி வருவதைத்தான் நாம் பார்க்கின்றோம். எது இல்லையென்றாலும் மனிதன் வாழ்ந்துவிட முடியும். ஆனால் குடிநீர் இல்லையென்று சொன்னால் நாட்டில் வாழமுடியாது என்பதை நாம்

உணர்ந்திருக்கின்றோம். அந்தப் பகுதியில் ஏன் இதுபோன்ற குடிநீர்ப்பிரச்சினை என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். கடந்த ஐந்து, ஆறு ஆண்டு காலமாக குடிநீர்ப் பிரச்சினை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. நிலத்தடி நீர் அங்கே பெறமுடியாத அளவிற்கு, மிகவும் தாழ்வான பகுதிக்குச் சென்றாலும்கூட 300 அடி ஆழத்திற்குச் சென்றாலும் கூட தண்ணீர் பெறமுடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஏறத்தாழ ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் மிகப்பெரிய குடிநீர்ப் பஞ்சம் வந்தபோது அத்தனை பகுதிகளுக்கும் லாரிகள் மூலமாக தண்ணீர் வரவழைக்கப்பட்டு, தங்களுடைய தண்ணீர் தாகம் தீர்க்கப்பட்டது என்று அந்தப் பகுதி மக்களெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் யார் இருந்தார்கள் என்பதல்ல, யார் செய்தார்கள் என்பதல்ல. ஆனால் இப்போது நாம் இருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வீற்றிருக்கின்றார்கள். எனவே, நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எப்படியாவது இந்தப்பகுதி மக்களுடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, லாரிகள் மூலமாக உடனுக்குடன் அந்தப் பகுதியிலுள்ள தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து, மக்களுடைய தாகத்தைத் தீர்க்கவேண்டும். அப்படித் தீர்ப்பதன் மூலம் அரசுக்கு நல்லபெயர் மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமையைச் செய்ததாகக் கருதமுடியும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதேபோன்று இன்னொன்றையும் நான் மிகத் தெளிவாகச் சொல்லவேண்டும். தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. கடந்த ஐந்தாண்டு காலத்திய அரசு எந்த அளவிற்கு மக்கள் மத்தியிலே ஒரு கெட்ட பெயரைப் பெற்றது என்று சொன்னால், வியாபாரிகளுக்கு இருமுனை வரி விதித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒருமுனை வரி இருந்தது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு இருமுனை வரி விதிக்கப்பட்டது. அந்த அரசு இருமுனை வரி விதித்தாலும் ஆங்காங்கிருந்த சமூக விரோதிகள் மூன்றாவது வரியையும் இங்கே விதித்து வந்தார்கள். அதை நாம் பார்த்திருக்கிறோம். மூன்றாவது வரி என்பது சமூக விரோதிகளுடைய மாமூல் வரி. அரசுக்கு வந்து சேர்வதில்லை என்று சொன்னாலும்கூட, சமூகவிரோதக் கும்பல்களின் கைகளிலே சென்று சேர்ந்த காரணத்தினால், வியாபாரப் பெருமக்களை எந்த அளவிற்குப் பாதித்திருக்கின்றது எனபதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அதிகாரிகளும் அதற்கு உடந்தைதான். காவல் துறையும் அதற்கு உடந்தை. இந்த மூன்றாவது வரியைத் தர முடியாது



என்று சொன்னவர்கள் எந்த அளவிற்கு பாதிப்பிற்குள்ளானார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எனக்கிருக்கின்ற வேதனை என்னவென்று சொன்னால், கடந்த காலத்து அரசு இந்த மூன்றாவது வரியை விதித்து வந்தது. இப்போது நாம் இவற்றிலிருந்து விடுபட்டு, இரண்டாவது சுதந்திரத்தைத் தமிழக மக்கள் பெற்றிருக்கிறார்கள். அப்படியொரு உணர்வைப் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு பழைய நிலை வந்துவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய உள்ளத்திலே இருக்கின்ற மிகப் பெரிய பயம். எதிர்பாராதவிதமாக, நான்கு. ஐந்து நாட்களுக்கு முன்னால் வடபழனி பகுதியிலேகூட, இரண்டு வாழைப்பழம் கேட்டு, தரமுடியாது என்று சொன்ன காரணத்தினால், கத்தியால் குத்தப்பட்டு, ஒரு ஏழை இன்றைக்கு மருத்துவமனையிலே இருக்கின்ற ஒரு கொடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்தினை, எதிர்பார்ப்பினை என்னால் புரிந்து கொள்ள முடியும். எந்தவிதமான தவறுக்கும் இங்கே இடம் கொடுத்துவிடக்கூடாது என்ற காரணத்தால்தான் திறமைவாய்ந்த அதிகாரிகள், நேர்மையான அதிகாரிகள், மூத்த அதிகாரிகள், நிர்வாகத் திறமைபெற்றவர்களெல்லாம் இன்றைக்கு நல்ல நல்ல இடத்திலே பொறுப்பினை ஏற்று தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு மகிழ்ச்சி.

*பிற்பகல் 12-25*

ஆனால் இந்தச் சூழ்நிலையில் இந்த அளவுக்கு பாதுகாப்பாக நீங்கள் உங்களுடைய நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கும்போது, இங்கே கீழ்மட்டத்தில் இதுபோன்ற தவறுகளுக்கு யார் உடந்தையாக இருந்தாலும் சரி, இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக் இருந்தாலும் அல்லது சமூக விரோதிகளாக இருந்தாலும், காவல்துறை துணையோடு இதுபோன்ற தவறுகள் நடக்கும் என்று சொன்னால், அது மீண்டும் இந்த அரசுக்கு ஒரு தவறான கெட்டபெயரைப் பெற்றுத்தரும் என்பதை தயவு செய்து அரசு புரிந்து கொள்ள வேண்டும். எனவே அப்படி நடக்காமல் அதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, உங்களிடம் அதிகமாக தமிழகத்து மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசும்போதுகூட பல உறுப்பினர்கள், பெண்கள் எல்லாம் இன்றைக்கு மகிழ்ச்சியோடு இருப்பதாகச் சொன்னார்கள். பல்வேறு மட்டத்திலுள்ளவர்கள், படித்தவர்கள், பாமரர்களை சந்திக்கின்றபோது--கடந்த காலத்து ஆட்சியின்மீது நாம் பல குற்றச்சாட்டுக்களை வைத்திருக்கிறோம் ஆதாரத்தோடு வைத்திருக்கிறோம். ஆனால் அதன்மீது நடவடிக்கை

எடுக்கவில்லை என்று சொன்னால்--இந்த அரசும் அவர்களுக்குத் துணை போய்விட்டதோ என்ற ஐயப்பாடு மக்கள் மத்தியிலே வந்துவிடும் என்ற காரணத்தினால் தெளிவாக எந்தவிதமான இரண்டாவது மனப்பான்மையும் இல்லாமல் கடந்த காலத்து அரசின் மீதிருக்கும் தவறுகள் எதுவாக இருந்தாலும் அத்தனை தவறுகளையும் விசாரிக்க. அதற்கான விசாரணைக் கமிஷன்களை அமைத்து ஒவ்வொன்றாக அவற்றை விசாரணை செய்யவேண்டும். அப்படி விசாரணை செய்வதோடு மட்டுமல்லாமல் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். பாராளுமன்ற நடைமுறைகளிலே ஒன்று இருக்கிறது--நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய விசாரணைக் குழு அமைப்பது. அதுபோல, இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய விசாரணைக் குழுவை இந்த மாநிலத்தில் நீங்கள் துவக்கிப் பார்க்கலாம். இதுவரை எங்கும் அதுபோல விசாரணைக் குழு நியமிக்கப்படவில்லை. ஆனால் அதற்கு நீங்கள் முன்னுதாரணமாக இருந்து பார்க்கலாம். இல்லையென்று சொன்னால் நீதிபதிகளை வைத்து, அரசியலுக்கு அப்பாற்பட்ட நிபுணர்களை வைத்து விசாரணை செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 30 நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது. நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டும். உரையை விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே 3 நாட்களுக்கு முன்னாலே ஒரு செய்தியை நாம் பார்த்தோம். கல்கத்தா மாநகரில் ஒரு சிறு குழந்தையை பெற்றவர்கள் தூக்கி எறிந்துவிட்டாலும்கூட மூன்று தெரு நாய்கள் அந்தக் குழந்தையை பாதுகாத்ததாகவும் காவல்துறையினர் வந்து அந்தக் குழந்தையை தூக்கிச் செல்லும்வரை அந்த நாய்கள் குழந்தையை பாதுகாப்பாக இருந்து தாய்மை உணர்வோடு செயல்பட்ட செய்தியை நாம் பார்த்தோம். கடந்த காலத்து அரசு தாய்மை உணர்வுள்ள அரசு என்று பல்வேறு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு தாய்மை உள்ளம் அங்கே இருந்தது என்று சொன்னால் சிறு குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்குகிற அரசாங்கத்தினுடைய திட்டம் ஒன்றிருக்கிறது. டினிப் என்ற அந்த திட்டத்தின்கீழ் வைட்டமின்-ஏ சொட்டு மருந்து குழந்தைகளுக்கு கொடுப்பார்கள். இந்த சொட்டு மருந்தை கேரள அரசாங்கத்தினுடைய கே.எஸ்.டி.பி.எல். Kerala State Drug and



Pharmaceuticals Ltd., தான் தயாரித்து வருகிறது. அங்கே தயார் செய்யப்படும் மருந்து 100 எம். எல். சொட்டு மருந்து 75 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது.

கடந்த காலத்து தாய்மை உணர்வுள்ள அரசு இந்த சொட்டு மருந்தை நேரடியாக அந்த மாநில அரசு நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு பதிலாக சென்னையிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்திற்கு அதற்கான ஒப்பந்தத்தை கொடுத்துவிட்டு, 100 எம்.எல். 75 ரூபாய்க்கு பெறுவதற்குப் பதிலாக 125 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். நான் 100 எம். எல்.க்கு 140 ரூபாய் என்று கேள்விப்பட்டேன். நாம் 125 ரூபாய் என்றே வைத்துக் கொள்வோம். ஏறத்தாழ 5 கோடி ரூபாய் அந்த திட்டத்தினுடைய முதலீடு. அந்த சொட்டு மருந்திலே மட்டும் ஏறத்தாழ 1.1 கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அன்றைய அமைச்சர் அவர்கள் 10% மற்றவர்கள் எல்லாம் என்று சொன்னால், அவர் முதலமைச்சருக்கு நெருக்கமானவர் என்று காரணத்தினால் 20% இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டதின் விளைவுதான் அந்த சொட்டு மருந்திலேகூட ஊழல். நன்றியுள்ள நாய்களுக்கு இருக்கும் தாய்மை உணர்வுகூட, கடந்த கால ஆட்சியாளர்களுக்கு இல்லை என்றுதான் நாங்கள் அன்றைக்கு எதிர்த்துப் பேசினோம். அந்த ஆட்சிக்கு எதிராக நடந்தோம். எனவே இன்றைக்கு பொறுப்பை ஏற்றிருக்கிற தமிழகத்து முதலமைச்சர் அவர்கள் கடந்த காலத்து அரசின் தவறுகளை எல்லாம் உணர்ந்து பார்த்து அவற்றுக்கெல்லாம் மக்கள் மன்றத்திலே நீதி கிடைக்கும் வகையில் நல்லதைச் செய்ய வேண்டும் என்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

மீண்டும் தேசியக் கவி பாரதியாரின் வரிகளை மட்டும் சொல்லி விடைபெற விரும்புகிறேன்.

*" வையகம் காப்போரேனும்*
*சிறு வாழைப்பழக் கடை வைப்பவரேனும்*
*பொய் அகல தொழில் செய்து*
*பிறர் போற்றிட வாழ்பவர்*
*எங்கணும் மேலோர் "*

என்ற பாரதியினுடைய கவிதையை நினைத்துப் பார்க்கிறேன். எனவே, இன்றைக்கு நல்ல துவக்கத்தை துவங்கியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சி நடக்கின்ற காலங்களில் மிகச்

சிறந்த ஒரு மேலான மனிதர் என்கின்ற பேற்றினை பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரிய வாயப்பினை நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) சரி, என்ன பாயின்ட் ஆப் ஆர்டர், சொல்லுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் ஞாபகப்படுத்துகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையாற்றுகிறபோது--குறைகளைச் சொல்லவோ, குற்றச்சாட்டுகளைச் சொல்லவோ உரிமை உண்டு--மற்ற அமைச்சர்கள் 10% என்றும், முதலமைச்சருக்கு வேண்டியவர் நெருக்கமானவர் என்பதால் 20% என்றெல்லாம் வாங்கினார்.--என்று சுகாதாரத் துறை அமைச்சர் என்று சொல்லிவிட்டு--அந்த இலாக்கா அமைச்சர் என்றால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடந்த காலத்தில், நீங்கள் பேசியதைத்தான் அவர் இப்போது திரும்பப் பேசியிருக்கிறார், உட்காருங்கள். அடுத்த உறுப்பினர் கிணத்துக்கடவு சண்முகம். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் குறிப்பெடுத்து அதற்கு பதில் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு உறுப்பினர் பேசுகின்றபோதும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பதில் சொல்வது என்பது ஒரு தவறான முன் உதாரணமாக இந்த அவைக்கு ஆகிவிடும். ஏதாவது பிரச்சினை இருந்தால் அவர் பேசுகிறபோது அந்த உறுப்பினர் இப்படி பேசினார், அது தவறு என்று குறிப்பிடுவதற்கு அவருக்கு உரிமையுண்டு. ஆனால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவர் பதில் சொல்லுவதைப்போல இந்த அவை நடக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேருடைய பேச்சுக்களுக்கு இடமில்லாமல் போய்விடும். எனவே நீங்கள் அதை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கிணத்துக்கடவு சண்முகம். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இங்கே இருக்கின்ற ஆளும் கட்சி மற்றும் தோழமைக்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேசுகின்றபோது நான் தொகுத்து வைத்து பதில் சொல்லவேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் தனியாக நான் பேசுகிற நேரத்தோடு இதற்கும் நேரம் ஒதுக்கிக் கொடுத்தால் நான் இதற்கெல்லாம் சொல்லமுடியும். அதனால்தான் அவ்வப்போது குறுக்கிட்டு சொல்லுகிறேன். பொதுக்கூட்டத்தில் பேசுவது என்பது வேறு, சட்டமன்றத்தில் பேசுவது என்பது வேறு. அதுதான் எனது ஒரே ஒரு வேண்டுகோள். மாண்புமிகு முதலமைச்சர் 9-வது முறையாக சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறார். நான் 6-வது தடவையாக சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். எனவே அவருக்கு நன்றாகத் தெரியும். பொதுக்கூட்டத்தில் பேசுகின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் இங்கே பேசக்கூடாது. இங்கே சொன்னால், எழுதிக் கொடுத்துவிட்டு ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகள் இருந்தால் சொல்லவேண்டும். ஒட்டுமொத்தமாக சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறிய குற்றச்சாட்டுக்கள் அனைத்துக்கும் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். நான் கூறிய குற்றச்சாட்டுகள் இன்றைக்கும் ஆதாரத்தோடு அரசு கோப்புகளில் இருப்பதைத்தான் முழுமையாக நான் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் கடந்த காலத்தில் இதேபோன்ற குற்றச்சாட்டுகளை, பல்வேறு குற்றச்சாட்டுகளை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறார்கள். 10% என்று நான் சொல்வதற்கு முன்னால், முதலில் சொன்னவர் அவர்தான். அவர் இதை மறுக்கமாட்டார் என்று நினைக்கிறேன். அப்படிப் பெயர் சூட்டியதற்குச் சொந்தக்காரரும் அவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, நான் ஒன்றும் தவறான கருத்தை அவைக்குச் சொல்லவில்லை. இதை பொதுக்கூட்டம் என்றும் நான் கருதவில்லை. இன்றைக்கு வேண்டுமானால் இதை பொதுக்கூட்டமாக அவர் ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் அன்றைக்கு அவர் எப்படிச் செயல்பட்டாரோ அதேபோன்ற உணர்வோடுதான், மக்கள் மேலுள்ள அன்பின் காரணமாக நல்லதைச் செய்யவேண்டும் என்கிற எண்ணத்தோடு இதுபோன்ற கருத்துக்களை எடுத்து வைக்கிற ஒரு ஆக்கபூர்வமான எதிர்கட்சியாக எப்போதும் தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) இயக்கம் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் நல்ல பேச்சாளர். சிறப்பாக பேசுவார். அவர் ஏற்கெனவே பேசி நான் கேட்டிருக்கிறேன். அது வேறு பிரச்சினை. நான் சொன்னது வெளியிலே பேசுகிறபோது இதுபோன்ற குற்றச்சாட்டுகளை வேண்டுமானால் சொல்லலாம், இங்கே பேசுகிறபோது 10%, 20% என்று பேசுவது இல்லை என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதே அவையிலே நீங்கள் பேசியிருக்கிறீர்கள். நான் உங்கள் பக்கத்தில் இருந்தவன். மறந்துவிடவில்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நீங்கள் உட்கார்ந்து இருக்கின்ற இடம் நீதிபதி ஸ்தானம். இங்கே இருந்ததை நினைத்து அங்கே பேசிக்கொண்டிருக்கக்கூடாது. அங்கே இருந்து எது நியாயமோ அதைச் சொல்ல வேண்டும். இங்கே இருந்ததை நினைத்து அங்கே பேசக்கூடாது.

*பிற்பகல் 12.35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதாவது நீங்கள் பொதுக் கூட்டத்தில் பேசுவது போலப் பேசுகிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஒரு காலத்தில் துதிபாடும் பஜனை மடமாகவே இருந்தது. அது மாதிரியில்லாமல் தான் கூறியதற்கு அவரே 'பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டார். அதோடு பிரச்சினையை முடியுங்கள். அடுத்து திரு. ம. சண்முகம்.

***திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆன்றோர்களும், சான்றோர்களும், இந்தப் பேரவையை சீரிய கருத்துக்களாலும், தூய சிந்தனைகளாலும் அலங்கரித்து தமிழகத்தைத் தலை நிமிர வைத்துள்ளார்கள். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையிலே உரையாற்ற என்னைப் போல மிகச் சாதாரணமானவனுக்கு வாய்ப்பளித்த தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நல்லாட்சி அமைத்திடவித்திட்ட தமிழக வாக்காளப் பெருமக்களுக்கும், குறிப்பாக கிணத்துக்கடவு சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும், எனது நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். 11-வது சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் எனக்கு பேச வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச்



சட்டமன்றப் பேரவையிலே எனது பேச்சு கன்னிப் பேச்சு. இந்தக் கன்னிப்பேச்சில் எண்ணியபடியெல்லாம் பேசாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து எங்களை வளர்த்து ஆளாக்கிய அண்ணா அவர்களின் வழியிலே நடப்போம் என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறளோவியம் தந்த தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுடைய அரசினுடைய கொள்கை விளக்கமாக இந்த மேதகு ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அந்த உரையிலே அடங்கியுள்ள கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்துபவையாக அமைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூற பெருமையடைகிறேன். ஆளுநர் உரையிலுள்ள பொருள்கள் காலம் கடந்து நிற்கிறது என்பதை நாம் இந்த நேரத்திலே உணரவேண்டும். அது மட்டுமல்லாமல் கட்டெறும்பு, உருவிலே சிறிதாக இருந்தாலும் கூட யானையை வீழ்த்திவிடக்கூடிய அளவிற்கு அது பலம் பெற்றிருக்கிறது என்பதை நாம் படித்திருக்கிறோம். ஆகவே அந்த கட்டெறும்புக்குள்ள பலம்போல் கண்டிப்பாக நமது இந்த ஆளுநர் உரையிலே உள்ள பொருள் மிகவும் விளக்கமாக இருக்கிறது என்பதை கூறிக்கொள்ள பெருமைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆளுநர் உரையின் மீது பேச அதிக நேரம் எடுத்துக்கொள்ளாமல் எனக்கு கொடுத்த வாய்ப்பை எனது தொகுதி மக்களுக்காக பேசலாம் என்று நினைக்கிறேன். காரணம், ஆளுநர் உரையைப் பற்றி மிகவும் பெருமையாக எனக்கு முன்னால் ஆளுங்கட்சி நண்பர்களும், தோழமைக் கட்சி நண்பர்களும் எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆகவே, எனக்கு கிடைத்த நேரத்தை எனது தொகுதி மக்களுக்காக பயன்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனமாய் இருக்கும் என்று நினைக்கிறேன். எனது தொகுதி, விவசாயிகள் மிகுதியாக உள்ள தொகுதி. ஆண்டுதோறும் வறட்சியால் பாதிக்கப்பட்டு வாடிக்கொண்டிருக்கிற விவசாயிகள் அடங்கிய தொகுதியாகும். ஆகவே நீர்ப்பாசனத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தொகுதி இன்னும் 20 ஆண்டுக்காலத்தில் பாலைவனமாகிவிடும் என்று ஆய்வுகள் அச்சுறுத்துகின்றன. அதையெல்லாம் மனதிற்கொண்டு குளம், குட்டைகளை நிறைய அமைக்க வேண்டும். எங்களது மாவட்டத்திலே குளம், குட்டைகள் மிகவும் குறைந்த அளவிலேதான் இருக்கின்றன. ஆகவே, குளம், குட்டைகளையெல்லாம் அமைத்து பராமரிக்கப்படுமேயானால் வருங்காலத்திலே அந்த அபாயத்தை நாம்

தடுக்க முடியும். அது மட்டுமல்லாமல் மேற்கு நோக்கி செல்கின்ற ஆறுகள் பொள்ளாச்சி பகுதியிலே நீராறு, நல்லாறு, ஆனைமலையாறு ஆகிய ஆறுகள் இருக்கின்றன. அந்த நல்லாறு திட்டத்தை நமது அரசு ஏற்கெனவே ஆட்சிக்காலத்தில் இருந்த போது தயாரிக்க முன்வந்தது. அதற்கு பின் வந்த அரசின் காலத்தில் கிடப்பில் பயனற்று போய்க் கிடந்தது. மேலும் நல்லாறு திட்டத்தில் நாம் அணைகட்ட வேண்டும் என்று சொன்னால் கேரள அரசின் அனுமதி கூடத் தேவையில்லையென்று நான் அறிகிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆகும் செலவை பார்க்கின்றபோது மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. 356 கோடி ரூபாயில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் 9 டி. எம். சி. ஃபீட் தண்ணீர் பாசன வசதிக்காக கிடைக்கும். மேலும் 90,000 ஏக்கர் நிலம் ஆண்டு முழுவதும் வளமாக இருக்க முடியும் என்பதை நான் அதிகாரிகள் மூலம் உணர்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி கிணத்துக்கடவு, பொள்ளாச்சி தொகுதி மக்களுக்கு ஒரு வளமான வாழ்க்கையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல எங்கள் பகுதியில் தென்னை மரங்கள் ஆண்டுதோறும் வறட்சியால் பாதிக்கப்பட்டு வாடுகின்ற நிலையில் இருப்பதால் விவசாயிகள் கண்ணீர் விடுகிறார்கள். காய்த்த மரங்களெல்லாம் காய்ந்துபோன நிலைமையில் இருக்கின்றன. ஆகவே உயிர்த் தண்ணீரை-அதாவது உயிர்த் தண்ணீர் என்று சொன்னாலே அதன் அர்த்தம் உங்களுக்குத் தெரிந்திருக்கும்-அந்த உயிர்த் தண்ணீரை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஓரிரு நாட்களில் அந்த உயிர்த் தண்ணீரை விடுவதற்கு அரசாணை பிறப்பிக்கப்படவுள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். நன்றி . . . .

பிற்பகல் 12.40

*மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுகிறேன் என்று நினைக்கவேண்டாம். மாண்புமிகு உறுப்பினருடைய கன்னிப் பேச்சில் அவருக்குச் சாதகமாக ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். பரம்பிக்குளம்-ஆழியாறிலிருந்து உயிர்த் தண்ணீர் தென்னை மரங்களுக்கு விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார். நேற்றைக்கு நான் ஈரோடு சென்று பரம்பிக்குளம்-ஆழியாறு மேற்பார்வை அதிகாரிகளோடு கலந்து பேசியிருக்கிறேன். ஏற்கெனவே 4-வது ஸோனுக்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் தண்ணீர் கொடுத்து நிறுத்தியிருக்கிறோம். இரண்டாவது மண்டலத்தில் இருக்கிற தென்னை



மரங்களுக்கு எல்லாம் உயிர்த் தண்ணீர் விடவேண்டும் என்ற உத்தரவை நேற்று பிறப்பித்துவிட்டு வந்திருக்கிறேன். அது உறுப்பினருக்குச் சாதகமான நிலை. இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை அவர் வேண்டுகோள் வைத்ததற்காகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ம. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதே முறையை ஆண்டுதோறும் வறட்சி ஏற்படும் காலங்களில் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுக்காண்டு மழை போதுமானதாகப் பெய்யாததால் காடுகள் பாதிக்கப்படும் நிலை உள்ளது. நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்கள் மலை வளமும், மரவளமும் நிறைந்த பகுதிகள். எங்கள் பகுதிக்கு புனர்வாழ்வு அளிக்கின்ற வகையில் காடுகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பை மதிப்பிற்குரிய ஆற்றல் திறன் படைத்தவரும், நேர்மை குணமும் கொண்ட திரு. பொங்கலூர் பழனிச்சாமி அவர்களிடம் கொடுத்தது சாலப் பொருத்தமுடையதாகும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். கண்டிப்பாக அவர்களுடைய பொறுப்பிலே இருக்கிறபோது காடுகளிலே மரங்கள் வெட்டப்படமாட்டாது என்று அவர் சார்பாகவும் எங்கள் பகுதி மக்கள் சார்பாகவும் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, மிகப் பெரிய பிரச்சினை குடிதண்ணீர். எங்கள் தொகுதியிலும், பகுதியிலும் உள்ள கிராமங்களிலே குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் அல்லல்படுவதைப் பார்த்து நாங்கள் எல்லாம் கண்ணீர் வடிக்கின்ற நிலையிலே இருக்கின்றோம். தொகுதிக்குள்ளே செல்லும்பொழுதெல்லாம், குடிதண்ணீர்ப் பிரச்சினை மிகவும் வாட்டுகின்ற பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, நாம் ஆழ்குழாய்க் கிணறுகளை நம்பியிராமல் எங்கள் பகுதியிலே இருக்கிற அம்பராம்பாளையம் குழாய் மூலம் தண்ணீர் எடுத்துச் சென்று கிராம மக்களுக்கு வழங்குகின்ற பணி முடியும் தருவாயில் இருக்கிறது. அதேபோன்று மற்ற பகுதிகளுக்கும் அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைப்பதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் உள்ள செலவுகளை எல்லாம் மிச்சப்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று நான் இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே, மணக்கடவில் நீர்த்தேக்கம் ஒன்று இருக்கிறது. அந்தத் தேக்கத்திலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவரப்படுமேயானால் எங்கள் தொகுதி முழுவதற்குமே குடிதண்ணீர் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படும்.

நான் மாநில கூட்டுறவு வங்கியிலே 20 ஆண்டுக்காலம் பணிபுரிந்திருக்கிறேன். அங்கே நடக்கின்ற விவரங்களைப் பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறேன். கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்பெறாத காரணத்தால் எந்த அளவுக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கின்றேன். அதுமட்டுமல்ல, முன்பு தகுதியற்ற உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறார்கள். எனக்குத்தெரிய பொள்ளாச்சி பகுதியில், பொள்ளாச்சி நகர வங்கியிலே 5000 உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறார்கள். அதுவும் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் வீடுகளிலிருந்து அந்தச் சேர்க்கை நடந்திருக்கிறது. இதை என்னால் நிரூபிக்க முடியும். இப்படிப்பட்ட நிலையிலே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தகுதியற்ற உறுப்பினர்களை எல்லாம் நீக்கி, தகுதிவாய்ந்த உறுப்பினர்களைக் கொண்டு விரைவில் தேர்தல் நடத்தி, கூட்டுறவை நம்பியிருக்கிற மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தெருவிளக்குப் பிரச்சினை. நான் ஓட்டுக் கேட்கச் சென்ற அனைத்துப் பகுதிகளிலேயும் விளக்குகள் எரிவதில்லை. தமிழகம் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இருண்டுதான்--இருண்டகால ஆட்சியைத்தான் கண்டிருக்கிறது. அதை நிரூபிக்கின்ற வகையிலே கிராமங்கள் எல்லாம் இருளிலே மூழ்கிக் கிடக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்று அதிகாரிகளைக் கேட்டபோது, கடந்த கால அரசு தரமற்ற பல்புகளை வாங்க ஒப்பந்தம் செய்திருக்கிறது. மைசூர் லாம்ப் போன்ற தரமற்ற பல்புகளை வாங்கிப் போடும்போது அவை ஒன்றிரண்டு நாட்களிலே பழுதடைந்து விடுகின்றன என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே, பல்புகளை வாங்குகின்ற உரிமையை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தரமான பல்புகளை வாங்க உடனடியாக இந்த அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, தலையாய பிரச்சினை நியாயவிலைக் கடைகளிலே பொருள்கள் கிடைப்பதில்லை. நமது அரசு 30 நாட்களும் பொருள்கள் கிடைக்கின்ற வகையிலே ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. இந்தத் திட்டத்தை மக்கள் உண்மையிலேயே வரவேற்கின்றனர். மக்களின் மகிழ்ச்சியையும் நான் நேரிடையாகப் பார்த்திருக்கின்றேன். நியாய விலைக் கடைகளிலே நடைபெற்ற ஊழல்களை எல்லாம் ஆராய்ந்து நல்லதொரு முடிவினை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்து எடுத்துக்கொண்டு வந்து கடைகள் மூலம் பொருள்கள் வினியோகிக்கப்படுகின்றன. அங்கிருந்து எடுத்துக்கொண்டு வரும்பொழுது எடை குறைவாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. ஆகவே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்து நேரிடையாக சம்பந்தப்பட்ட லிங்க் சொசைட்டிகளுக்கு கொடுக்கப்படுமேயானால் அத்தகைய குறைகளை நிவர்த்தி செய்ய வழி இருக்கிறது. அதையும் நாம் ஆராய்ந்து பார்த்துச் செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலே நெசவாளர்கள் நிறைய வாழ்கின்றனர். நெசவாளர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் பாதுகாப்பாக இருந்திருக்கிறது. கடந்த 5 ஆண்டுக் காலத்தில் நெசவாளர்கள் மிகவும் அல்லல்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நியாய விலையில் தரமான நூல்கள் கிடைக்கப்பெறவில்லை. அதுமட்டுமல்ல, அவர்கள் இரவுபகலாக நெசவுத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய மின் விளக்குகளுக்குச் சலுகைக் கட்டணம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-45*

சாலை வசதிகள் பற்றி நான் கூறத் தேவையில்லை. எந்த ஊரை டுத்துக்கொண்டாலும், பழுதடைந்து உள்ள எல்லா சாலைகளும் ரமைக்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், ாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல், ரோடு போடாமலே, ணம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, சாலைகளை சீரமைத்து, சாலை சதியளிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ாண்புமிகு முதல்வர் அவர்கள், இதுபோன்ற அடிப்படைத் தவைகளிலே கவனம் செலுத்தி, நமது ஆட்சியை தேர்ந்தெடுத்த க்களை மகிழ்வூட்ட வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் வெற்றி விழா கொண்டாடாவிட்டாலும் கூட, நாடெங்கும் மக்கள் வெற்றிவிழா கொண்டாடுகிறார்கள். அதை நான், தொலைபேசி மூலம், எனது தொகுதியில் கேள்விப்பட்டேன். நம்மை ஆட்சியில் அமர வைத்த மக்களுக்கு நாம் நல்ல பல திட்டங்களை, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரக் கேட்டுக் கொண்டு இந்த கன்னிப் பேச்சுக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே, இந்த அரசு பசுமைப் புரட்சியை, இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்து இருப்பதை வரவேற்கத்தக்கதாகக் கருதுகிறோம். அதிலும் நான் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைச் சேர்ந்தவன். காவிரி பாசனத்தைப் பெறும் விவசாயிகளின் நலனை முழுமையாகப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இறுதித் தீர்வு காண நடுவர் மன்றத்தின் முன், முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு இடைக்கால ஆணையை செயல்படுத்துவது குறித்து, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கக் கூடியதுதான். ஆனால், காவிரி நீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில், கால் நூற்றாண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருக்கிற பிரச்சினை ஆகும். காவிரி நீர் பிரச்சினை தமிழகத்தினுடைய வாழ்க்கை, கலாச்சாரம் இவைகளோடு ஒன்றிப்போய் உள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினையில், தீர்வு காணுவதற்கான முயற்சிகளை நம்முடைய ஆட்சி சிறப்பான முறையிலே செய்யவேண்டுமென்பது, என்னுடைய அழுத்தமான கருத்து. இது இலட்சக்கணக்கான விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற பிரச்சினை. குறிப்பாக நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில், 12 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வை இழக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் தீர்வு காணுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கிற ஒரு அரசியல் சூழ்நிலையை ஒரு நல்ல சூழ்நிலையாகக் கருதுகிறோம்.

குறிப்பாக, கர்நாடக மாநில முதல்வர் அவர்களும், மரியாதைக்குரிய நம்முடைய முதல்வர் அவர்களும், இரண்டு தினங்களுக்கு முன்பாக



சந்தித்துப் பேசி ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். அதிலே, காவிரி நீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இடைக்காலத் தீர்ப்பை உடனடியாக நிறைவேற்றி வருவதற்குரிய முயற்சிகளை தமிழகத்தின் நலன்கள் பாதிக்காத வகையில் செய்யப்படும் என்ற கருத்து சொல்லியிருப்பதை வரவேற்கத்தக்கதாகக் கருதுகிறோம். இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும், ஜுன்-12ஆம் தேதி, மேட்டூர் அணை திறந்துவிடப்படுகிறது. வருகிற 12ஆம் தேதிக்குள், கால அவகாசம் மிகக் குறைவாக உள்ளதால், இடைப்பட்ட காலத்திற்குள்ளாக பேசி, இடைக்கால உத்தரவை நிறைவேற்றுவதற்குரிய அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காவிரி நீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இடைக்கால தீர்ப்பினை நிறைவேற்றுவதோடு, நிரந்தரமான தீர்வு காண்பதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த காவிரி பிரச்சினைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே தீர்வு காண வேண்டுமென்பது, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் விருப்பமாகும். இந்த ஆட்சியிலேதான், தீர்வு காணப்பட முடியும் என்று நாங்கள் அழுத்தமாக நம்புகிறோம். அதிலும் குறிப்பாக, இரண்டு முதலமைச்சர்களும் பேசி இருக்கிற கருத்தின் அடிப்படையிலே காவிரி நீர் பிரச்சினையை, இடைக்காலத் தீர்வோடு மட்டுமல்லாமல், நிரந்தரமான தீர்வு காண, கர்நாடக அரசுடன் பேச்சு வார்த்தையின் மூலமாக தீர்வு காண முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதிலே தண்ணீர் அளவு எவ்வளவு என்பது பிரச்சினையாக இருக்கிறது. எந்த ஆட்சி வந்தாலும், தண்ணீரைக் குறைத்துப் பெறுகிறார்களா, அல்லது கூடுதலாகப் பெறுகிறார்களா என்ற போட்டாபோட்டி இருக்கிறது. தண்ணீரைக் குறைத்துப் பெற்றுவிட்டால், அதுவும் பிரச்சினையாக ஆகும் என்ற கருத்து இருக்கிறது. இதைக் கூட நம்முடைய ஆட்சியாளர்கள் கவனத்திலே கொண்டு, தண்ணீர் அளவு எவ்வளவு வருகிறது என்பதை பிரச்சினையாகக் கருதாமல்,

தமிழகத்தினுடைய நலன்கள் பாதிக்காத வகையிலே, தண்ணீரைப் பெறுவதற்கான நிரந்தரத் தீர்வு காணப்படுவது என்பதுதான், இந்த காவிரி நீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உகந்ததாக இருக்குமென்று, என் கருத்தாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லையென்றால், பின்னால் வரக்கூடிய மாநில அரசாங்கத்தின் நிலைமை வேறாக இருக்கலாம். இப்போது வளர்ந்து வந்து இருக்கிற இந்தச் சூழ்நிலையிலே பின்னால் மீண்டும் தமிழகம் பாதிக்கும் என்ற அபாயம் இருக்கிற காரணத்தாலே இதற்கு உடனடியாக தீர்வு காணுவதற்குரிய முயற்சிகளை இந்த ஆட்சியாளர்கள் எடுக்கவேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அடுத்ததாக குடிமராமத்துப் பணிகளைப் பற்றியெல்லாம் சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை நம்முடைய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய விவசாய சங்கப் பிரதிநிதிகளே சந்தித்துக்கூட மனுக்கள் அளித்து இருக்கிறார்கள். அவர்களிடத்திலே ஒரு உத்தரவாதம் சொல்லப்பட்டு இருக்கிறது. குறிப்பாக ஆறுகள், ஏரிகள், குளங்களை சீரமைக்கக்கூடிய பணிகளை செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். அவைகளை பாதிக்க செய்கிற அந்த நெய்வேலி காட்டாமணக்குகளை எல்லாம் உடனடியாக நீக்க வேண்டும் என்ற கருத்து வலுவாக சொல்லப்பட்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்கூட அதை ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக கவனம் செலுத்தி செய்வேன் என்று அந்த விவசாய சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதி அளித்து இருக்கிறார்கள். உடனடியாகத் தண்ணீர் வருவதற்குள் அதை நிறைவேற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதற்கு முன்னால் ஏரி, குளங்கள் தூர் எடுத்ததாகவும், கரை கட்டியதாகவும் கணக்கு எழுதப்பட்டு இருக்கிறது ; பணம் எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்தக் காரியங்கள் எல்லாம் நிறைவேறவில்லை என்பதை இந்த சபையிலே நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதை இந்த ஆட்சி உடனடியாக நிறைவேற்றி விவசாயிகளுக்கு கடைமடைப் பகுதி வரையிலும் அந்தத் தண்ணீர் செல்வதற்குரிய முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று நான் என் கருத்தாகச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



அதோடு விவசாயிகளுக்கு ஒரு நல்ல செய்தி சொல்லப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நில வரி ரத்து செய்து கடன் நிவாரணம் வழங்கப்படும் என்று செய்தி, விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். அதோடு இந்த வரி தள்ளுபடி, கடன் தள்ளுபடி என்பது சென்ற ஆண்டு பாதிப்புக்கு என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு முந்தைய ஆண்டே அதேபோல் பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. தொடர்ந்து தமிழகத்திலே வறட்சி, புயல், வெள்ளம் என்று மாறி மாறி இயற்கையினுடைய பாதிப்புகளின் காரணமாக விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால், அவர்கள் வாங்கி இருக்கக்கூடிய கடனை திரும்ப செலுத்த முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டு இருக்கிறது. இதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்—குறிப்பாக அவர் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தாலே--நான் இதை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த விவசாயிகள் கடன் சுமையிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையில், அவர்கள் இதற்கு முன்னால் பெற்று இருக்கிற கடன்களை எல்லாம் சேர்த்து கடன் நிவாரணம் பெற்றால்தான் அவர்கள் மீளாக் கடனிலிருந்து விடுதலை பெற்று, மறு உற்பத்தி செய்வதற்குரிய வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல குத்தகை பாக்கி. இந்த குத்தகை பாக்கிகளுக்காக நில வெளியேற்றங்கள் கடந்த ஆண்டுகளிலே தொடர்ந்து நடைபெற்று இருக்கின்றன. இந்த ஆண்டுகூட நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் 3 ஆயிரம் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதற்குரிய மனுக்கள் நீதி மன்றத்திலே அளிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அபாயம் இருக்கிறது. சென்ற ஆண்டும் அதேபோல ஆயிரக் கணக்கான விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். முந்தைய் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலே ஐந்தில் ஒரு சதவீதக் குத்தகை பாக்கியைக் கட்டினால் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதி பல்வேறு நிவாரணம் அளிக்கப்பட்டதாக சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அது முழுமையாக அந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை. அந்த ஐந்தில் ஒன்று கட்டாத விவசாயிகள் மீண்டும் அந்த ஐந்து பங்கையும் சேர்த்து, சென்ற ஆண்டுகளிலே கட்ட வேண்டிய குத்தகையையும் சேர்த்து கட்டவேண்டிய ஒரு அவலநிலைக்கு ஆளாகி மீண்டும் கடன் சுமையிலே அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, குத்தகை

பாக்கி முழுவதையும் தள்ளுபடி செய்து, அவர்களை நிலத்தைவிட்டு வெளியேற்றுகிற அந்தக் கொடுமையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்தி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்ததாக மதுவிலக்கு கொள்கைபற்றி இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதிலே குறிப்பாக மாவட்டத்திற்கு ஆயிரம் பெண்களை பணியில் அமர்த்தி, குடியினால் வரும் கேடுகளை விளக்கி, அதன் மூலமாக இந்த மதுவிலக்குக் கொள்கையை நிலை நிறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருப்பது ஒரு புதிய முயற்சி; வரவேற்கக்கூடிய முயற்சிதான். ஆனால், இந்த முயற்சியின் மூலமாக மட்டுமே கள்ளச் சாராயத்தை தடுத்து நிறுத்த முடியுமா என்பது மிகப் பெரிய கேள்விக்குறி. அதை நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். இந்த முயற்சியின் மூலமாகவே இது நிறைவேற முடியாது. காரணம், கள்ளச்சாராயப் பேர்வழிகளின் ஆதிக்கம் தமிழகத்திலே வேகமாக வளர்ந்துவிட்டது. முன்னால் பல்வேறு சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள்.

சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே, கள்ளச் சாராயம் தமிழகத்திலே ஆறாகப் பெருகி ஓடுகிறது என்று சொன்ன காரணத்தினாலேயே, எங்கள் சட்டசபைக் கட்சித் தலைவர் மாண்புமிகு பழனிசாமி அவர்கள் சொன்னார் என்ற காரணத்தினாலேயே அவர் வீட்டில் சாராயம் இருக்கிறதா என்று போலீஸை விட்டு ரெய்டு செய்யச் சொன்ன கொடுமை நடந்தது. சென்ற ஆட்சியாளர்களிடம் நடந்த கொடுமை தெரியும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினருக்கே இந்தக் கதி ஏற்படுகிறபோது, ஆயிரம் பெண்கள் போய் இந்தப் பிரச்சாரத்தைச் செய்து, இந்த கள்ளச்சாராய பேர்வழிகளை ஒழிப்பதற்கான முயற்சிகளையோ அல்லது குடிப்பவர்களை தடுப்பதற்கான முயற்சிகளையோ செய்ய முடியுமா என்பது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது, தலைவலிக்கு தைலம் தேய்த்தது மாதிரித்தான் இருக்குமே தவிர, முழுமையான தீர்வு காணுவதற்குரிய முயற்சியாக இது அமையாது. இந்தக் கள்ளச்சாராயப் பேர்வழிகளை தடுப்பதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டிய காவல் துறையே அதற்கு உடந்தையாக இருந்ததுதான் உண்மை. காவல் துறையே



மாமூல் வாங்கிக் கொண்டு, அதைக் காய்ச்சுவதற்கான ஆதரவாளர்களாக இருந்தார்கள். ஆகவே, காவல் துறையை புனரமைத்து, இதை சரியாக முறையாக இயங்க நடவடிக்கை எடுக்கச் செய்வதன் மூலமாகத்தான் கள்ளச் சாராயத்தை முறியடிக்க முடியும். அதற்குரிய முயற்சிகள் எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-55

பல கிராமங்களில் பல சம்பவங்கள் இருக்கின்றன. எனக்கே தெரியும். கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் தொழிலில் நசிந்துபோய்விட்டால், அவர்கள் தொழிலை நிறுத்திவிட்டால், ஏன் இந்த கள்ளச்சாராயத்தை காய்ச்சவில்லை என்று சொல்லி காவல் துறை அதிகாரிகளே, காவலர்களே கேட்டுகூட அவர்களுக்கு கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கு மூலதனம் கொடுத்து வருகின்ற நிலைமை பல ஊர்களில் இருக்கிறது. நான் அதை ஆதாரபூர்வமாக சொல்ல முடியும். ஆகவே, இப்படி மோசமான நடவடிக்கைக்கு காரணமாக அமைந்திருக்கிற காவல் துறையில் கொள்கை மாறுதலைக் கொண்டுவந்து இந்த கள்ளச்சாராயத்தை ஒழிப்பதன் மூலமாகத்தான் தமிழகத்திலே நம் மக்கள், குறிப்பாக பெண்கள் எதிர்பார்க்கிற அந்த நிகழ்ச்சியிலே மாறுதலை கொண்டு வரமுடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல இந்த கள்ளச்சாராயம் விற்கிற இடங்களைப் பொறுத்தவரையில் பள்ளிக்கூடங்கள், அரசு அலுவலகங்கள், பேருந்து நிலையங்கள், வழிபடும் தலங்கள், கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் விற்பனை செய்யப்படுகிறது. இவைகளை எல்லாம் உடனடியாக தடுப்பதற்குரிய முயற்சிகளை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அதிலும் குறிப்பாக சமீபத்திலேகூட திண்டுக்கல்லிலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. சாராயம் காய்ச்சியதை அரசாங்கத்திற்கு தகவல் கொடுத்தார் என்ற காரணத்திற்காக 5 குழந்தைகளை கொடூரமான முறையிலே வெட்டிக்கொலை செய்து மணலிலே புதைக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு தகவல் கொடுக்கிறவர்களுக்கு இந்த மாதிரியான கதி வருகிறது. ஆக, ஒரு நம்பிக்கை இல்லாத நிலை வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட சமூக விரோதிகளை ஒடுக்க வேண்டுமென்று சொன்னால், தனி நபர்களாலோ, இப்படிப்பட்ட காரியங்கள் மூலமாகவோ மட்டுமே நடைபெறுமா என்பது கேள்வியாக இருக்கிற காரணத்தினாலே அரசாங்கம் இதிலே அழுத்தமான கருத்தைக்

கொண்டு, பொதுமக்களும் இதற்கு முனைப்போடு இருந்து காரியங்களை செய்வதன் மூலமாக மட்டுமே தான் இதை நிறைவேற்ற முடியும் எனபதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இதை உடனடியாக கவனத்தில் கொண்டு இதிலே ஒரு மாறுதல் செய்து, இந்தக் கள்ளச்சாராயத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று பணிவாய் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தக் கள்ளச்சாராயத்தின் காரணமாகவே ஜாதிய, இனக்கலவரங்கள், இன்னும் பல்வேறு பிரச்சினைகள் நடைபெறுகின்றன. கிராமங்களில் ஏற்படுகின்ற கலவரங்களுக்கு எல்லாமே இந்தமாதிரியான கள்ளச்சாராயம் தான் பிரதான காரணமாக இருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கோயில் கொள்ளைகளைப் பற்றி எல்லாம் நிறைய விவரங்கள் வந்திருக்கின்றன. கோயில்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்து கிடையாது. குறிப்பாக, தஞ்சை, நாகை மாவட்டங்களிலே தொன்மையான, வரலாற்று சிறப்பு மிக்க, கலாச்சார சின்னங்களாக திகழக்கூடிய கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த மாவட்டங்களிலே இப்படி ஏராளமாக இருக்கின்ற அந்தக் கோயில்களை எல்லாம் பாதுகாப்பது பற்றி இங்கே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. எங்களுக்கு இன்னும் ஐயம் இருக்கிறது. அந்தக் கோயில்களிலே எல்லாம் விலை மதிக்க முடியாத பொருள்களும், வைரங்களும், வைடூரியங்களும் இன்ன பிற பொருள்களும் இருந்தன. அதைப்பற்றி, கொள்ளைபோன விஷயங்களைப் பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மன்னார்குடி தொகுதியில் இருக்கிற ராஜகோபால சுவாமி செங்கமல தாயார் ஆலயத்தில் இருந்த நகைகளைக் காணவில்லை. பலகோடி ரூபாய் மதிப்பு உள்ள அந்தச் சொத்துக்கள் களவாடப்பட்டன. களவாடியவர்களை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஆகவே, இந்த ஆட்சியாவது அப்படிக் களவுபோன, பல்வேறு கோயில்களில் கொள்ளையடிக்கப்பட்ட அந்த நகைகளை, களவுபோன அந்த விலைமதிக்க முடியாத பொருள்களை எல்லாம் மீட்டு எடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். உடனடியாக அப்படிப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்திச்



சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். முன்னால் நடந்த ஆட்சியிலே கும்பாபிசேகம் எல்லாம் நடந்தது. ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது பக்தர்களுக்கு. ஆனால், கும்பாபிசேகம் நடப்பதற்கு முன்பாகவே கும்பாபிசேகம் நடைபெற்ற கோயில்களில் இருந்த அந்தப் பொருட்கள் எல்லாம் கொள்ளை அடிக்கப்பெற்றன. அதற்கு பின்னால்தான் கும்பாபிசேகமே நடந்திருக்கிறது. எங்கள் கோயிலிலும் அப்படித்தான் நடந்தது. கும்பாபிசேகம் நல்ல காரியம். ஆனால் அதற்கு முன்னதாகவே நகைகளும் கொள்ளை அடிக்கப்பட்டன. இந்த ஆட்சியில் அப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்து மக்களின் மத்தியிலே, பக்தர்களின் மத்தியிலே அழுத்தமாக இருக்கிறது. அதை எலலாம் செய்ய வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, மன்னார்குடி தொகுதி என்பது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நிறைய பரிச்சயப்பட்ட தொகுதி. அந்தத் தொகுதியை சார்ந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. மன்னை, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆத்ம நண்பராக விளங்கியவர். அவர்கள் அந்தத் தொகுதியினுடைய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்கள். அந்தத் தொகுதியிலே கடந்த காலங்களிலே எந்தவிதமான வளர்ச்சிப் பணிகளும் நிறைவேற்றப்படவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் அந்தத் தொகுதியில் பல்வேறு காரியங்களைச் செய்வதற்காக தனிக் கவனம் செலுத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நகராட்சிப் பகுதியிலே, குறிப்பாக கீழப்பாலம், அதை கட்டுவதற்கான முயற்சிகளை எடுத்து, சென்ற முறை அதற்கான அனுமதி எல்லாம் வழங்கப்பட்டும் அந்த வேலைகள் செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகளை உடனடியாக செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோல, மன்னார்குடியிலே இருக்கிற அந்த மருத்துவமனையை சீரமைத்து, படுக்கை வசதி, இன்னும் பல்வேறு வசதிகளை செய்ய வேண்டும். இதுபோன்ற காரியங்களை செய்ய வேண்டும் என்று கேட்டு, (மணியடிக்கப்பெற்றது) குறிப்பாக அந்தத் தொகுதிக்கு உட்பட்ட களப்பால் பகுதியிலே ஓ.என்.ஜி.சி.—இந்திய எண்ணெய் எரிவாயு நிறுவனத்தால் நிறைய இடங்களில் எண்ணெய் எடுக்கப்படுகிறது. ஆனால் எடுத்த இடங்களில் அந்த இயற்கை எரிவாயுவைக் கொண்டு

மின்சார நிலையம் தொடங்குவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டும், அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை எல்லாம், மறுபடியும் கவனத்தில் கொண்டு அந்த மின்சார நிலையத்தை அமைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அங்கே குடிநீர் பிரச்சினை ஏராளமாக குறிப்பாக மன்னை நகராட்சியிலும், தொகுதியிலும் இருப்பதால் அதுகுறித்து தீர்வு காண்பதற்கும், மின்சார பற்றாக்குறையைப் போக்க தீர்வு காண்பதற்குமான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணி ஆகப் போகிறது. வழக்கம் போல அவையை நடத்த வேண்டுமென்றால் இன்னும் 3 மாண்புமிகு உறுப்பினர்கள்தான் பேச முடியும். ஆகவே இனிமேல் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பத்து நிமிடத்திற்கு மேல் தங்கள் பேச்சை அமைத்துக்கொள்ளக்கூடாது என்று அன்போடு கேட்டுக்கொண்டு, அடுத்து வில்லிவாக்கம் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*பிற்பகல் 1-00*

***திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழோடு கலைஞரும், கலைஞரோடு தமிழும் விளையாடுகின்ற இந்த மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு, வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனக்கு அந்த வாய்ப்பினைத் தந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து என் உரையைத் தொடங்குகின்றேன்.

கவர்னருடைய உரைப் புத்தகம் சிறியதாக இருந்தாலும் தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டு அத்தனை கருத்துக்களையும் அதிலே உள்ளடக்கி, பல நல்ல திட்டங்களை கவர்னர் உரை தந்திருக்கிறது. குறிப்பாக, வறட்சிப் பகுதியில் நிலவரியை ரத்து செய்துள்ளதை எங்களது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் முழு மனதோடு வரவேற்கிறோம். அதேபோன்று கிருஷ்ணா நதி நீர் இந்த ஆண்டு இறுதிக்குள் கிடைக்கும் என்பதைக் கேட்கும்போது உண்மையிலேயே உள்ளம் எல்லாம் பூரிப்படைகிறது. காரணம்,



என்னுடைய தொகுதி ஆசியாவிலேயே மிகப் பெரிய தொகுதி. தமிழக முதல்வர் அவர்களும் பெரிய மனது வைத்து என்னுடைய தொகுதிக்காக செய்வார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் என்னுடைய தொகுதியில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொள்ள வந்தபோது, பத்தாயிரம் பேர் வருவார்கள் என்றுதான் நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் 50,000லிருந்து 1 லட்சம் பேர் வரை திரண்ட அந்த மாபெரும் கூட்டத்தில், தமிழினத் தலைவர் அவர்கள் பேசும்போது அங்கே அடிப்படை வசதிகளைச் செய்து தருவதாகச் சொன்னார்கள்.

பள்ளி நாட்களில் அங்கே சென்று பார்க்கிறபோது குழந்தைகள் எல்லாம் வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்பதைப் போல் தண்ணீர் கேட்பார்கள். பல பள்ளிக்கூடங்களிலே தண்ணீர் தொட்டிகள் இல்லாத நிலை இருக்கிறது. அதே நேரத்தில் ஒரு வகுப்பிலே 80 பிள்ளைகள், 100 பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது. உடனடியாக ஆசிரியர்களை நல்ல முறையில் நியமித்து, கல்விக்கூடங்களை சீரமைக்கவேண்டும். அதேபோன்று பாட நூல்களையும் மாற்றியமைக்கவேண்டும். கடந்த ஆட்சிக்காலத்தில் பாடப்புத்தகங்களில் பல விரும்பத்தகாத சில சம்பவங்களையெல்லாம் சேர்த்து பல பொய்யான தகவல்களைத் தந்திருக்கிறார்கள். மக்கள் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு இதையெல்லாம் மாற்றியமைக்கும் என்ற முழு நம்பிக்கை இருக்கிறது. என்னுடைய பகுதியிலே பல தொழிற்சாலைகள் மூடியிருக்கின்றன. அவைகளைத் திறக்கவும், நடவடிக்கை எடுக்கவேண்டும். மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளில் பணியாற்றிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மிகவும் மோசமான நிலையில் வறுமையோடு வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த மூடிய தொழிற்சாலைகளை திறக்கின்ற வரையிலே, அவர்களுக்கு ஒரு நிவாரணத்தைத் தருகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடிப்படை வசதிகளை நாம் செய்து தருவதாக இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கழிவு நீர் வசதியைப் பொறுத்தவரையில், பல இடங்களில் பார்க்கும்போது மக்கள் தீவு போன்ற பகுதிகளில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஒரு பெண்மணி என்னிடம் மனதைவிட்டுச் சொன்னார். எனக்கு உடல்நிலை சரியாக இல்லாத சூழ்நிலையில் நாங்கள் இயற்கை உபாதைகளைத் தீர்க்கப் போவதற்குக் கூட சிரமமாக இருக்கிறது, காலை 6 மணிக்கு முன்பே

செல்லவேண்டும், இல்லையென்றால் மாலை 6 மணிக்கு பின்னாலேதான் செல்லவேண்டும், அதுபோன்ற நிலைதான் இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே கழிப்பிட வசதிகளை கிராம வாரியாகச் செய்து தரவேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறபோது, என்னுடைய தொகுதியில் எனக்காகப் பணி செய்த ஒரு தம்பி இப்போது டி.பி. ஆஸ்பத்திரியில் இருந்தார். அங்கே அவரைப் பார்க்கச் சென்றபோது, அங்கே பார்த்தேன். ஏற்கெனவே உங்களுடைய ஆட்சியிலே அப்படிப்பட்ட டி.பி. நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரியில் இரண்டு இரண்டு முட்டைகள் கொடுத்தது போய் இப்போது ஒரு முட்டைக்கே வழியில்லாத நிலையிலே, சத்துணவுக் கூடத்திலே போடுகின்ற சாப்பாட்டை விட மோசமான சாப்பாட்டை அந்த ஆஸ்பத்திரியிலே உள்ளவர்களுக்குப் போடுகிறார்கள் என்று தெரிந்து கொண்டோம். ஆகவே முதல்வர் அவர்கள், சென்னையிலே புரசை தொகுதிக்குள் உள்ள அந்த டி.பி. ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்து, உடனடியாக முட்டை போன்ற சத்தான உணவினை நோயாளிகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். டி.பி. ஆஸ்பத்திரிகளில் இருப்பவர்கள் எல்லாம் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள்தான். அந்த ஏழை எளிய மக்கள் மீது அன்புகூர்ந்து அதை நிச்சயமாகக் கவனிப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இட ஒதுக்கீடு குறித்து, சிறுபான்மை மக்கள் மீது அக்கறை கொண்டு பல குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அமைதிக் குழுக்கள் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். அதை நாங்கள் முழு மனதோடு வரவேற்கிறோம். அந்த அமைதிக்குழுக்கள் போடும்போது அதிகாரத்தோடு கூடிய அமைப்பாக அவைகள் இருக்கவேண்டும். ஏற்கெனவே கடந்த ஒரு வருட காலமாக தென் மாவட்டங்களில் நடந்த சம்பவங்கள் காரணமாக பழைய அரசு மக்களால் தூக்கியெறியப்பட்டிருக்கிறது. நீங்கள் வந்தவுடன் சிறுபான்மை மக்களும், குறிப்பாக அரிஜன மக்களும், அவர்களே ஆட்சிக்கு வந்ததைப் போல நினைத்து விழா எடுத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் அந்த அமைதிக் குழுக்களுக்கு முழுமையான அதிகாரம் கொடுத்து, தவறு செய்பவர்களைக் கண்டிக்கும் வகையில், தண்டிக்கும் வகையில் மாஜிஸ்டிரீயல் பவர் கொடுத்து, உண்மையான நடவடிக்கை எடுக்கும் வகையில் அமைக்கவேண்டும். டம்மியாக இல்லாமல் உண்மையான அதிகாரத்தோடு இருக்குமானால் அந்தக் குழுக்கள் வாயிலாக மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து தரமுடியும். அதைப்போல எங்களுக்கு இட ஒதுக்கீடு மிக அவசியமான ஒன்று.



பேர்களில் ஒருவர் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவராக இருக்கிறார். இருப்பினும் எங்களுக்கு வேலை வாய்ப்பில் தமிழக அரசில் 1 சதவீதம் தான் இருக்கிறோம். குறைந்தபட்சம் 10 சதவீதமாவது எங்களுக்கு வேலை வாய்ப்பைத் தர வேண்டும். சிறுபான்மை சமுதாயத்தின் பாதுகாவலராக இருக்கிற நீங்கள் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் தரவில்லை என்றால் அந்த வாய்ப்பு எந்தக் காலத்திலும் எங்களுக்கு கிடைக்காது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதைப்போல பெரிய மனத்தோடு மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னவுடன் 10 ஆயிரம் ரூபாய் இறந்தவர்கள் குடும்பத்திற்கு கொடுத்தீர்கள். எங்களுடைய உளங்கனிந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக் கொண்டு, எங்களுடைய உலமாக்கள் பெருமக்கள் பலபேர் ரிடையரானவர்களுக்கு 400 ரூபாய் கொடுத்தது ஏற்கனவே இருந்த அரசு. ஆனால் அர்ச்சகர்களுக்கு 800 ரூபாய், 900 ரூபாய் கொடுக்கிறார்கள். அதைப்போல, அர்ச்சகர்களுக்கு எந்த அளவுக்கு தருகிறார்களோ அந்த அளவுக்கு நீங்கள் ரிடையரான உலமா பெரு மக்களுக்கு கொடுக்க வேண்டும். அதை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

நியாய விலைக் கடைகளில் பல குற்றங்கள் நடைபெறுகின்றன. நியாய விலைக் கடைகள் 500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு கடை என்று இருக்கின்றன. ஆனால் நடைமுறையில் 1500, 2000 ரேஷன் கார்டுகள் இருக்கின்றன. அங்கே விநியோகத்தை முறைப்படுத்த வேண்டும். என்னுடைய தொகுதியில் இருக்கிறவர்கள் 5 கி.மீ. வந்து கூட வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஆகவே, 500 கார்டுகளுக்கு மேலே இருக்கிற இடங்களில் மேலும் ஒரு கடை ஆரம்பித்து அந்த ஏழை மக்களுடைய குறைகளைப் போக்க வேண்டும்.

தற்போது பேருந்து வசதிகள் சரியாக இல்லை. ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு 3-லிருந்து 5 கி.மீ. நடந்து வந்து தான் பஸ் பிடிக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு பஸ்ஸை மிஸ் பண்ணி விட்டார்கள் என்றால் வேலை வாய்ப்பை இழந்து விடுகிற நிலை இருக்கிறது. நான் தொகுதியில் சென்ற இடங்களில் ரெட்ஹில்ஸ்-அம்பத்தூர் புறவழிச் சாலை வழியாக பேருந்துகள் விட வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே அதையும் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

நேற்றைக்கு கூட ஒரு வன்முறை கும்பல் ஒருவரை கடத்திச் சென்று நிறைய ரூபாய்களைப் பிடுங்கிக் கொண்டு விட்டிருக்கிறார்கள். காவல் துறையில் பல்லாவரம் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் ஆகியிருக்கிறது. மூர் ஸ்ட்ரீட்டில் இருக்கிற ஒரு வியாபாரியினுடைய மகனை பட்டப் பகலிலே பல்லாவரம் சாலை சந்திப்பில், ஜி.எஸ்.டி. ரோடு சந்திப்பில் கடத்தி இருக்கிறார்கள். அப்புறம் விட்டு விட்டதாக தகவல் இருக்கிறது. ஆகவே அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே இதுபோன்ற வன்முறை கும்பல்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து இருக்கிறீர்கள். எனவே இதையும் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர நான் ஆசைப்படுகிறேன்.

ஆசியாவிலேயே பெரிய நிர்வாகமான அம்பத்தூர் நகராட்சி நிர்வாகத்தில் ஒரு குறிப்பிட்ட என்ஜினியர் சுற்றி சுற்றி 10 வருடங்களாக அதே இடத்தில் இருந்து கொண்டு அந்த நிர்வாகத்தை நடத்துகிற மாதிரி ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இப்போது கூட அந்த நகராட்சிக்கு பக்கத்திலே இருக்கிற ஆவடியிலே இருந்து கொண்டு அந்த நகராட்சி நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிற மாதிரி ஒரு மாயையை கிளப்பிக் கொண்டிருக்கிறார். அவர் மீது முறையான விசாரணை வேண்டும். அங்கே இருக்கிற எந்த நிகழ்ச்சியும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரம் கொடுத்தால் உங்களைத் தனியாக சந்தித்து அங்கே நடக்கிற குறைகளை உங்களுக்கு நேரடியாகச் சொல்ல விருப்பப்படுகிறேன். அதைப்போல கோயம்பேடு அங்காடி பல ஆண்டுகளாக திறக்கப்படாமல் இருக்கிறது. மக்கள் கொத்தவால் மார்க்கெட் வந்து போவதற்கு சிரமப்படுகிறார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கோயம்பேடு அங்காடியை உடனடியாகத் திறக்க வேண்டும். அதன்மூலமாக ட்ராபிக் கன்ஜெஷன் தீர்வு பெறும். ஏற்கனவே போட்ட அரசு திட்டங்கள் பல நிலுவையில் இருக்கின்றன. முறையாக திட்டங்கள் மக்களிடம் செல்லவில்லை. கடந்த 2 ஆண்டுகளாக எங்கள் நகராட்சி பகுதியிலும் சரி, வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியை உள்ளடக்கிய பகுதிகளிலும் சரி ஒரு சாலை கூட பிராப்பராக போடவில்லை. மெயின்டெய்ன் பண்ணவும் இல்லை. ஆனால் பில்கள் எல்லாம் போட்டு எடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே உங்கள் ஆட்சிக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலோடு செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். அதைப்போல எந்த நிகழ்ச்சி நடந்தாலும், எந்த வேலை கொடுத்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொண்டு செய்ய வேண்டுமென்ற



நிலை ஏற்படுமேயானால் அங்கே குறை இல்லாமல், ஊழல் இல்லாமல் செய்ய முடியும். ஆம்புட்ஸ்மென் என்ற ஒரு அமைப்பை நிறுவி இருக்கிறீர்கள். அதன்மூலம் குறைகளை உங்களிடத்தில் நாங்கள் ரெப்ரசென்ட் பண்ண முடியும். அதன்மூலம் ஊழலற்ற நல்லாட்சியை, நல்ல நிர்வாகத்தை நாம் தர முடியும். அந்தப் பகுதியில் எடுத்துக் கொண்டீர்களானால் எங்கே பார்த்தாலும் குடிதண்ணீர் பிரச்சினை, சாலைகள் சரியில்லாத பிரச்சினையும் எங்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கவனத்தில் கொண்டு நிச்சயமாக எங்களுக்கு ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தித் தருவீர்கள். கவர்னர் உரையில் எல்லாவிதமான கருத்துக்களையும் மக்கள் மீது அக்கறை கொண்டு சொல்லிய உங்களுக்கு நான் சார்ந்திருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்களுடைய உளமார்ந்த பாராட்டுகளை, நன்றியைத் தெரிவித்து, வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1–10*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** அடுத்து பெண்ணாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

***திரு. ஜி.கே. மணி:** வணக்கத்திற்குரிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததும் தொன்மை வாய்ந்ததும், மாண்புகளும், மரபுகளும் நிறைந்ததுமான இந்த மாமன்றத்திலே எனது காலடி எடுத்து வைப்பதற்கு வாய்ப்பினை நல்கிய எங்களின் மக்கள் காவலர், மறுமலர்ச்சி நாயகர், தமிழினப் போராளி, டாக்டர் ஐயா அவர்களை இந்த நேரத்திலே நினைவு கூர்ந்து, தந்தை பெரியார் அவர்களின் கொள்கையான சமூக நீதிக் கொள்கையை முன்வைத்து, இட ஒதுக்கீட்டிற்காக டாக்டர் ஐயா அவர்கள் போராடிய காலத்தில், அந்தப் போராட்டத்திலே இன்னுயிர்களை ஈந்த அந்தத் தியாக மறவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய வணக்கத்தைச் செலுத்தி, என்னுடைய தாயும், தந்தையும் இந்த நேரத்திலே உயிரோடு இல்லை என்று சொன்னாலும் கூட, தாய் தந்தை ஆகிய இருவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைச் சொல்லி, என்னுடைய முதல் உரையான இந்த கன்னி உரையை இந்தநேரத்திலே துவங்குகிறேன்.

*"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி"*

என்று தமிழ் மறை சொல்கிறது.

அந்த அளவிலே இந்த உலகத்திலே வாழக்கூடிய உயிரினங்கள் எல்லாம் வானத்தை நோக்கி, மழை பெய்கின்றதா என்று பார்த்து வாழக்கூடிய நிலையிலே, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய குடிமக்கள் எல்லாம் ஆட்சி எவ்வாறு அமைகின்றது என்பதை, ஆட்சியாளர்களைப் பார்த்து வாழக்கூடிய காலம் என்பதைக் கருத்தில் கொண்டுதான், எங்களுடைய மக்கள் காவலர், டாக்டர் ஐயா அவர்கள், கடந்த விழுப்புரம் மாநாட்டிலே, தமிழாய்ந்த தலைமகன், தமிழ்நாட்டின் முதல்வராக வரவேண்டும் என்றுசொல்லி, டாக்டர் ஐயா அவர்கள், அரியதோர் சிம்மாசனத்தை, அந்த மாநாட்டிலே அமர்த்தி தமிழ்இனத்தினுடைய தலைவராக, தமிழக முதல்வராக, டாக்டர் கலைஞர் அவர்கள் வரவேண்டும் என்று சொல்லி, அன்றே அந்த எண்ணத்தை வெளிப்படுத்தினார்கள் டாக்டர் ஐயா, டாக்டர் கலைஞர் அவர்களுடைய எண்ணம், இடையிலே எவ்வாறு இருந்தாலும் கூட எங்களின் டாக்டர் ஐயா அவர்களுடைய எண்ணம்-இன்று ஈடேறி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்ற வள்ளுவனுடைய கூற்றுக்கு இணங்க, மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி செய்த நேரத்திலே இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தைத் துவங்கினார்கள். அந்தப் போராட்ட காலத்திலே, பல்வேறு உயிர்களை எல்லாம் காவல் துறையினரால் பலிகொடுத்த நேரத்தை எல்லாம் நாங்கள் எண்ணி ஏங்கினோம், பரிதவித்தோம். ஆகவே, தந்தை பெரியார் இட ஒதுக்கீட்டிற்காக எவ்வாறு எல்லாம் பாடுபட்டார்களோ, அந்தக் கொள்கை இந்த நாட்டிலே ஈடேறவில்லை; நிறைவேறவில்லை என்று சொல்லி காத்துக்கிடந்த நேரத்திலே, 1991 ஆம் ஆண்டு இப்போது முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராக இருந்த நேரத்திலே, அழகாக ஒரு வார்த்தையை சொல்லி, நாங்கள் உங்களுக்கு மாங்கனியைத் தருகிறோம், சுவைத்துப் பார்த்துச் சொல்லுங்கள் என்று சொல்லி, சமூக நீதிக் கொள்கையான இட ஒதுக்கீட்டுக் கொள்கையை ஏற்று, 107 சமுதாய மக்களுக்கு 20 சதவீத இட ஒதுக்கீட்டைக் கொடுத்தார்கள். அந்த 107 சமுதாய மக்களும், அந்த மாங்கனியை ருசித்தார்கள். ஓரளவிற்கு தித்திப்பாக இருந்தது. ஆகவே, இந்த நேரத்தில், நான் சார்ந்திருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி



சார்பிலேயும், எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் சார்பிலேயும், டாக்டர் கலைஞர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை மறுபரிசிலனை செய்யுங்கள். மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல, உதாரணத்திற்குச் சொல்லப் போனால், கர்நாடக மாநிலத்திலே இருக்கக்கூடிய தொகுப்பு இடஒதுக்கீட்டு (கம்பார்ட்மெண்ட் ரிசர்வேஷன்) முறையை நீங்கள் தமிழ்நாட்டிலே அமல்படுத்தவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மெத்தப் பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிச் செய்கின்ற காரணத்தினாலே, தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையை நிறைவேற்றுகின்ற நீங்கள் இந்தத் தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே நீக்கமற நிறைந்திருப்பீர்கள், நீக்கமற நிறைந்துள்ள உங்கள் புகழ் நிலைத்து இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்று சொல்வார்கள். அதுபோல, இங்கே நமது மேதகு ஆளுநர் அவர்கள் உரையைப் பார்க்கின்ற நேரத்திலே அந்த உரை ரத்தினச் சுருக்கமாக இருந்தாலும் கூட இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படக்கூடிய அரிய பல நல்ல திட்டங்கள் அதில் இருக்கின்றன என்பதை நாம் எல்லாம் நன்றாக அறிவோம். அந்த அளவிலே, ஆளுநர் உரைக்கு, முதலாவதாக என்னுடைய சார்பிலேயும், டாக்டர் ஐயா அவர்கள் சார்பிலேயும், நான் சார்ந்திருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலேயும், மீண்டும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப் பற்றிக் குறிப்பிடுகின்ற நேரத்திலே, இங்கு 69 சதவீத இட ஒதுக்கீட்டைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, இதற்கு முந்தைய அரசாங்கம் செய்த குளறுபடியின் காரணமாக, 69 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்தாத நிலையிலே, இன்று குளறுபடியாக இருக்கிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம். இங்கே வீற்றிருக்கக்கூடிய தமிழக முதல்வர், எப்பாடுபட்டாவது, உச்சநீதிமன்றத் தடையை, அந்த அவல நிலையைப் போக்கி, நடப்பாண்டில் நீங்கள் நிச்சயமாக பல்வேறு கல்வித் துறையிலே உள்ள மருத்துவப் படிப்பு, பொறியியல் படிப்பு போன்றவற்றிலே, இந்த ஆண்டிலேயே நிச்சயமாக இட ஒதுக்கீட்டுக் கொள்கையை நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்க்கிறோம்.

அதேபோல், இந்த இட ஒதுக்கீட்டு முறையை, எம்.பி.சி., பி.சி., எஸ்.சி., எஸ்.டி., போன்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அமல்படுத்தக்கூடிய நேரத்தில், அரசுத் துறைகளிலே மட்டுமல்லாமல் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அரசுத் துறைகளில் மட்டுமல்லாமல் பொதுத் துறை நிறுவனங்கள், போக்குவரத்துக் கழகங்கள், மின் வாரியங்கள், தனியார் நிறுவனங்கள் போன்ற அனைத்துத் துறைகளிலேயும், நீங்கள் நிச்சயமாக நிறைவேற்றுவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஆகவே இப்படி எல்லாத் துறைகளிலும் நிறைவேற்றுகின்ற காரணத்தினாலே இந்தத் தாழ்த்தப்பட்ட மலைவாழ், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் பயனடைவார்கள். நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அதேபோல, கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் ஆறு வயது முதல் 11 வயது வரை தொடர்ந்து கல்வி கற்பிக்கப்படுவதை உறுதி செய்ய உயர் முன்னுரிமை என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த உயர் முன்னுரிமை என்பது கட்டாயக் கல்வியா அல்லது என்ன என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று சொல்லி பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரையில் இலவசக் கல்வி என்று சொல்கின்ற நேரத்திலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களை எல்லோருக்கும் நன்றாக நினைவிருக்கும். ஆகவே காமராஜர் அவர்கள் எந்த அளவிற்கு தமிழக மக்கள் மத்தியிலே நிலைத்து இருக்கின்றார்களோ, அதேபோல் தமிழக மக்களாகிய நாங்கள் எல்லாம் டாக்டர் கலைஞர் அவர்களை நீக்கமற நினைத்திருக்க வேண்டுமென்று எங்கள் உள்ளம் துடிக்கின்றது. ஆகவே அந்த அளவிலே உங்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் தயவு செய்து ஒரு உத்தரவைப் போடவேண்டும். என்ன உத்தரவு என்று சொன்னால், 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை ஆண்களும், பெண்களும் கட்டாயக் கல்வி கற்கவேண்டும் என்ற ஒரு தலையாய உத்தரவைப் போடுகின்ற காரணத்தினாலே இந்த நாட்டிலே இருக்கக்கூடிய கல்வி நிலை உயரும். ஒரு தனி மனித குடும்பம் வாழ வேண்டுமென்று சொன்னாலும், இந்த நாடு வாழ வேண்டுமென்று சொன்னாலும், கல்வியின்றி எதுவுமே அமையாது. ஆகவே அந்த அளவிலே கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையிலே



மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த கட்டாயக் கல்வித் திட்டத்தை 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரையிலே நீங்கள் நிச்சயமாக அமல்படுத்தவேண்டுமென்று சொல்லி இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றுகூட கல்வியைப் பற்றிச் சொல்கின்ற நேரத்திலே கடந்த ஆட்சிக் காலத்திலே, அறிவொளி இயக்கம் என்று அமல்படுத்தப்பட்டது. அந்த அறிவொளி இயக்கத்தினால் ஏதாவது பயன் இருந்ததா என்று சொன்னால், நிச்சயமாக பல கோடிக்கணக்கான தொகை செலவிட்டாலும்கூட, அது பூஜ்யம் என்றுதான் சொல்லமுடியும். ஆகவே, இப்போது கல்விக் கண்ணைத் திறக்கக் கூடிய நம்முடைய அரசாங்கத் திட்டமானது அந்த பூஜ்யமாக இல்லாமல் நிலைத்து நிற்கக் கூடிய ஒரு நிரந்தரத் திட்டமாக 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை கட்டாயக் கல்வியாக இருக்கவேண்டுமென்று சொல்லி இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதைச் சொல்கின்ற நேரத்திலே இன்று இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாடு உன்னத நிலையிலே இருக்கின்றது என்று சொல்லி பெருமையாக நாம் மார் தட்டிச் சொன்னாலும்கூட, இன்றும் கிராமப்புறங்களிலே வாழக் கூடியவர்கள் பேருந்துகளுக்குச் செல்கின்ற நேரத்திலே பார்த்தால், பச்சை வண்டி வருகின்றதா, சிவப்பு வண்டி வருகின்றதா, எந்த ஊருக்கு இந்த வண்டி செல்கின்றது என்பதை வண்டியினுடைய நிறத்தைப் பார்த்து ஏறிச் செல்லக் கூடிய அவலநிலை இருக்கின்றது. பேருந்து நிலையங்களிலே கிராமப்புற மக்கள் கழிப்பிடத்திற்குச் செல்கின்ற நேரத்திலே, மலம் கழிக்கச் சென்றாலும் சரி அல்லது சிறுநீர் கழிக்கச் சென்றாலும் சரி, அந்த நேரத்திலே அந்தக் கழிப்பிடத்திலே ஆண்கள் படம் இருக்கின்றதா அல்லது பெண்கள் படம் இருக்கின்றதா என்பதைப் படத்தைப் பார்த்து கழிப்பிடத்திற்குச் செல்லக் கூடிய நிலையில் கல்வியினுடைய அவலநிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட அவலநிலை எல்லாம் மாறக் கூடிய காலம் எந்நாள் என்று ஏங்கிக் கிடக்கின்ற இந்தத் தமிழ் மண்ணிலே தமிழகத்தினுடைய மூத்த மகனாக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்கள், தாங்களே அந்தக் கட்டாயக் கல்வி வசதியைச் செய்துதர வேண்டுமென்று சொல்லி இந்த நேரத்திலே உங்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே, படித்த இளைஞர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இந்த நாட்டிலே

பெருகி வருகின்ற இந்த நிலையைப் போக்கக் கூடிய ஒரு திட்டத்தை குறிப்பிடாத ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை எந்த வகையிலே எல்லாம் நீங்கள் போக்க இருக்கின்றீர்கள், எப்படி நிறைவு செய்யப் போகிறீர்கள் என்பதை நீங்கள் தெளிவுபடுத்தவேண்டுமென்றுச் சொல்லி பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிச் சொல்கின்ற நேரத்திலே இங்கே மூடிக் கிடந்த தொழிற்சாலைகளை எல்லாம் திறப்போம், தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்போம் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே அந்த அளவிலே தேர்தல் அறிக்கையிலே இருந்தும், மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் இல்லை என்பது ஒரு வருத்தமான செய்தியாக இருந்தாலும்கூட, இங்கே தமிழகத்தினுடைய முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழ்நாட்டிலே மேட்டூர் பியர்ட்செல் என்று சிறப்பு வாய்ந்த ஒரு மில் இருக்கின்றன. அந்த மில்லைப் போல 30-உக்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் இங்கே மூடிக் கிடக்கின்றன. அதேபோல் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி மூடிக் கிடக்கின்றது. இந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் தங்கள் காலத்திலே திறந்து, இந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு நீங்கள் மறுவாழ்வு அளிக்கவேண்டுமென்றுச் சொல்லி, இந்த நேரத்திலே நான் பணிவன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல தமிழ் வளர்ச்சி என்று சொல்லுகிற நேரத்திலே (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தாலேயும், நிறைய கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிற காரணத்தினாலேயும் எனக்கு சற்று சில மணித்துளிகள் அதிகமாகக் கொடுக்குமாறு உங்களை மிகப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்னாலே அரை மணி நேரம் கூட கொடுத்தார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், பேரவைத் தலைவர் அவர்களையும்......

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரவு-செலவுத் திட்டத்திலே உங்களுக்கு அதிக நேரம் கொடுக்கிறேன். இன்னும் உங்கள் கட்சியைச் சார்ந்த 3 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். நான் ஏற்கெனவே



அறிவித்திருக்கிறேன். 1½ மணிக்கு இந்த அவையின் நிகழ்ச்சிகள் முடிவுற வேண்டும். ஆகவே தயவுசெய்து பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். அதேபோல, தமிழ் நாட்டிலே என்னுடைய பெண்ணாகரம் சட்டப் பேரவைத் தொகுதியைப் பார்ப்போம் என்று சொன்னால், தமிழ் நாட்டிலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு மிகவும் பின் தங்கிய தொகுதியாக இருக்கக்கூடிய ஒரு தொகுதி, என்னுடைய பெண்ணாகரம் சட்டப் பேரவைத் தொகுதி. கரடு முரடு மேடு பள்ளங்கள் நிறைந்த பகுதி. மலைப்பகுதி நிறைந்த பகுதி, குடி தண்ணீர் வசதி இல்லாத பகுதி, ரோடு இல்லாத பகுதி, அது முதல்வர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே, ஓரளவுக்கு சாதாரண மக்கள் கூட மன நிறைவோடு வாழ வேண்டும் என்று சொன்னால், அங்கே ஏராளமான வளர்ச்சித் திட்டங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வது எல்லாம், நீங்கள் என்னுடைய தொகுதியான பெண்ணாகரம் தொகுதியை மிகவும் பின் தங்கிய தொகுதியாக அறிவிக்க வேண்டும் என்று சொல்லி இந்த நேரத்திலே நான் உங்களைப் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்திலே பெண்ணாகரம் தொகுதியிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையமான ஹொகேனக்கல் இருக்கிறது. அந்த ஹொகேனக்கல், பெண்ணாகரத்திலேயிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கிறது. அந்த ஹொகேனக்கல்லிலேயிருந்து குடி தண்ணீர் திட்டம் ஒன்று அமல்படுத்துவோம் என்று சொன்னால், அது பெண்ணாகரம் தொகுதி முழுவதற்கும் நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அந்த அளவிலே இந்த ஹொகேனக்கல் குடிதண்ணீர் திட்டத்தை தொகுதி முழுவதிலும் அமல்படுத்த வேண்டும் என்றும், அதேபோல பெண்ணாகரத்தைக் கடந்து தர்மபுரி தொகுதி, மொரப்பூர் தொகுதி போன்ற பல்வேறு தொகுதிகளையும் பக்கத்திலே உள்ள தொகுதிகளையும் இந்தக் குடிதண்ணீர் திட்டத்திலேயே அடக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலே, ஹொகேனக்கல் குடிதண்ணீர் திட்டத்தை நீங்கள் நிச்சயமாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று சொல்லி, இந்த நேரத்திலே பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியிலே பாப்பாரப்பட்டி என்ற ஒரு இடம் இருக்கிறது. குடிநீர் வசதியே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே அறிவித்து விட்டேன். நீங்கள் 2 நிமிடங்கள் அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள். உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை மிகவும் பின் தங்கிய தொகுதியாக மாற்றச் சொல்வதற்குக் காரணம், தமிழ்நாட்டிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்த போது, மின் இணைப்பே இல்லாத கிராமமே இல்லை என்ற நிலை ஒரு காலத்திலே அறிவிக்கப்பட்டது. அப்படி இருந்தும்கூட, என்னுடைய தொகுதியிலே மின் இணைப்பே இல்லாத சில கிராமங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு அந்த கிராமங்களைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், பூஞ்சோலை, எள்ளுக்குழி, காட்டுநாயக்கன் அள்ளி போன்ற பல்வேறு கிராமங்களில் இதுவரையில் மின் இணைப்பே கிடையாது. அப்படிப்பட்ட தொகுதியாக இருக்கிறது. அதேபோல ரோடு வசதியே இல்லாத கிராமங்கள் இருக்கின்றன. அது ஜன்மாரம்பட்டி, பில்ல பட்டி, எலுமல் மந்தை, மலையூர், முருங்கமரத்தரசு, தும்பல் கொல்லை, ஒண்டிக்கோட்டை போன்ற இப்படிப்பட்ட கிராமங்களில் இதுவரையில் பாதை வசதியே இல்லாமல் இருக்கிறது. குடிதண்ணீர் வசதியே இல்லாமல் இருககிறது. குடிநீர் ஆதாரங்களே இல்லாமல் இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளே இல்லாத தொகுதிகளை தாங்கள் மனம் உவந்து, இன்று தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மிகவும் பின் தங்கிய தொகுதியான என் தொகுதியை, மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவித்து, அந்தத் தொகுதியினுடைய முன்னேற்றத்திற்கு நீங்கள் நல்லுதவி அளிக்க வேண்டும் என்று சொல்லி கேட்டுக் கொள்வதோடு, அப்படி ஒரு ஆதரவு கொடுப்பீர்களேயானால், அந்தத் தொகுதி மக்களும் நானும் தங்களுக்கு என்றும் நன்றிக் கடன் பட்டவர்களாக இருப்போம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு ஹொகேனக்கல் என்ற சுற்றுலா மையம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் அங்கு அடிப்படை வசதிகூட கிடையாது.

வந்த மக்களைக் கவரக் கூடிய ஒரு பூஞ்சோலையோ அல்லது ஒரு பூங்காவோ இருக்கிறதா என்று சொன்னால், அதுவும் கிடையாது. சுகாதார வசதி கிடையாது. மருத்துவ வசதி கிடையாது. ஆகவே இந்த ஹொகேனக்கல் சுற்றுலா மையத்தை, ஒரு நல்ல சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு அதிக நிதி ஆதாரங்களை ஒதுக்கிட வேண்டும் என்று



சொல்லி இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இங்கே நெடும்பூர் அரசு உயர்நிலைப் பள்ளி, பெண்ணாகரம் அரசு உயர்நிலைப்பள்ளி ஏரியூர் அரசு உயர்நிலைப் பள்ளி போன்ற பள்ளிகளில் எல்லாம் தேவையான ஆசிரியர்கள் இல்லாமல், கல்வி நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே ஆசிரியர்கள் நியமனத்தை நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அப்படி ஆசிரியர்கள் நியமனத்திற்காக தாங்கள் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ஜ் மூலமாக ஏற்பாடு செய்வதாக அறிவித்துள்ளமைக்கு மிக்க நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நான் உங்கள் பேச்சைத் தடுக்கப்போகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காக மக்களுடைய எதிர்பார்ப்புகளை உணர்ந்து, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிச்சயமாக செய்வார்கள் என்ற நம்பிக்கையின் பெயரிலே என்னுடைய சார்பிலேயும், டாக்டர் ஐயா அவர்களின் சார்பிலேயும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளவங்கோடு தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்லியிருக்கக்கூடியவாறு பார்த்தால் 5 நிமிட நேரம் தான் இருக்கிறது. எனக்குக் குறைந்தபட்சம், என்னுடைய கட்சியின் சார்பாக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1½ மணிக்கு முடித்துக் கொள்ளலாம். நாளை காலை தொடர்ந்து பேச உங்களை அனுமதிக்கிறேன்.

**திரு. டி. மணி:** குறிப்பாக தேர்தல் சீர்திருத்தம் அவசியமான தேவை என்பதை வற்புறுத்தி, இதைக் கொண்டு வர மாநில அரசு பெரும் முயற்சி எடுக்க வேண்டும். சுயேச்சை வேட்பாளர்கள் எண்ணிக்கை என்பது சர்வ சாதாரணமாக அதிகரிக்கின்ற காரணத்தினாலே, அதைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வது அத்தியாவசியம் ஆகும். அதே நேரத்தில் விகிதாச்சார முறையை அடிப்படையாகக்

கொண்டு நாம் தேர்தலைச் சந்திப்பது சற்றே உதவிகரமாக இருக்கும். அது போன்று நம்முடைய வாக்காளர்களுக்குப் புகைப்படம விநியோகித்தல், விடுபட்ட வாக்காளர்களைச் சேர்த்தல் போன்ற மாற்றங்களும் தேர்தல் சீர்திருத்தத்தில் வர கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம். மாநில சுயாட்சி தேவை என்பதை வரவேற்கின்றோம். இது விஷயத்தில் சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது மிக அவசியமானதாகும். அதேநேரத்தில் எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டில் பலமான மத்திய அரசும், பலமான மாநில அரசும் தேவை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மொழிப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் அனைத்து மொழிகளையும் மத்திய ஆட்சி மொழியாக மாற்ற சட்டம் கொண்டுவருவதுதான் சரியான கொள்கையாகும். இதன் மூலம் அனைத்து மாநில மக்களின் ஆதரவோடு மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அந்த வகையிலே இதற்கு சட்டம் கொண்டு வருவதில் காலதாமதமானால், தமிழ் மொழியை மட்டும் முதல் ஆட்சிமொழியாக ஆக்க கேட்பது சாத்தியமானதா என்பதை ஆராயவேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறேன். எனவே, அனைத்து மொழிகளையும் மத்திய ஆட்சி மொழியாக்கக் கூறுவதுதான் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு ஆகும். எங்கும் தமிழ். எதிலும் தமிழ், அனைத்து நிர்வாக நடைமுறைகளிலும் குறிப்பிட்ட கால அளவிற்குள் தமிழ் மொழியை முழு அளவில் பயன்படுத்துவதற்கு முனைப்பான பணி மேற்கொள்ள வேண்டும். இதில் தமிழக அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை ஆகும். இதில் சிறுபான்மை மொழிகளுக்குத் தகுந்த பாதுகாப்புத் தர வேண்டும். குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே மலையாள மொழி அங்கே இருக்கின்ற சிறுபான்மை மொழியாகும். அந்த சிறுபான்மை மொழி என்று சொல்லுகின்ற பகுதியிலே ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருந்தது. இப்போது எங்கே எடுத்துச் சென்றார்கள் என்று கூட தெரியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, அந்த சிறுபான்மை மொழிகளுக்கும் உரிய பாதுகாப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமுதாய நல்லிணக்கம். அனைத்து மதத்தினரும், அனைத்து வகுப்பினரும் மனித நேயத்தோடு வாழ வேண்டுமென்பதில் இரண்டுவிதமான கருத்து இருக்க முடியாது. சமுதாய நல்லிணக்கம்



நிலைபெற வேண்டுமானால் அரசு போதிய கவனம் செலுத்தியாக வேண்டும். எங்கெல்லாம் நல்லிணக்கம் கெடும் வகையில் கலவரம் தோன்றுகிறதோ, அங்கு அரசு முன்கூட்டியே தலையிட்டு கலவரத்தைத் தடுக்க முன் முயற்சி எடுக்க வேண்டும். இதில் காவல் துறையினுடைய தனிக் கவனம் முக்கியமானதாகும். அதோடு ஒவ்வோர் இடத்திலேயும் சமூகப் பெரியவர்களையும், அனைத்துக் கட்சிகளின் முன்னோடிகளையும் கொண்ட அமைதிக் குழுக்களை அமைத்து செயல்பட ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதை அமலாக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இட ஒதுக்கீடு சம்பந்தமாக 69 சதவீதம் இட ஒதுக்கீட்டை வழங்க உச்சநீதிமன்றத்தில் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் மார்க்ஸீய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வற்புறுத்த விரும்புகிறேன். அடுத்து வன்முறைக் குற்றங்கள். தமிழகத்திலே அண்மைக் காலத்திலே சமூக விரோதிகள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. காவல்துறை தன் கடமையைத் தவற விட்டிருக்கிறது. நீதி மன்றத்திற்குள்ளேயே கொலை நடக்கின்ற ஒரு காலம் நம்முடைய தமிழ்நாட்டில் இதுவரையில் இருந்தது இல்லை. குறிப்பாக நாகர்கோவில் நீதிமன்றத்திலே அந்த நீதிபதிகளுக்கு முன்னாலேயே கொலை செய்த ஒரு கடினமான நிகழ்ச்சியை இந்த மாநிலம் சந்தித்திருக்கின்றது. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடவாமல் தடுப்பதற்கு--கிரிமினல் குற்றவாளிகளுக்கு அரசியல் பாதுகாப்புக் கூட உண்டு என்கிற ஒரு ஏற்பாடு அந்தப் பகுதியிலே இருந்திருக்கிறது: எனவே, இந்த வன்முறைக் குற்றங்களைத் தடுப்பதற்கு--உரிய நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகும். இந்நிலையைப் போக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்றும் ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன் . . . .

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை காலை *(28-5-1996) 9.30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1.31* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1996 மே 27

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

63. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

64. 1993-94 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் பத்தாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

65. 1994-95 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் பதினோராவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

66. 1994-95 ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

67. 1993-94 ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

68. 1994-95 ஆம் ஆண்டிற்கான சேரன் பொறியியற் கழகத்தின் இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

69. 1994-95 ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).



1996 மே 27]

70. 1993-94 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

71. 1994-95 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

72. 1994-95 ஆம் ஆண்டிற்கான பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

73. 1993-94 ஆம் ஆண்டிற்கான மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

74. 1994-95 ஆம் ஆண்டிற்கான மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

218922